www.tamilarangam.net

12

# தேடல்




என்றோ ஓர்நாள் எனது பாதம்பட்ட என்சொந்த பூமியை
நான் முத்தமிடுவேன்

தமிழர் வகைதுறைவள நிலையம்

www.tamilarangam.net

# அறிமுகம்



Counterpoint
No; 90, Pirivena Road,
Ratmalana,
Sri Lanka



மூன்றாம் உலகக் கவிதைகள்
அன்னம் புத்தகமையம்
9, சௌராஷ்டிரா சந்து
மேலமாசி வீதி,
மதுரை—1
இந்தியா

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

தேடல் 12 மாசி 1994

# தேடல்

தொடர்புகட்கு
THEDAL
P.O.BOX NO 274
Station 'F'
Toronto,Ont
M4Y 2T7
Canada

Published by
Tamil Resource Centre
566,ParliamentSt.,
TORONTO , Ont.
M4X 1P8
Canada

## யாருக்கு வேண்டும் இவ் இருப்பு

அடக்கி வைப்பது அவனின் ஆணவம்
அடங்கி போவது உன் மடமை
ஆட்சி செய்வது அவன் பெருமை ;என்றால்
ஆளப்படுவது உன் அச்சம்
யாருக்கு வேண்டும் இவ் இருப்பு

சிறையிருப்புக்கு மறுபெயர் திருமணம்
அடிமைக்கு மறுபெயர் மனைவி
வியர்வைக்கு மறுபெயர் கடமை
உன் தாய்மைக்கு மறுபெயர் நியதி ;என்றால்
யாருக்கு வேண்டும் இவ் இருப்பு

கொழுத்தி எரி அடிமை இலக்கியங்களை
தகர்த்து எறி ஆதிக்க சட்டங்களை
உடைத்து போடு உன் கோழமையை
யாருக்கு வேண்டும் இவ் இருப்பு

— பாமதி—

தமிழர் வகைதுறைவள நிலைய வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எலும்புக்கூடுகளே உண்மை கூறவேண்டும்

**தொ**ல்பொருள் ஆராய்ச்சியல்ல இவை உண்மைகளின் தரிசனம் ஆம் !
சூரியகந்தையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் பற்றிய உண்மையை யார்மூலம் அறிவது? யாரிடம் நியாயம் கேட்பது? தொடரும் இப்படுகொலைகள் நிறுத்தப் படுவது எப்போது? எப்படி? பாதிக்கப்பட்டவர்களிற்கு எவ்வகையில் நிவாரணம்?

முன்னர் அரச இராணுவமுகாம் இருந்த பிரதேசத்தில், தற்போதைய அரச ஒளிபரப்பு நிறுவனத்திற்கு அருகாமையில் இவ்வெலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எனவே அரசாங்கமே இதற்கான முழுப்பொறுப்பு ஏன்பது வெளிப்படையான உண்மையாகும். இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் இவற்றுக்கான விளைவுகளை இன்றைய ஆட்சியாளர்கள் பெற்றே தீருவார்கள். வெளிப்படையான இந்த உண்மைகளை மறைப்பதற்கு அரசாங்கம் மிகக்கேவலமான மூடிமறைப்புக்களை செய்ய முயன்று வருகிறது.
ஜே. வி. பி யினரால் 89ல் கொல்லப் பட்டவர்கள் எனவும்,
71ல் சுதந்திரக் கட்சியினரால் கொல்லப்பட்டவர்கள் எனவும் பொய்களைக் கட்டவிழ்த்துவிட்டது.
சர்வதேசமன்னிப்புச்சபை, மனித உரிமைக்குழு ஆகியவற்றின் கோரிக்கையின்படி சுதந்திரமான ஆணைக்குழுவின் விசாரணைகள் கூட எவ்வளவு தூரத்திற்கு உண்மையை வெளிக்கொணரும் என்பது கேள்விக்குறியே!
ஏனெனில் இப்படுகொலை தொடர்பான விசாரணைக்காக சென்று திரும்பிய சட்டத்தரணி மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

பௌத்த சிங்கள இனவாதம் கூறும் சிறீலங்கா அரசு சிங்கள மக்கள் மீதும்தொடர்ந்து காட்டுமிராண்டித் தனத்தை பிரயோகித்துத்தான் தனது உயிர்வாழ்வை நீடிக்கிறது என்பதற்கு இது நல்ல உதாரணம்.
ஏகாதிபத்திய சார்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இனவாத அரசு தன்முதலாளித்துவக் கொள்கையினால் உருவான தேசிய இனப்பிரச்சனையை மட்டுமல்லாது தன் இனத்திற்குள்ளேயே உருவாகும் முரண்பாடுகளையும் படுகொலைகள், அழிப்பு நடவடிக்கைகள் மூலமே தன்னை வாழவைத்துக் கொள்கிறது.

மறுபக்கத்தில் இப்படு கொலைக்கு எதிரான போராட்டத்தைத் தூக்கிப்பிடிக்கும் சுதந்திரக் கட்சியினர்தான் இது போன்ற படுகொலைகளிற்கு தொடக்கவிழாக்காரர்கள். 71ல் ஜே. வி. பி யினரை அடக்குவதாகக் கூறிக் கொண்டு எத்தனையாயிரம் அப்பாவிகளைக் கொன்று குவித்தனர். தமிழ் பேசும் மக்கள் மீதான படுகொலைகள் பற்றி சொல்லத்தேவையில்லை. இவர்களின் இந்தப் போராட்டம் தமது அரசியல் பிழைப்பு வாதத்திற்குத்தான். பதவி இவர்களிடம் மாறினால் போல் இப்படியான படுகொலைகள் நிறுத்தப்படப் போவதில்லை. இதற்காக இவர்களைவிட மற்ற அரசியல் முன்னணிச்சக்திகள் சரியானவை என்று அர்த்தமில்லை. ஜே. வி. பியினர் தமது எதிரி என்று எண்ணியவர்களையும், மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் அழித்தொழிப்பதில் புலிகளுடன் போட்டி போடக்கூடியவர்களே.
ஆகவே பாதிக்கப் பட்டவர்களும், நியாயத்தை நேசிக்கின்ற பத்திரிகைகளும், தொடர்பு சாதனங்களும், பொது மக்களுடன் இணைந்து தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுப்பதே அவசியமானது.
**அழிக்கப்பட்டவர்களின் எலும்புகள் உக்கியிருக்கலாம் ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற உண்மையும் உயிர் மூச்சும் மீண்டும் மீண்டும் வசந்தம் போல் வந்து முழங்குகின்றன.**

**ஆசிரியர் குழு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேடல் 11

# விமர்சனக் கூட்டத்தொகுப்பு

தேடல் 11 ற்கான விமர்சனக் கூட்டம் 31.6.93 அன்று சனிக்கிழமை மாலை நடைபெற்றது. பல தரப்பட்ட திசைகளிலிருந்தும் விமர்சனங்கள் முன் வைக்கப் பட்டன. விமர்சனங்களின் சாராம்சத்தை முதலில் கூறிவிட்டு பின்னர் அவை பற்றிய எமது நிலையினைக் கூறுகிறோம்.

முதலில் தேடல் 10 பற்றிய அமைப்புமுறை, வடிவம், அழகியல்த்தன்மை என்பன பற்றியும் அதிலுள்ள குறைபாடுகள் குறித்தும் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் சிறிதும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று கூறப்பட்டது. ஆசிரியர் குழு "தேடல்" வேலைகளை விரிவு படுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டதுடன்.. பலரையும் அதற்காக சரியாக அணுகவில்லை என்றும் சொல்லப்பட்டது.

தேடல் வெளியிடப்படும் கால இடைவெளி மிகவும் பெரிதாக உள்ளதால் தேடலின் மூலம் மக்களிடம் செல்லக்கூடிய கருத்துக்கள் பலமடையாது எனவும் சொல்லப்பட்டது. செந்தாமரையின் விமர்சனத்திற்கான பதில் பற்றி கூறுகையில் சில சொற் பிரயோகங்கள் கடுமையான போக்காக உள்ளதாகவும், தனிமனிதனிற்கான பதில் விமர்சனமாக முன்வைக்கப் பட்டதாகவும் சொல்லப்பட்டது.இந்த விடயங்களில் பேனாவினால் பயங்கரவாதம் புரிவது தேடலிற்கு ஆரோக்கியமற்றது எனவும் சொல்லப்பட்டது.

கிட்டு தொடர்பான கட்டுரையில் கிட்டு கோவிலில் உள்ள படத்தை பிரசுரித்ததன் நோக்கம்""தேசிய விடுதலைப் போராளி மதநம்பிக்கையுடையவராக இருக்கக்கூடாது என்று நீங்கள் கருதுவதைப் போல உள்ளது எனவும் வாதம் முன்வைக்கப் பட்டது.

இன்னுமொரு திசையில் கிட்டு போன்று பல இயக்கங்களின் முன்னணித் தலைவர்கள் ஜனநாயக மறுப்பிற்குக் காரணகர்த்தாக்களாக உள்ளபோது கிட்டுவை மாத்திரம் எப்படிக் குறிப்பிட முடியும் என்றும் கூறப்பட்டது.

தமிழ்நாடு மாக்சிய லெனினியக் கட்சியின் மகாநாட்டு அறிக்கையை வெளியிட்டதன் நோக்கம் என்ன? இதனை வெளியிட்டதன் மூலம் பெருமையடைகிறீர்களா? என்றும் வினாவப் பட்டது.

வோட்டலோ பல்கலைக் கழகம் நடத்திய "கலைய முதம்" தொடர்பான விமர்சனத்தை ஏற்றுக் கொண்டாலும் விமர்சனத்தில் கூறப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு தமிழர் வகை துறை வளநிலையத்தினர் எந்த அளவிற்கு உழைத்தார்கள்? என்ற கேள்வியும் எழுந்தது.

தமிழர்வகைதுறைவளநிலையத்தின்,தேடலின் அடிப்படை நோக்கம் என்ன? உங்களது இருப்பைத் தக்கவைத்து கொள்வதற்காகவா தேடலை வெளியிடுகின்றீர்கள் போன்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டது. கனடாவில் நடை பெறும் அடக்கு முறைகள், பிரச்சனைகள் பற்றி தேடலில் குறிப்பிடும்படி எதுவுமில்லையென்றும் சொல்லப்பட்டன.

மேற்சொல்லப்பட்ட பிரதான விமர்சனங்களிற்கான எமது நிலைப்பாட்டினைக் கூட்டத்தில் கூறினோம். அவை பற்றிச் சுருக்கமாகத் தருகிறோம்.

விமர்சனங்களிற்குப் பதிலளித்த போது சில ஆரோக்கியமற்ற பாணியில் சில உரையாடல்கள் அமைந்தன. முதலில் அதற்காக எமது பக்கத்தில் உள்ள குறைபாட்டிற்கு மன்னிப்புக் கோருகிறோம். தொடரும் காலங்களில் இச்சூழ்நிலையினைத் தவிர்ப்போம்.அமைப்பு, அழகியல்த் தன்மை போன்றவற்றிலுள்ள குறைபாடு என்பது எமது புது கம்பியூட்டர் அனுபவத்துடன் சார்ந்துள்ளது என்பது உண்மைதான். தேடல் 10ல் இருந்த குறைபாடுகள் சில நிவர்த்தி செய்ய முயற்சித்தோம். ஆனால் தேடல் 10ல் இருந்த சரியான அம்சங்கள் சில தேடல் 11ல் தவறவிடப்பட்டன. அடுத்த முறை இக் குறைபாடுகள் கவனிக்கப் படுவதுடன், தேடல் சஞ்சிகையின் வேலைகளிற்காக ஊக்கமுள்ள பலரிடம் விரிவு படுத்தலையும் செய்கிறோம்.

தேடல் வெளியிடப்படும் கால இடைவெளி என்பது முக்கிய பிரச்சனைதான். ஆனால் நிலையத்தின் அமைப்புமுறையும் அதில் உள்ள சில நடைமுறைச் சிக்கல்களை நிவர்த்தி செய்தலும் என்பது பாரிய பிரச்சனையாகும். இதன் அர்த்தம் ஆசிரியர் குழுவிடம் குறைபாடுகளே இல்லை என்று ஆகாது. ஆனாலும் இப் பிரச்சனையுடன் சார்ந்துள்ளது தேடலின்

தொடர்ச்சி பின்அட்டை உள்பக்கம்..........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆணாதிக்கம் சீரழிந்த சமூகஅமைப்பு இவற்றுக்கெதிராக போராடாத வரையில்



லோரினா கல்லோ (Lorena Gallo) என்ற அமெரிக்கப் பெண்மணி தனது கணவனின் பாலியல் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவனின் ஆணுறுப்பை வெட்டி வீசினாள். ஜனவரி 21. 94 அன்று 9பெண்களையும் 3ஆண்களையும் கொண்ட யூரிகள்சபை அவளை குற்றமற்றவளாகவும், 45 நாட்கள் உளவியல் மருத்துவம் பெற வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியது. வட அமெரிக்காவின் பத்திரிகைகள் 'தொலைக் காட்சி போன்றவற்றில் முன்னணிச் செய்தியைப் பிடித்த இச்சம்பவம் பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. இதுதொடர்பாக பெண்விடுதலை இயக்கங்கள் தங்கள் சமரை தொடுத்தன சட்டத்தை பணிந்துபோ என்றும் தீர்ப்புக்கு எதிரான பதில் நடவடிக்கைகட்கு தாம்தயாராக இருப்பதாயும் அவை முழங்கின வட அமெரிக்காவில் பெண்விடுதலை இயக்கங்களின் ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட கடந்தகாலப் போராட்டங்களின் புறவிளைவே இவளின் விடுதலைக்கு ஒரு காரணமாகவும் அமைந்தது. இது தொடர்பாக தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்மக்களுக்கு என்ன கருத்தாக்கத்தை எடுத்து சென்றன குறிப்பாக தமிழ்ப்பெண்களுக்கு இந்தப் பெண்மணியின் செயலை எவ்வளவு தூரம்எடுத்துச் சென்றன? என்ற கேள்வி எழவே செய்கின்றது.

1992ல் மார்ச் பனியுறையும் ஓர் நாள் தனது இரண்டு பெண் குழந்தைகளையும் கொன்று தானும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருந்தார் அருந்ததி என்ற இலங்கை தமிழ்பெண் ஆனால் அவர் எதிர்பாராதவகையில் அவரின்குழந்தைகள் இறந்தும் அவரின் உயிரைமருத்துவம் மீட்டளித்தது அதே வேளை சட்டம் அவள் வாழ்வு வீட்டிலா? ஜெயிலிலா? என்ற கேள்வியையும் கூடவே அவளிடம் விட்டுச்சென்றது.

அருந்ததி இலங்கையில்ப் பிறந்த சராசரிப்பெண். நிலப்பிரபுத்துவத்தின் சீரழிந்த நியதிகளேயே சமூகம் இவளுக்கு அளித்தது. முடிவு! சீதனம், நிச்சயதார்த்தம், கலியாணம் குடும்ப அமைப்பும், நாட்டுப்புறச்சூழ்நிலையும் அருந்ததியை கனடாவரை கொண்டுவந்து சேர்த்தது. ஒரு பின்தங்கிய நாட்டின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றுமுழுதாக அன்னியப்பட்ட சூழ்நிலையில், ஓர் வளர்ச்சியடைந்த யந்திரமயமாக்கப் வாழ்க்கை முறையினையுடைய இந் நாட்டில் தொடங்கப்பட்டது அவரின் வாழ்க்கை அதாவது ஒவ்வொரு மனிதர்களும் தனித்தனி மனிதர்களே என்றும், கூட்டு வாழ்வுக்கு எந்தவித சந்தர்ப்பமும் இல்லாது தனித்தனி அறைகளில் முடங்கியிருக்கும் குடும்ப வாழ்வின் கொடூரமே இப்பெண்மணியின புறச்சூழலாகவும் அமைந்தது. அங்கே வேட்டி கட்டிய வடிவத்தில் இருந்த ஆணாதிக்கம் இங்கேயும் எவ்வித மாற்ற மில்லாமல் மேலைத்தேயக்கலாச்சாரங்களினூ டாக அவள் வீட்டில் கொலுவீற்றிருந்தது கணவனால் ஏற்படுத்தப்பட்ட தனிமை கணவனாலும் அவனது உறவினர்களினாலும் தொடர்ந்து சீதனக்கொடுமைக்கு உட்படு த்தப்பட்டமை கணவனினால் ஏற்பட்ட உடல், உளரீதியான பாதிப்புகள், தனிமை, சமூகத்தின் ஆதாரமின்மை இப்பெண்ணிற்கு புறநிலைகளாக அமைந்தன அருந்ததியின் தங்கையின் வாக்குமூலம் அருந்ததி சிகிச்சை பெற்றசான்றுகள் எல்லாம்சட்டத்தின் காலுக்கடியில் போடப்பட்டன மூன்றாம் உலக அகதியின் சமூக, மனோவியல்ப் பாதிப்புகளை கறுத்தஉடைக்குள் இருந்த வெள்ளை சட்டத்தால் எவ்வளவு தூரம் விளங்கிக்கொள்ள முடிந்தது என்பதற்கு அருந்ததிக்கு கிடைத்த தீர்ப்பு சான்று பகர்கின்றது அதேவேளை அருந்ததி தொடர்பாக தமிழ்மக்களின் சமூகபொறுப்புணர்வு எந்தவகையில் இருந்தது என்ற கேள்வியும் எழவே செய்கிறது. "திருடாதிருடா" கொட்டகை நிறைந்தகாட்சி தமிழ்மக்கள் கலாரசனையுடன் வடஅமெரிக்காவில் வாழ்வதற்கு சான்று. சூரன்போர் வந்தது கோயில்வாசலிற்கு செல்லவே அரைமணித்தியாலம் எடுத்ததாம் ஆன்மீகம் வீதிவரை வழிந்தோடியது .தளபதி கிட்டு மரணம் கனடாவில் தமிழ்கடைகள் எல்லாம் பூட்டப்பட்டன மக்கள் மண்ணுக்கு கொடுத்தமரியாதை. ஆனால்! அருந்ததி தொடர்பாக இச்சமூகம் எதனை வெளிக்கொணர்ந்தது?



மறுபக்கம் பத்திரிகைகள் வெளிவந்தன, இப் பெண்ணின் நிலைக்கு அடிப்படைக் காரணிகள்என்ன? எமது சமூகக்கட்டுமானம் எவ்வகையில் ஆணாதிக்கத்தன்மைகளைக் கொண்டு ள்ளது? என்பதுபோன்ற அவசியமான, சமூகத்திற்குப் பிரயோசனமான விடயங்களையா ஆராய்ந்தன! அருந்ததியின் கதை நல்லதங்காளின் கதையா? இல்லை எம்சகோதரிக்கு நிகழ்ந்த சோகமா? என்பது போன்ற உழுத்துப்போன விவாதங்களை

பின் பக்கம் தொடர்ச்சி..........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# சிகரட்

ரொரண்டோவை பொருட்காட்சிச் சாலையாக மாற்றும் முயற்சியில் கட்டிடங்களிலிருந்து நட்சத்திரங்களாக மின்னிக் கொண்டிருந்த வெளிச்சத்தை வெறித்தபடி சந்தடியற்ற நடைபாதையில் கண்ணைக் கசக்கி கொட்டாவி விட்டபடி நடந்து கொண்டிருந்தவன் திடீரென ஞாபகம் வந்தது போல் ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் கையை விட்டுத் தேடினான். பின்னர் வந்த பாதையால் நடந்து சென்று செவன் லெவன் கடைக்குள் நுழைந்து
"ரொத்மன் கிங்சைஸ் பிளீஸ்" என்றான். 6 டொலர்களை அன்பளிப்புச் செய்துவிட்டு தனது அபிமான சிகரெட் பெட்டியை லோக்கலா, ஒறிஜினலா என்று பார்த்தான். பெட்டியின் மேல் பொன்னிற எழுத்தக்களால் பொறிக்கப்பட்டிருந்த "புகைத்தலினால் புற்றுநோய் உண்டாகும்" என்ற அறிவித்தலைப் பார்த்து வழமைபோல் புன்னகைத்து கொண்டான். இவ்வறிவித்தலை நிச்சயமாக புகைப் பிடிப்பவர்களுக்காக போட்டிருக்க மாட்டார்கள். இவ்வறிவித்தல் புகைப்பிடிப்பவர்களிக்கான எச்சரிக்கை எனில் சிகரெட் பெட்டி வாங்கும் ஒருவன் மீது ஏன் தற்கொலை முயற்சி வழக்குத் தொடரவில்லை? இந்த அரசாங்கம் அல்லது இவ்வறிவித்தலுடன் விற்கும் கடைக்காரன் மீது ஏன் கொலை முயற்சி வழக்கு தொ—டரக்கூடாது. எல்லாமே அல்லது ...... தலையை ஒருதடவை அசைத்து சிந்திப்பதை நிறுத்தி சிகரெட் ஒன்றை எடுத்துப் பத்தியவாறு அண்ணாந்து வெளுக்கத் தயாரான வானத்தைப் பார்த்தபடி நடக்கத் தொடங்கினான்.

இன்று ஞாயிற்றுக் கிழமை sub way 9 மணிக்குப் பிறகுதான் ஓடத் தொடங்கும். ஏழு மணிக்கு முன்னர் இவன் பேக்கரியில் நிற்கவேண்டும். streetcarபிரயாணத்தை நினைத்தாலே இவனுக்குள் பயங்கர சலிப்பு வந்துவிடும். மற்ற நாட்களில் தவிர்த்துக் கொள்ளும் இந்தப் பிரயாணம் ஞாயிற்றுக் கிழமைகளில் தவிர்க்க முடியாதபடி ஆகிவிடுகிறது. மனத்தில் ஏற்பட்ட சலிப்பும் சிகரெட் புகை தந்த கிறக்கமும் சேர சோர்ந்து போய் லைட்போஸ்ட்டில் சாய்ந்தவாறு street car வரப் போகும் திசையைப் பார்த்தவாறு புகையை வளையவிட்டான்.

"கான் ஐ ஹாவ் ஏ சிகரெட்"
அமைதியைக் கலைத்து அருகில் ஒலித்த பெண்குரல் கேட்டுத் திரும்பிய இவன் நரம்புகள் முறுக்கேற முகத்தில் கோபத்தை வெளிப்படுத்தினான்.
"பிளீஸ்"
கோப நரம்புகள் பட்டென்று தளர்ந்துவிட சிகரெட் பெட்டியை எடுத்து நீட்டினான்.
"தாங் யூ"
"இற்ஸ் ஓக்கே"
"லைட் பிளீஸ்"
லைட்டரை எடுத்துப் பற்றவைக்கும் போது இவள் எந்த நாட்டிலிருந்து வந்திருப்பாள் என்று யோசித்தான்.
"கான் ஐ ஹாவ் ஏ சிகரெட் ரூ பிளீஸ்"
"ஹீ இஸ் மை பிரண்ட்" என்று அவனையும் இவனையும் பார்த்துச் சிரித்தாள்.
""இற்ஸ் ஓக்கே""என்ற படி அவளின் நண்பனிடமும் சிகரெட் பெட்டியை எடுத்து நீட்டினான். மீண்டும் street car வரப் போகும் திசையை நோக்கி பார்வையைச் செலுத்தினான்.
""ஏ மான் யூ ஹாவ் சிகரெட்"" குரலுக்குரியவன் யாரென்று பார்க்காமலே சிகரெட் பெட்டியை எடுத்து நீட்டினான்.
""யூ ஆர் மை பாடி""
""தாங்ஸ் பாடி""
""இற்ஸ் ஓக்கே""இனிமேல் றோட்டில் நின்று சிகரெட் பெட்டியை எடுக்கவே கூடாது என்று நினைத்துக் கொண்டான்.
""பாடி ஆர் யூ கோயிங் ரூ வேர்க்""
""யேஸ்""சிற் இந்த street car வந்து துலையாதா?

எரிச்சல் அடைந்த படி மெதுவாக அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கியவன் அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கி நடைபாதைக் கடையில் உள்ள கண்ணாடியின் ஊடாக கடைக்குள் இருந்த மங்கல் ஒளியினூடே எதனையோ தேட முற்பட்டான். இவனுக்கு அருகாமையில் வந்து நின்று தானும் கண்ணாடியின் ஊடாகப் பார்த்தபடி இந்த நாட்டின் சொந்தக்காரன் மெதுவான குரலில்
""யூ ஹாவ் ஏ டொலர். ஐ ஆம் புறம் பிரிட்டிஸ் கொலம்பியா. ஐ லொஸ்ட் மை வொலட்.. ஐ ஹாவ்ரு கோ பாக். கான் யூ கெல்ப் மி""
""சொறி ஐ டோன்ற் ஹாவ் ஏ டொலர்""
நிலவிய மொனத்தை உடைத்துக் கொண்டு மறுபடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒலித்தது அவன் குரல்

""யூ ஹாவ் ஏ சிகரெட்""
சலித்த படி சிகரெட் பாக்கெட்டை வெளியே எடுத்தான் ""ரேக்"" என்ற படி.

தார் ரோடு அதிரும் வண்ணம் சத்தம் எழுப்பிய படி அசைந்து வந்த **street car**ன் கதவு திறந்ததும் முதல் ஆளாக உள்ளே பாய்ந்து சென்று கடைசிச் சீட்டில் ஒரு சலிப்பான பிரயாணத்திற்குத் தயாராய் அமர்ந்து கொண்டான்.

வேலையுடன் யந்திரமாய் ஒன்றிப் போனவன் "ஹாய்குமார்" என்ற அனிதாவின் குரல் கேட்டதும்தான் நேரத்தைப் பார்த்தான்.

""ஜஸ்ட் ஏ செக்கன்"" என்றபடி ஓடிச் சென்று ஜக்கெட்டினுள் இருந்த சிகரெட் பெட்டியை எடுத்துக் கொண்டு பின் பகுதியிலிருந்த மரத்தடியை நோக்கிச் சென்றான்.

""டு யூ ஹாவ் யுவர் லஞ்""
"நொட் யெற்"
"வை"
"ஐ டிட் நொட் பீல் ஹங்ரி"
"வட் ஹப்பிண்"
""நத்திங்""
""ஆ யூ கோயிங் ரு ஸ்மோக்""
ஆச்சரியத்துடன் ""யெஸ் ரேக் இற்""என்றபடி பெட்டியை எடுத்து நீட்டினான்.
""நோ தாங்ஸ், ஐ ஆம் கோயிங் ரு குயிற் ஸ்மோக்கிங்""

""வட் ஹாப்பிண்?""ஏமாற்றமொன்று இவனது முகத்தில் எதிரொலித்தது.
""மை போய் பிரண்ட் டசின்ற் லைக் இற்""
""வீ ஹாட் ஏ பைட் லாஸ்ற் நைற் எபவுட் ஸ்மோக்கிங்""
"" இவ் யு கான் குயிற் ஸ்மோக்கிங், தற்ஸ் குட்"" என்று கூறிக்கொண்டே சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்தபடி மரத்தடியின் கீழ் பெஞ்சில் அமர்ந்தான். இவனுக்கு அருகில் வந்தமர்ந்த அனிதா மௌனமாகயிருந்தாள்.

ருமேனிய நாட்டுப் பெண்ணான அனா சிறு வயதிலேயே நாட்டை விட்டு வெளியேறி ஜெர்மனியில் நீண்ட காலம் வசித்து பின் கனடாவில் குடியேறியிருந்தாள். கனடாவில் தனிமையில் வசித்து வரும் இவனுக்கு அனாவின் மென்மையான நட்பு இந்த வேலையில் இவன் நீண்ட நாள் நிலைத்திருப்பதற்கு ஓர் காரணம். பல வேளைகளில் யந்திரத்தனமான வேலையினால் சலிப்படைந்து மேலதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொள்ளும் வேளையில் அனாவுடனான மென்மையான உரையாடல்கள் இவனை அமைதி கொள்ளப் பண்ணியதுண்டு.

வேலையில்ச் சேர்ந்ததிலிருந்து முகப் பரிச்சயம் இருந்தாலும்கூட ""கான் ஐ ஹாவ் எ சிகரெட்"" என்றுதான் அறிமுக உரையாடல் ஆரம்பித்தது. இப்படியாக ஆரம்பித்த நட்பு அனா அனிதாவாக மாறுமளவிற்கு முன்னேறியது. எத்தனையோ தடவை எரிச்சலப் பட்டு சிகரெட்டை விட விரும்பிய இவன் இந்த முடிவினால் அனாவின் நட்பு முறிவடைந்து விடுமோ என்று பல தடவை தயங்கிய துண்டு. ஆனால் அன்றிலிருந்து இன்று வரை வேலைக்குப் புறப்படும் போது சிகரெட் உள்ளதா என்பதை நிச்சயப் படுத்திக்கொண்டுதான் வேலைக்குப் புறப்படுவான்.

அனிதாவின் மென்மையான ஏக்கம் நிறைந்த அந்த இதயம் பல நாட்கள் இவனைக் குளப்பியதுண்டு. சிறு வயதில் அவர்களுக்கு இருந்த பெரிய வீடும் கை நிறையக் காசுடன் தனது நண்பர்களுடன் உல்லாசமாக செலவு செய்த நாட்களும் அடிக்கடி அவள் நினைவு கூரும் விடயங்கள். ருமேனியாவை விட்டு அவர்கள் குடும்பம் துரத்தப்பட்டதும் ஜெர்மனியில் தாய் சிரமப் பட்டு சிகை அலங்காரசாலை ஒன்றை நடத்தி வருவதும் தந்தை வருத்தத்தில் இறந்து போனதும் படிப்பை தொடர முடியாத அனிதா வேலை வாய்ப்பு தேடி கனடா வந்ததும் இவனுக்கு அத்துப்படியான விபரங்கள்.

விரலில் அடுக்கியிருக்கும் வைர மோதிரங்களைக் காட்டுவதற்கென்றே **this, not this one** என்று மாற்றி மாற்றி விரலை நீட்டும் யூவிஸ் பெண்களின் நீட்டிய விரலை "மளுக்" என்று முறிக்க வேண்டும் என்று கோபப் பட்ட அனிதாவை பார்த்து இவனது அனுதாபமான ஏக்கம் மேலும் கூடியது. "கம்யூனிஸ்ட்டுக்கள் எங்கள் வீட்டைப் பறித்தவர்கள் கம்யூனிசம் விடிவு என்று என்னிடம் கதைக்காதே" என்று சீறும் அனிதா சிகரெட்டுடன் அடிக்கடி சமாதானம் அடைவதுண்டு. சிகரெட் பிரேக்கிற்கு அப்பாற்பட்டு இவர்கள் உறவை விஸ்தரிக்க அனிதா பல தடவை முயன்றதுண்டு. ஆனால் இவனால் இவனது வட்டத்தை விட்டு வெளியேற முடியவில்லை. அதனால் அனிதாவின் நட்பும் சிகரெட்டும் தொடர்ந்தும் வழமை போலவே இருந்து வந்தது.

இவனது ஆலோசனைகள் பல தடவை அவளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுண்டு மாலை நேரங்களில் பாடசாலைக்கு செல்ல ஆரம்பித்தாள் படிப்பதற்கு பணஉதவி செய்ய இவன் முன்வந்தபோது இவர்களது மட்டுப்படுத்தப் பட்ட உறவை காரணம் காட்டி ஏற்றுக்கொள்ள மறுத்தாள். அதன் விளைவு இவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புகைக்கும் சிகரெட்டின் எண்ணிக்கைதான் கூடியது.

அனிதா தன்னை வேலையிலிருந்து அழைத்துச் செல்ல வந்திருந்த அவளது புதிய நண்பனை இவன் வேலை செய்யும் இடத்திற்கு அழைத்து வந்து இவனுக்கு அறிமுகப் படுத்திய போது"சீ யூ லேற்றர்" என்ற அவனது அலட்சியத்தினால் இவன் சிறுமைப்பட்டு அனிதாவை நோக்கிய போது அவளது ஏக்கம் இவனை தலை குனிய வைத்தது. அதன் பின்னர் வந்த நாட்களில் அனிதாவும் அவளது புதிய நண்பனான ஈரானியனும் எங்கு சென்றார்கள், என்ன சாப்பிட்டார்கள் அவனது இயல்புகள் என்ன என்பது பற்றி கதைப்பதாகவே பெரும்பாலும் இருந்தது.

இன்று அனிதாவின் சிகரட்டை விடுதல் பற்றிய அறிவிப்பு ஆச்சரியத்தை பெரிதும் அளிக்காவிட்டாலும் ஏதோ நெஞ்சில் கனம் ஏறியது போலிருந்தது.
""குமார் கிவ் மி எ தம்""என்று கையை நீட்டினாள் அனிதா.
""நோ இவ் யு வோன்ட் ரு குயிற் ஸ்மோக்கிங் பொக்கெற் எபெவுட் த தம்""
""பிளீஸ் குமார் யஸ்ட் ஐ வோன்ட் ரு செயார் வித் யு""
சிகரெட்டை நீட்டிய இவன் அமைதியாக அவளைப் பார்த்தவாறிருந்தான். சிறிது நேரத்தின் பின்னர்
""ஐ ஹாவ் ரு பினிஸ்ற் மை வேக் சீ யு லேற்றர்"" என்றவாறு புறப்பட்டான்.

அன்று ஏனோ வழமை போல் இவனால் வேலை பார்க்க முடியவில்லை. இவன் சிகரெட் பிடிப்பதனால் அனிதாவும் பாதிக்கப் படுகிறாளோ என்று எண்ணிக் கொண்டிருந்த இவன் அதன் பின்னர் அன்று முழுவதும் சிகரெட் பற்றவேயில்லை. இரவு வீடு வந்ததும் சலிப்புடன் சிகரெட் பாக்கட்டை துக்கி மேசையில்ப் போட்டான்.

காலையில் வழமைபோல் எழுந்த இவன் பரபரப்புடன் சிகரெட்பாக்கெட்டைத் தேடினான். கிடைத்த சிகரெட் பெட்டி வெறும் பெட்டியாக இருந்தது. எரிச்சலுடன் நித்திரையால் எழும்பாத ரூம் மேட்டைத் போய்த் தட்டி எழுப்பி
""சிகரெட் எங்கே"" என்று கேட்டான்.
""இரவு சுரேஸ்ஆக்கள் வந்தவங்கள் அவங்கள் எடுத்துப் பத்தினவங்களாக்கும்"" என்றான்.
இவன் ஏதோ வெறிபிடித்தவன் மாதிரி கத்தத் தொடங்கினான்.
""நான் ஒண்டும் மற்ற ஆக்களுக்காக சிகரெட் வாங்கேல்லை ஆராவது சிகரெட் தேவையெண்டா வாங்கிப் பத்துறதுதானே?""
நித்திரை கலையாத ரூம் மேட் எழும்பி சேட்டைப் போட்டபடி சொன்னான்
""உனக்கு சிகரெட் தானே வேணும் நான் வேண்டிக்கொண்டு வாறன்""
""இல்லை எனக்கு நான் வேண்டின சிகரெட்தான் வேணும்"" என்றபடி கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான்.
""ஏன் வேலைக்குப் போகேல்லையே?"" என்ற ரூம்மேட்டின் கேள்விக்கு
""இல்லை வேலையை விட்டிட்டன்"" பதிலில் ஏதோ திருப்தி வந்தது இவனுக்கு.

—தயாளன்—

அறிவித்தல்

**இராஜினி— றிச்சட்**
**நினைவுக் கலந்துரையாடல்**

இடம் —தேசகம் படிப்போர் தளம்

காலம் —05.03.1994
(சனிக்கிழமை)

நேரம் .—5:30 மாலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அன்புள்ள நண்பர்களுக்கு.........................**

உங்கள் தேடல் 10 முதல் முறையாக எனது பார்வைக்குக் கிட்டியது. அதுவும் தை மாதம் இலங்கையில் நின்றபோது உங்கள் நண்பர் ஒருவரிடம் பெற்றேன். உங்களது தலையங்கத்தில் முஸ்லிம் மக்கள் மீதான பாசிசப் புலிகளின் படுகொலைபற்றிய செய்தியும். அது பற்றி. கந்தசட்டிக் கவசம் பாடும் தமிழ் மக்கள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையென்று கவலையும் தெரிவித்துள்ளீர்கள். இந்த நிலை இன்று மாத்திரமல்ல அன்று அனுராதபுரப் படுகொலை நடந்த போது கூட இதே நிலைமைதான். (பாடசாலை சென்ற வெள்ளைச்சீருடை அணிந்த பாலகர்கள் கூட புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பரிதாபச் சம்பவம்) படித்த, அகிம்சையைப் போற்றுகின்ற யாழ்ப்பாணத்துத் தலை நரைத்த காந்தீய வாதிகள் கூட அது சரியான செயல் (புலிகளின்) என வக்காலத்து வாங்கியது இன்றும் என் மனத்தில் நிழலாடுகிறது. தமிழ் பேசும் மக்களின் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையான ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் தான் சாத்தியமாகும்.வடக்குக் கிழக்கு இணைப்பு(பாரம்பரியப் பிரதேசம்) என்பது இந்த ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. நிலப்பிரச்சனைதான் எமது போராட்டத்தின் அடிப்படை. அதிலும் முக்கியமாக கிழக்கு மாகாண நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். விஜயவீரா கூட தனது அதிகாரத்தைக் கைப்பற்றும் தனது இனவாதக் கோசங்களில் ஒன்றாக தமிழ்ப் பிரதேசங்களின் சிங்களக் குடியேற்றத்தைப் பின் வருமாறு கையாழுகின்றார். அவர் தனது புதிய Lectureல் ""எதிர்கால இலங்கையின் பொருளாதார இருப்பு என்பது வடக்குக் கிழக்கு குடியேற்ற நிலங்களில் தங்கியுள்ளது"" (ஆதாரம் The lost revolution) இது பற்றி அழிவு அரசியல் நடத்தும் பாசிசப் புலிகளுக்கோ (தரகு முதலாளித்துவ, ஏகாதிபத்திய அடிவருடிகளான) அவர்களின் வாலைப்பிடித்துக்கொண்டு இன்று கைவிட இயலாது தவிக்கின்ற தமிழ் மக்களுக்கோ புரிந்து கொள்ளஇயலாது.

முஸ்லிம் மக்கள் பற்றிய கட்டுரையும் தேசிய இனப் பிரச்சனை பற்றிய கட்டுரையும் இன்னும் ஆழமாகத் தெளிவாக வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். சிங்கள உழைக்கும் மக்களின் போராட்டத்துடன் தமிழ் மக்களின் போராட்டம் இணைக்கப் பட வேண்டும் என்பதில் இரு கருத்தில்லை. ஆனாலும் இன்று அது சாத்தியமில்லை. எனவே தமிழ் பேசும் மக்களின் போராட்டம் இனியாவது சரியான பாதையில் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதில் ஒரு ஸ்தாபன அமைப்பை உருவாக்குவதில் ஏற்படும் காலதாமதம் சில வேளை ஏகாதிபத்தியத்தின் நலனைப் பேணி ஒரு புதிய இஸ்ரேல் தமிழீழத்தில் உருவாகினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

சினிமா பற்றிய விமர்சனம் மிக முக்கியமானது. ஏனெனில் இன்று வெளிநாடுகளில் சினிமாவையே வாழ்க்கையாகப் பார்க்கின்ற ஒரு Anty social இளைஞர் கூட்டம் (விரக்தியடைந்த) உருவாகியுள்ளது. ரோஜா பற்றிய விமர்சனம். அரசியல் ரீதியாகச் சரியாக இருந்தாலும் அதிலுள்ள அழகியல் சிறப்பம்சங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

**தோழமையுடன்**
**க. தவபாலன் (மாஸ்ரர்)**

**Italy**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

***அன்புள்ள தேடல் நண்பர்களுக்கு!***

கடந்த 31. 10. 93 ஞாயிறு வீரகேசரி பேப்பரில் "வடக்கில் வாழவிடுங்கள்" என்ற தலைப்பில் முன்பக்கத்தில் ஒரு செய்தியுள்ளது. அச்செய்தியை நீங்கள் படித்து அதிலிருந்த விடயத்தை சற்று ஆழமாகச் சிந்தித்தால் முழுமையையும் புரிந்து கொள்வீர்கள். அப்படியிருந்தும் மேலும் சிலவற்றை நான் கூறுகிறேன். 30. 10. 90 ல் சகல முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டார்கள் சகல முஸ்லிம்களினதும் சகல சொத்துக்களும் புலிகளால் அவ்வேளையில் பறிமுதல் செய்யப்பட்டன. அங்கிருந்து வெளியேற்றப்பட்ட முழு முஸ்லிம்களும் லொறிகளில் அடையப்பட்டு வவுனியா வந்து சேர ஏழு நாட்கள் பிடித்தது. கடும் மழையும் பாதை சீரில்லாததும்தான் காரணம். வடக்குமுஸ்லீம்களில் முக்கால்வாசிப்பேர்கள்(யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நாச்சிக்குடா, கிளிநொச்சி, முல்லைத்தீவு. தண்ணீரூற்று, முத்தையன்கட்டு,) மற்றும் மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் முழுப்பேரும் புத்தளம் மாவட்டம் பரவலாகவும், சிலாபம், நீர்கொழும்பு, போன்ற இடங்களில் அகதிமுகாங்களில் வாழ்கிறார்கள். அகதிமுகாங்களில் 10அடி அகலம் 15அடி நீளமான கொட்டில்களும், 50 குடும்பங்களுக்கு 1 கக்கூஸ், 1 கிணறு என்று பாவிக்கப்படுகிறது. 5 பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு 1200 பெறுமதியான உணவுச்சாமான்கள் கொடுக்கப்படுகின்றன. அந்தஉணவுச்சாமான்கள்தான் ஓரளவு அவ்வகதிகளின் உயிரைக்காப்பாற்றுகிறது. 100 பேரில் 90 பேர்களுக்கு தொழில் இல்லை. அதிலும் முக்கியமானது 100 பேர்களில் 90 பேர்களிற்கு சிங்களம் தெரியாது. அதிகமான அகதிகள் உப்பளத்திற்கு அருகில் வாழ்கிறார்கள். உப்பளத்தில் ஊர்த் தொழிலாளிகள் நிறைவாக உள்ளார்கள். அடுத்து உப்பளத்திற்கு அருகில் விவசாயமிலை அங்கு தினசரி வேலை இருக்காது. சீசனுக்கு வேலை கிடைக்கும். இதனால் அகதிகள் தினசரி கஸ்டப்படுகிறார்கள். 50 வயதை கடந்த பல அகதிகள் மரணமடைந்து விட்டார்கள். காரணம் போசாக்கின்மையே பல அகதிகள் இருதய நோய்க்காளாகியுள்ளார்கள்.

கயிறு எனநம்பி பாம்பைப்பிடித்தவன்போல் L. T. T. E யை நம்பி தாம் சகல பொருட்களையும் தமது வாழ்க்கையையும் இழந்து விட்டதாகவே முஸ்லிம் அகதிகள் ஏங்குகிறார்கள். அகதி முகாம் மக்களுக்கு தேவையான இருதய நோய், நீரிழிவு நோய், சொறி, சிரங்கு, கக்கூஸ் பத்து, அடித்தொண்டையில் அரிப்பு, போன்ற நோய்களிற்கான் தடுப்பு மருந்துகள் தேவையாயுள்ளன. பணக்கஸ்டம், உடுபுடவைக்கஸ்டம், என்பன சொல்லமுடியாதவை. பலருக்கு மாற்றியுடுக்க உடைகள் போதாது. குளிருக்கு போர்வைகள் இல்லை.

அகதிகளின் பிள்ளைகளுக்கு பின்னேரப் பாடசாலை அதிகமான பிள்ளைகள் கதிரை, மேசைத் தட்டுப்பாட்டால் நிலத்தில் இருந்தே படிக்கிறார்கள். இதனால் அவர்களது வெள்ளை யூனிபோம் தினசரி அழுக்கடைகிறது. மாற்று யூனிபோம் இல்லாத பிள்ளைகள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாடசாலை செல்கிறார்கள். இவ்வாறு பல தொல்லைகளை அகதிகள் அனுபவிக்கிறார்கள். கால்வாசி அகதிகள் சில நகரங்களில் வாடகைவீடுகளில் தமது உறவினர்கள், நண்பர்களுடன் சீவிக்கிறார்கள். இவர்களில் அதிகமானோர் வியாபாரிகள், சிறுவியாபாரிகள், புத்திஜீவிகள், சிறுகைவினைஞர்கள், போன்றோர்களே. சிறு வியாபாரிகள் போன்றோரிடம் வியாபாரம் செய்யும் ஆவலிருந்தும் பணமின்றிக் கஸ்டப்படுகிறார்கள். அவர்களது எதிர்காலம் எவ்வித வழியுமின்றியேயுள்ளது. காரணம் இவர்களுக்கு கைத்தொழில் எதுவும் தெரியாது. கூலிவிவசாயியாக வேலை செய்ய உடல் பழக்கப்பட்டதாக இல்லை. இதுபோன்ற கஸ்டங்களை தொடர்ந்து மூன்று வருடங்களிற்கு மேலாக முஸ்லீம் அகதிகள் அனுபவித்துவருவதை பற்றி எல்லோருமே அறிந்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்

— இக்பால் —



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியம் பற்றிய ஒரு சிறு விசாரணை

**கலைகளில் இலக்கியம் அதிகமான கவனத்தைப் பெறுவது ஏன்?**

மனிதன் சிந்திக்கின்றான்,பகுத்தறிகின்றான்,வாழ்வுக்குத் தேவையான பொருட்களை உருவாக்குகின்றான்.மற்ற மனிதர்களோடு தொடர்பு கொள்கின்றான்.இவை அனைத்துக்கும் மனிதன் பயன்படுத்தும் ஊடகம் மொழி. அதுவே இலக்கியத்தின் ஊடகமாய் இயல்பாய் அமைந்து விடுகிறது. ஓவியம்,சிற்பம், கட்டிடம்,போன்ற கலைகள் மனித மொழி என்ற ஊடகத்தினுடாக நடப்பதில்லை. சிற்பத்திற்கு கல்லும், வளைவுகளுமே மொழி,ஓவியத்திற்கு வண்ணமும், கோடுகளும் மொழி, ஆனால் மனிதன் எந்த மொழியினுடாக வாழ்வை நடத்துகிறானோ, அதுவே இலக்கியம் செயற்படும் மொழியாகவும் அமைந்துள்ளது. அந்தக் கலையின் அமைப்பு அப்படி.
இந்த இயல்புத் தன்மை காரணமாக இலக்கியம், இசை ஆகியவை அதிக ஈர்ப்புத்தன்மை, அதிக பரப்புக் கொண்டிருக்கின்றன.

**இலக்கியத்திலும் கவிதை சிறப்பான இடம்பெறக் காரணம் என்ன?**

இலக்கிய வகைகளான கதை,நாவல்,கட்டுரை போன்றவை வாசிப்புத்தன்மை கொண்டவை.வாசிப்பின் வழி மனித சிந்தனை பதிவு செய்து கொள்கிறது. எழுத்து — சொல்லாட்சி — மொழியாட்சி என்ற அடிப்படைக் கூறுகள் இவைகளிலும் உண்டு. ஆனால் கவிதையில் இக்கூறுகள் ஓர் ஓசை ஒழுங்கை ஏற்படுத்துகின்றன. படிப்பதற்கேயுரியதாக உள்ள எழுத்து, சொல், மொழியாட்சி இங்கே கேட்பதற்கும் உரியதாக மாறுகிறது. வாசிப்பு மனத்திற்குள்ளேயோ, வெளியேயோ எப்படி நடந்தாலும் ஓசை, ஒழுங்கும், கேட்பதற்கு உரியதாகவும் உள்ளது. இந்த இரு அம்சங்கள்,மற்ற வகைகளை விட கவிதையை ஒரு கை தூக்கலாக வைக்கிறது. மரபுக் கவிதைகளில் அப்படியொரு "சொக்குப் பொடி." (சொக்க வைப்பது) இருக்கலாம். புதுக் கவிதைகளில் இந்த ஓசை ஒழுங்கு "ரிதம்" உண்டா என்ற கேள்வி எழலாம்.

ஒரு மொழியாக்கக் கவிதை இது.

**எப்பொழுதெல்லாம் எங்கள்**
**மேலாடை கந்தலாகிறதோ,**
**அப்பொழுதெல்லாம் நீங்கள்**
**ஓடிவந்து முழங்குகிறீர்கள்....**
**"இது இனியும் நீடிக்கக் கூடாது".......**
**நல்லது, துண்டுடுப்பு சரிதான்,**
**ஆனால் முழு ஆடை எங்கே?**

**எப்பொழுதெல்லாம் பசித் தீயால்**
**கருகிக் கரைகிறோமோ**
**அப்பொழுதெல்லாம் ஓடிவந்து**
**முழங்குகிறீர்கள்......**
**"இது இனியும் நீடிக்கக்கூடாது"...........**
**நல்லது, பருக்கைகள் சரிதான்,**
**ஆனால் முழுச்சாப்பாடு எங்கே?.**

ஒரு நல்ல கவிதை அது நடந்து போகிற போக்கிலேயே ஓசையை உண்டாக்கிக் கொண்டு செல்கின்றது. பதிகின்ற காலடி தாள லயத்தைப் பரப்பிக் கொண்டு போகிறது.

**கவிதைகள் ஊற்றுப்பெருக்கு மாதிரி வந்து கொண்டிருக்கின்றனவே, இதுதான் காரணமோ?**

மொழிக்கு அச்சு வடிவம், முதலாளித்துவ வளர்ச்சியின் வழி உருவானது. அச்சு, முதலாளித்துவ உற்பத்தி சம்பந்தப்பட்டது. முதலாளித்துவ உற்பத்தி எப்பொழுதும் பொதுவாய் பொருட்களைப் பெற்றுத்தள்ளும். அச்சுக்கும் அதேவழியில் நிறையத் தேவைப் படுகிறது. அத்தோடு தன்னை வெளிப்படுத்தும் ஆர்வமும் சேர்வதால் அபரிதமான உற்பத்தி நடக்கிறது. தன்னை முன்னிறுத்தும் ஆசையும், கையாள எளியவடிவமும் வியாபாரமுறையும் இணைந்து ஏகமாய்ப் பெருக்கெடுத்து விட்டது. இந்த ஆசை முற்போக்கு இதழ்களிலும் தன் முகம் பார்க்கும் ஆசையாய் வளர்ந்திருக்கிறது. எளிய வடிவம், இவ்வகைக் கவிதைகளுக்குச் செலவிடுகிற சிந்தனை, உழைப்பு, நேரம் ஆகியவையும் குறைவு. இன்று ராணி, தேவி, குமுதம் போன்ற இதழ்களிலும் தினமலர், தினகரன் போன்ற பத்திரிகைகள் வெளியிடும் வார இதழ்களிலும் புதுக் கவிதைகள் அபரிதமாய் உற்பத்தி செய்யப் படுகின்றன. சிறுபத்திரிகைகளிலும் கூட கவிதைப் பக்கங்களே ஆக்கிரமித்துள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறு பத்திரிகைச்சூழலில்தான் சிறப்பான கவிதைகள் உருவாவதாகச் சொல்லப் படுகிறதே?**

இசை, நடனம், இலக்கியம் போன்றவை பாரம்பரிய செவ்வியற்கலைகளாகக் கூறப்படுகின்றன. இந்த செவ்வியற் கலைகள், புனிதம் மிக்கவை, உயர் மக்களுக்குரியவை என்றும் கூறப்பட்டது. சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்களுக்கு இவை புரியாதவை, விளங்கிக்கொள்ள முடியாதவை என்று விலக்கி வைக்கப்பட்டது. இந்த உயர்குடிக் கலாச்சாரம் அல்லது சிறுபான்மைக் கலாச்சாரம் பாதுகாப்பு வளையங்களுக்குள் வைக்கப்பட்டு, இதெல்லாம் நமக்கு இயலாது என்ற அன்னியப் பட்டதன்மையை மனோரீதியாக மக்களுக்கு ஏற்படுத்தியது.

இதே சூழல் இன்றும் தொடர்கிறது. கலை இலக்கியத்தின் ஜனநாயகத் தன்மையை மறுத்து ஒரு சிலருக்காக மட்டும் ஒதுக்கிவிடும் மனோ பாவம் சிறு பத்திரிகைச் சூழலாக வெளிப்படுகிறது.

"இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடைவெளி இருக்க வேண்டும். ஒன்றோடொன்று இணைவது இலக்கியத்திற்கு நல்லதல்ல" என்று க. நா. சு சொல்கிற போது, வெளிப்படும் உயர் வர்க்க மனோபாவத்தைக்கவனிக்க வேண்டும்.

""இதழியல் துறையில் இவை சிறுபத்திரிகைகள் எனவும், சிறு சூழல் எனவும் வெளியிடப்பட்டன. "சிறு" என்ற இந்தச் சொல்லாக்கம் பிரக்ஞை பூர்வமாக இவர்கள் தங்களை மேலானவர்களாக ஒதுக்கிக் கொண்டதன் வெளிப்பாடே எனலாம். இந்தச்சிறுபான்மைக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவே, சிறு பத்திரிகைகள் மிகவும் பிரவச வேதனைப்பட்டு தருகிற பெரும்பாலான கவிதைகள அமைகின்றன.அவைகளின் கலை நேர்த்தி என்பதும்,இந்த மனோபாவத்தோடு இணைந்த கலை நேர்த்தியே.

**அப்படியானால், இவை எதிர்க் கலாச்சார விளைவுகளை ஏற்படுத்துகின்றனவா?** பெரும்பான்மை மக்களின் பாரம்பரியமான விழுமியங்களுக்கு எதிரானவைகளை எதிர்க் கலாச்சாரம் என்கிறோம்.

சிறு பான்மைக் கலாச்சாரத்தின் விளைவுகளாய்,இரு தீங்குகளைப் பற்றி, ரேய்மாண்ட் வில்லியம்ஸ் கூறுகிறார்.

""முதலாவது இந்த "உயர்ந்தோரின்" கறைகள், இவர்களால் பாதிக்கப்பட்ட கலாச்சாரப் பாரம்பரியத்தில் பதிகின்றன. பொதுப்பரம்பரைச் சொத்தாய் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டியவைகளை இவ்வாறு உயர்ந்த சிறுபான்மையினர் கையகப் படுத்திக் கொள்வதன் விளைவாக பெரும்பான்மையோர் அன்னியப் பட்டுப் போகிற நிலை ஏற்படுகிறது. "உங்களுக்குப் புரியாது" என அவர்களும் "எங்களுக்குப் புரியாது" என வெகு மக்களும் பிரிந்து போகிற நிலை ஏற்படுகிறது. இந்த இடைவெளியில் — இவ்வாறுகலாச்சாரப் பாரம்பரியத்திலிருந்து ஒதுங்கிப் போனவர்கள் அல்லது ஒதுக்கப்பட்டவர்களிடம் செயற்கைக் கலாச்சாரம் வேரூருன்றுகிறது. செயற்கைக் கலாச்சாரம் கிளையோடும் விழுதோடும் நச்சு மரமாகிப் படரத் தேவையான இடத்தை, இந்தச் சிறுசூழல் மனோபாவமே உருவாக்கித் தந்தது"" (செயற்கைக் கலாச்சாரம் — இறக்குமதி செய்யப்பட்டு இங்கேயுள்ள பிற்போக்குக் கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்து உருவான கலாச்சாரம்)

இதற்கு மிக வெளிப்படையான சாட்சிகள் நமக்குண்டு.

**இசை — கர்நாடக இசை**
**நாட்டியம் — பரத நாட்டியம்**
**ஓவியம் — நவீன ஓவியம்**
**இலக்கியம் — சிறு இதழ்கள்**

இவை மக்களை அண்டவே கூடாது என்று இன்றும் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள். இது என்ன எழவுக்கு என்று மக்களும் ஒதுங்கி நிற்க,உருவான இடைவெளியில் இசையில் ராக்இசை ,நாட்டியத்தில் பிரேக் டான்ஸ், ரிக்காட் டான்ஸ், ஓவியத்தில் ஜெயராஜ் ஓவியங்கள், இலக்கியத்தில் மாத நாவல்களும் இடம் பிடித்துக் கொண்டன.

இவ்வாறு கவிதையில் சிறுசூழல் மேல் நிலை மனோபாவம் எதிர்க்கலாச்சார அரிப்பூசிகளுக்கு இடம் தந்தன.

**இங்கே மனஓசைக் கவிதைகளின் பங்களிப்பு என்ன?**

இலக்கியத்தில் உயர் குடிமக்கள் உருவாக்கிய இடைவெளி, எதிர்க்கலாச்சாரத்தின் பதுங்கு குழிகளாக ஆகிவிட்டன. கருத்து நிலையும் கலைநிலையும் சரியாய்ச் சேர்மானம் ஆன இலக்கியத்தால், அந்த இடைவெளியை நிரப்பவேண்டியது நம் கடமை. கவிதை ஒன்றினால் மட்டுமே அது ஆகிவிடாது. அனைத்துத் துறைகளிலும் இந்த வேலை செய்யப்பட வேண்டும். இந்த மாதிரி வேலைக்கு கவிதைத் துறையில் சிறு முயற்சி இது.
வாழ்வின் முகத்தில் கவிந்திருக்கும் இருளைத்

துடைத்தெறியும் உன்னத நோக்கம் இதன் வெளிப்பாடு. படைப்பாளிகளில் சிலர் கவிதையை மட்டுமல்ல போராட்ட வாழ்க்கையையும் சேர்த்து ஏந்தியவர்கள். இலக்கியப் பயிற்சி படைப்பாற்றல், இவைகளில் வளர்முகத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிற்பவர்கள். கலைநிலையில் சிகரங்களைத் தொட்டு விட்டோம் என்று மார்தட்டிக் கொள்ள முன்வரவில்லை. அதே நேரத்தில், சிறுபான்மைக் கலாச்சாரத்திற்கும், எதிர்க் கலாச்சாரத்திற்கும் ஆதரவாய் ஒரு சொல்லும் இல்லை.

குறைந்திருக்கிற கலைநயத்தை ,பயிற்சியை அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்

**""அந்தப் பேனா —**
**உணர்ச்சியோ,விருப்பமோ**
**ஆற்றலோ**
**அதற்கு எதுவும் கிடையாது.**
**எழுதுகிறவனின் கையிலேதான்**
**இருக்கிறது —**
**அந்தக் கடல்களும், மேகங்களும்**
**நெருப்பும் புகையும் எல்லாம்""**

கடல்களையும்,மேகங்களையும்,நெருப்பையும்,புகையையும் கலை வண்ணத்தோடு தீட்டும்போது, அவை அவைகளை விட வலிமையானதாய் ஆகி விடுகின்றன. எந்தப் பேனாவிலிருந்து இந்தக்கவிதைகள் உதிர்ந்தனவோ,அந்தப் பேனாவுக்குரிய சிலர் திசைமாறிப் போயிருக்கலாம்,ஆனால் சமுதாயத்திற்காக கையளிப்புச் செய்யப்பட்ட கவிதைகள்,பிறகு திசை மாறுவதில்லை.

**""இரவிலே வாங்கினோம்,**
**இன்னும் விடியவே இல்லை""**

ஆனால் —

சரியான கருத்து நிலை,பொருத்தமான கலைநிலையோடு வெளியே வந்துவிட்ட பிறகு, அது சமுதாயத்தின் பொதுச் சொத்தாக மாறிவிடுகிறது. மக்கள் அதைத் தங்கள சொத்தாக எடுத்து பாதுகாத்து வைத்துக் கொள்வார்கள்.

ஒருமுறை விதைக்கப்பட்ட இலக்கியம், தலைமுறை தலைமுறைக்கும் உணர்ச்சி விளைச்சலைத் தந்து கொண்டிருக்கும்.

""மன ஓசைக் கவிதைகள்""
மக்கள் கலாச்சாரக் கழகம்
தமிழ் நாடு

*இலக்கியத்தைப் பற்றி பலவகைப்பட்ட தர்க்கங்கள் வெளியாகின்றன. ""சூரியச் சுடர்கள்"" என்னும் கவிதைத் தொகுப்பில் வெளியாகிய முன்னுரை கவனிக்கத்தக்கதாக அமைந்திருந்தது. அதனை இங்கே மறுபிரசுரம் செய்கின்றோம். ஆ —ர் குழு*

மனஓசைக் கவிதைத் தொகுதியிலிருந்து

**எத்தனை நாள் வாழும்**
**துப்பாக்கியும், சவுக்கும்?**

**உடைக்கப் படுவது**
**உரிமை கேட்கும் ஊர்வலம் மட்டுமா?**
**தர மறுக்கும் தலைகளும்தான்.**
**நெறிக்கப் படுவது**
**கண்டனம் செய்த குரல்வளை மட்டுமா?**
**முஷ்டி உயர்த்திய கரங்களும்தான்.**

**இரத்த எண்ணை வற்றினாலும் சரி**
**உயிர்த் திரிகள் தீர்ந்தாலும் சரி**
**புரட்சிச்சுடர்கள்**
**ஒருபோதும் புகைந்து போவதில்லை**
**வெண்ணிற வேள்களால்**
**போராட்டப் பாதைகளைப் பின்தள்ள முடியாது.**
**சட்டச் சாவிகளும்**
**இளநாயக உதடுகளைப் பூட்டிவிட முடியாது.**
**ஒருநாள்**
**சமையலறைத் தொழுவத்து சங்கிலிக் கட்டுகள்**
**திமிறி வரும்**
**புழுவாய்ப் போன ஊமையிதழ்கள்**
**பேசும் உரிமை கேட்கும்.**
**ஆபாசப் படுத்தப் பட்ட மனித வாழ்வுகள்**
**உடுக்கும் உரிமை கேட்கும்**
**ஏனெனில்**
**நரம்புகள் உரிகின்ற நார்களுமில்லை**
**உணர்வுகள் உதிர்கின்ற பூக்களுமில்லை,**
**கையிலிட்ட விலங்கு கழுத்துக்கு மாறுமுன்**
**சர்வதேச மொழியாய் சிறைஓலம் ஆகுமுன்**
**இரும்புக் கம்பிகளை இறுக்கிப் பிழிவோம்.**

**நீண்டநாள் வாழாது, துப்பாக்கியும் சவுக்கும்**
**துப்பாக்கிகள் துப்பாக்கிகளைத் துளைக்கும்**

**சவுக்குகள் சவுக்குகளை துவைக்கும்**
**வைரங்களும் அப்படித்தான்**
**வர்க்கங்களும் அப்படித்தான்**

www.tamilarangam.net

சிறுகதை

# புலன்கள்



அப்புவுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. கூடத்தினுள் உள்ள யன்னலினூடு வானத்தைப் பார்த்தார். மலைகள் போல் குவிந்திருந்த முகில்கள் கீழே கலைந்து அலங்கோலமாகக் காட்சியளித்தது.

horn சத்தம் கேட்கவே ஆச்சி அவரை வரும்படி துரிதப் படுத்தினாள். இருவரும் காரில் மகனுடன் வைத்திய சாலைக்குச் சென்ற போது ஒருவருடன் ஒருவர் அதிகம் பேசவில்லை. அந்தி வானத்தில் இருள் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது.

வைத்திய சாலைக் கூடத்தில் நடந்த போது அப்புவுக்கு யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நினைப்பே வந்தது. என்ன அழுத்தமான தரைகள்! சுத்தமான விரிப்புகள்! அமைதியாகக் காட்சியளித்த அந்த கூடத்தினூடாக வார்ட்டை அடைந்த போது மகன் ""உள்ளே வரவேண்டாம்"" எனக் கையைக் காட்டினான்.. ஒரு தள்ளுவண்டியில் சாப்பாட்டைத் தள்ளியவாறு செல்லும் தாதியும்மற்றொரு தள்ளு வண்டியில் விரிப்புக்களைத் தள்ளியவாறு செல்லும் தாதியுமாக....

வெளியே இரையும் அம்புலன்ஸின் சத்தத்தையும் மீறி ஆச்சியின் சத்தம்""உள்ளே வரட்டாம்"" என்று கேட்டது. ஆச்சியின் பின்னால் உள்ளே சென்றவரின் பார்வை தடுப்பாக தொங்கிய திரைச்சீலைமீது பட்டது. அதன் ஒரு பக்கத்தில் வயது வந்த ஒருவர் கால் ஒன்று மேலே தொங்கவிடக் காட்சியளித்தார்.
மறு பக்கத்தில்..........

அவரது பேரன் தலையில்க் கட்டுக்களுடன் ... மூக்கினுள் ஒரு குளாய் சென்றது. கையில் ஒரு பக்கத்தில் ஊசி குத்தப் பட்டு அதனூடாக ஓர் திரவம் உள்ளே சென்று கொண்டிருந்தது.

"குளுக்கோசாக இருக்கும்" என மனதில் நினைத்துக் கொண்டார்.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் பல தடவைகள் வைத்திய சாலைக்கு வந்து போய்விட்டார். முதலில் காரில் வந்தவர் பின்னர் பஸ்ஸில் வரவும் தெரிந்து கொண்டார். அந்த வைத்திய சாலைக்குள் ஒவ்வொரு தடவை வரும் போதும் மீண்டும் மீண்டும் வர வேண்டும் போலிருந்தது அப்புவுக்கு. அவ்வளவு அமைதியான சூழ்நிலை.
ஆனால் அப்புவின் மனம் அலைபாய்ந்தது.
இன்றுவரைக்கும் பேரனுக்கு என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியாது. வீட்டில் மகனிடம் கேட்டபோது அப்படி இப்படி என்றுதான் கூறினான். மற்றவர்கள் கூறியதைக் கேட்ட போதும் அதுவும் அப்படி இப்படியாகத்தானிருந்தது. பேரனிடம் எதுவும் கேட்க வேண்டாம் என மகன் உத்தரவு.
அதோடு ஆச்சியும் சத்தம் போட்டவா ""ஒண்டும் கேளாதையுங்கோ. ஏதாவது கேட்டால் எடுத்துக் கொடுங்கோ அதைவிட ஒண்டும் கதைக்கவேண்டாம்"" என்று. இதற்கிடையில் கோட்டுச் சூட்டுப் போட்ட சிலர் டொக்டருடன் வந்து கதைச்சுப் போட்டுப் போனதையும் அவர் கண்டவர். "என்னவாய் இருக்கும்" மண்டையைப் போட்டுப் பிய்த்தும் எதுவும் புரியவில்லை.

நான்காவது நாள் மாலை பேரனை வீட்டை கொண்டு வந்து விட்டார்கள். கூடத்தில் அருகேயிருந்த கட்டிலில் பேரனைக் கிடத்தி விட்டார்கள்— — —

இப்போது பேரன் எழுந்து வீட்டினுள் நடமாடுவான். கழியறைக்குச் செல்வான். மீண்டும் படுத்து விடுவான். அடிக்கடி தலையிடிக்குது எண்டு மாத்திரம் சொல்லுவான். தலைக்கட்டு இன்னமும் கழற்றப் படவில்லை.
அடுத்த நாட்காலை அப்பு பேரனின் கட்டிலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அருகிலிருந்தவர்
""அப்பு என் மோனே! ஆரேன் அடிச்சுப் போட்டான்களே? அல்லது கார் ஏதாவது அடிச்சுப்போட்டு ஓடிப் போட்டாங்களே. பேப்பரிலை உன்ரை படம் எல்லாம் கிடக்கிது. ஆரோ வெள்ளக்காரர் அடிச்சுப் போட்டாங்களாம். உண்மையே மோனே"

பேரனுக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரிய வில்லை.பேரனின் நினைவுகளில் இருந்து அவரது நினைவுகள் அடிபட்டுத் திரும்பியதில் இருந்தது ஏன்? என்ற கேள்வியே— — —

அந்த பாக்டரியின் முன்னால் உள்ள சிறு வீதி மற்றொரு கிளை வீதியைச் சந்திக்கிறது. அக்கிளை வீதி பிரதான வீதியில் மிதக்கிறது. பிரதான வீதியில் இறங்கி நடந்து செல்லும் போது பாதையோரம் நிரம்பி வழியும் புற்கள் பச்சைக் கம்பளமாக பரந்து கிடந்தது. பாக்டரியின் முன்னால் அடர்த்தியாகக் காட்சியளிக்கும் மரங்கள் பெயர்ப் பலகையை மறைத்து உள்ளே வேலை செய்பவர்களுக்காக குரல் கொடுப்பன போல் காட்சியளித்தன. பிரதான வீதி கிளை வீதி யாவும் தொழிற்சாலைகளின் அணிவகுப்புப் போல் காணப் பட்டன. அந்தப் பகுதியில் அடிக்கடி வந்து போகும் கான்டீன் வான்கள் சிற்றுண்டிகளுடன் சேர்த்து வாசனையையும் சுமந்து வந்தன. பாக்டரியின் வாசலின் ஒரு புறம் வாகனங்களுக்கான "பாக்கிங்" மறுபக்கத்தில் மரங்களும் பலகைகளும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. உள்ளே சென்றால் வாசலில் "பஞ் குளக்" தவறவிடக்கூாது என்பதற்காக வாசலிலேயே வைத்திருந்தார்கள். அதனைத் தாண்டி இடது புறம் சென்றால் உடுப்பு மாத்துவதற்கும் பொருட்கள் வைப்பதற்குமாக சிறு சிறு அலுமாரிகள். மேலே சென்றால் இயந்திரங்கள், மனிதர்கள் , மரங்கள் நிரம்பி வளியும் இரு பெரிய கூடங்கள். உயரமான கூரையின் சற்றுக் கீழே சுவரில் சிறு யன்னல்கள். ஒவ்வொரு பக்கமும் இரண்டு இருந்தன. இவற்றால் ஒளி உள்ளே வராது ஆனால் ஒளி கசியும். சிறைக்கூடத்தினுள் இருப்பது போன்ற உணர்வே ஏற்படுத்தும். வெளியே மழை குளிர் ஏன் குண்டு வெடித்தால்க்கூட எதுவுமே கேட்காது. பிரதான வாயிலருகில் கூலரும் தண்ணீர் குடிக்க பில்ற்றரும் இருந்தன. இவ்வாயிலூடாகத்தான் பெரிய பெரிய கென்டெயினர்கள் வந்து மூலப்பொருட்களை இறக்கி முடிவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும்.

அந்த பாக்டறியில் அவனுடன் சேர்த்து மொத்தமாக இருபது பேர் வேலை செய்கின்றார்கள். அவன் பாக்டறியில் சேர்ந்த போதுதான் கப்பலில் தமிழர்கள் நியுபவுண்லாந்துக் கரையை அடைந்திருந்தார்கள். பலர் அவனிடம் "நீயும் கப்பலில் வந்தனியா" எனக் கேட்டார்கள். அப்பொழுதெல்லாம் மைக் ஒருவன்தான் அவர்களுடன் சண்டை போட்டவன்.
""இந்த நாட்டிற்கு அதிக ஆட்கள் தேவை எனவே அவர்கள் வருவதில் என்ன தவறு .அங்கே இருக்க முடியாமல்த்தானே இங்கே வருகிறார்கள்"" என்றெல்லாம் அவன் அவர்களுக்குக் கூறியிருக்கிறான்.

இது நடந்து ஒரு வருடத்தின் பின்னர் ரொறண்டோஸ்ராறின் நடுப்பக்கத்தில் வெளியாகியிருந்த இலங்கையரின் படத்தை வைத்து அவர்களுடன் மீண்டும் சண்டை போட்டுள்ளான். வந்ததுதான் வந்தார்கள் எவ்வளவு அமைதியாக, வெல்பெயார்ஒன்றும் எடுக்காமல் என்னமாதிரி வேலை செய்து கொண்டு வாழ்கிறார்கள். பிராங் அடிக்கடி கூறுவான் "ஆசியர்கள்தான் போமன் சொல்வதைத் தட்டாமல் வேலை செய்பவர்கள். சனிக்கிழமை,ஞாயிற்றுக்கிழமை எப்பொழுதும் வேலைக்கு வருவார்கள்" என......

காலங்கள் உருண்டோடியது. புதிய சுதந்திர வரத்தக வலையம் உருவாகியது. அந்த பாக்டரியில் வேலை செய்பவர்களில் மைக்கும், பிராங்கும்தான் அதனை ஆதரித்து வாதம் செய்வார்கள். அரைகுறை ஆங்கிலத்தில் இவன் கூறுவதை அவர்கள் அவ்வளவாக சட்டை செய்வதில்லை.

ஒருநாள் போமன் வந்து ஒவ்வொருவரும் எவ்வளவு வேலை செய்கிறார்கள், ஒரு நாளைக்கு எத்தனை பலகை வெட்டுகிறார்கள் என்ற விபரப்பட்டியலைத் தயாரித்தான். ஒரு நிமிடத்திற்கு ஒரு கதவு கட்டாயம் வெட்டவேண்டும் என்ற நிபந்தனையும் இடப்பட்டது. இவன் உட்பட இந்தியர்கள் எவரும் மறுப்பேதும் கூறவில்லை. மைக், பிராங் போன்றோர் வார்த்தைகளிலிருந்து தூஷண வார்த்தைகள் வெளிவந்த போதும் குறிப்பிட்ட பலகை—ளை வெட்டத் தவறவில்லை. இவனுடன் மைக், பிராங் உட்பட அனைவரும் நட்பாகத்தான் இது வரையும் இருந்தார்கள். அங்கு வேலை செய்யும் இருபது பேர்களில் பத்துக்கு மேற்பட்டோர் இந்தியர்களே.

அவன் எப்பொழுதும் நேரத்துக்குச் சென்று விடுவான். ஓவர்டைம் போமன் கேட்டால் செய்வதுண்டு. அன்றும் அதேபோன்று ஓவர்ரைம் செய்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான்.

இலைத்துளிர் விட்ட மரங்களைப் பார்த்தவாறே பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்தான். தூரத்தே சில பறவைகள் மரத்திலிருந்து கூட்டமாகப் பறந்தன. பலசரக்குக் கடையின் முன்னால் புறாக்கள் சில நடந்த படி உணவைக் கொத்தியவண்ணமிருந்தன. காலடிச்சத்தம் கேட்டு பறந்து சென்று மீண்டும் திரும்பி வந்தன. அவற்றைத் தாண்டி பாடசாலைக்கு முன்னாலுள்ள வீதியைக் கடக்க முற்பட்ட போது அவன் மைக்கைக் கண்டான். அவனுடன் கதைக்க முற்பட்டபோதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனுக்கு அந்த அடி விழுந்தது.
ஏன் மைக் உன்னை அடித்தான்?.......

அப்புவின் கேள்விக்கும் பேரனால் விடை கொடுக்க முடிய வில்லை.

ஒரு நாள் போமனுடன் வந்த பாக்டரி முதலாளி ""இப்பொழுதுள்ள நிலைமையில் பாக்டரியை நடத்துவதே கடினமாகவுள்ளது. வியாபாரமும் குறைவு விலையும் குறைக்க வேண்டுமாம். என்ற படியால் நாங்களும்" கோஸ்ட் கட்டிங் " செய்கிறோம். மேலதிக விபரங்களை அடுத்த செவ்வாய்க் கிழமை போமன் அறிவிப்பார்"" என்று கூறினார்.

அடுத்த நிமிடமே ஹெலன் கத்தினான் ""உங்களாலதான். நீங்கள் இஞ்ச கனடா வந்தபடியால் எங்களுக்கு வேலையில்லாமல் போகப் போகுது""

அந்தக் கிழமை முழுவதும் ஹெலன் ஒரே கத்துத்தான். ஒரு தடவை இவன் அவனிடம் ""ஐரோப்பா உட்பட பல நாடுகளில் இருந்தும் பலர் கனடா வந்துள்ளனர் ஏன் ........"" இவன் கேள்வியை முடிக்கு முன்பே அவன் தூஷண வார்த்தைகளால் ""you are f....black"" என்றான்.

அங்கே நீண்ட காலமாக வேலை செய்யும் பொன்னம்பலத்தார் அவனிடம் வந்து ""கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. இவங்களுக்கு எங்களைக் கண்டால் கொஞ்சமும் பிடிக்காது"" என்று அட்வைஸ் செய்து விட்டுப் போனார். அவர்கூட பல தடவைகள் குமுறியுள்ளார். அவருக்குப் பிறகுதான் பிராங் அந்தப் பக்டறியில் இணைந்தவன். இவர்தான் அவனுக்குப் பயிற்சிகூட அளித்தவர். அப்படியிருக்க பழைய போமன் போனவுடன் இவனைப் போமனாக்கிவிட்டார்கள். இப்படிப் பல சம்பவங்கள் நிறத்தால் பிரிக்கப் பட்டுள்ளதை அவன் அறிவான். புதிதாக ஒரு மெசின் வந்தால் அதில் வேலைக்குவிடுவது ஒரு வெள்ளையனைத்தான். மதியம் சாப்பாட்டு வேளையில் கூட இவனுக்கு அருகில் இன்று வரையில் ஒரு வெள்ளையனும் இருந்து சாப்பிட்டதில்லை. ஆனால் போமாலிற்றி வார்த்தைகள் மாத்திரம் அடிக்கடி வந்து போகும். அடுத்த செவ்வாய் வரும் வரையில் எல்லோருக்கும் ஒரு யுத்தத்தைக் கடப்பது போலத்தான்.

அறிவித்த பெயர்களில் ஹெலன், மைக் போன்றோரின் பெயர்களும் அடங்கியிருந்தன. மைக் அந்த பாக்டரியை விட்டு வெளியேறும் போது இவனை ஒரு பார்வை பார்துவிட்டு வெளியேறினான். அந்தப் பார்வை இப்போதும் இவனுக்கு கண்ணுக்குள் நிற்கிறது.

அதன் கொடூரம் மெல்ல மெல்ல அவன் தலையினுள் பரவத் தொடங்கியது.

— ரதன் —

## முடிவாய் நான். . . .

கொக்கி நுனியில்
அகப்பட்ட மீனாய்
உறுதி இழந்த
அறுபட்ட மனிதனாய்
பாரமிழந்த
சொந்த மண்ணே
தாங்காத நான
அகதி அவலமாய்......

மகனை மறந்த
மாங்காய்த் தீவில்
இரண்டாவதாய்....
தினம் தினம்
பேசா மௌனமாய்
பன்னீர்ச் செம்பின்
ஓட்டைகள் போல
மூடியும் திறந்தும்......
மனிதன்

சூழ்ந்து போன
நெருப்புக் காட்டில்
வாழ்வதாகி

பயந்து பயந்து
பயமே வாழ்வாகி...

மரத்துப் போன
கைகள் உரக்கும்.
ஒரு நாளாவது....
உறுதி போலாய்
வாழ்ந்து முறையால்
மண்ணில் இருந்து
சாவது கண்டு
நிம்மதி தாழ்ந்த

நிலையினை விட்ட
ஒரு மனிதனாய்
ஒரே ஒரு மனிதனாய்
நானாகிலும்
வீரமாய்
எதிரியை விரட்டி
பின்னர்
எனது மண்ணில்..

இளைய அப்துல்லா,
இலங்கை

www.tamilarangam.net

# நிறவாதத்திற்கு எதிராக அணிதிரள்வோம்

***கனடாவில் தொடரும் நிறவாதத் தாக்குதல்களும் அதற்கு இலங்கையரும் விதிவிலக்கல்ல என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் ரொறொன்ரோவில் நடைபெற்ற நிறவாதத் தாக்குதல்கள் அமைந்தன. பல்லின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களின் கூட்டமைப் பொன்று உருவாக்கப்பட்டு நிறவாதத்திற்கு எதிரான வேலைகள் முன்னெடுக்கப் பட்டன. இவை தொடர்பாக இக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சாமினி பீரிஸ் 23. 8. 93 அன்று தேடலினால் பேட்டி காணப்பட்டார்.***

**தேடல்— ரொரன்டோவில் நிறவாதத்திற்கு எதிராக பல்வேறு அமைப்புக்கள் இருந்தபோதும் அண்மைக்காலங்களில் உருவாக்கப் பட்ட ரொரண்டோ நிறவாதத்திற்கு எதிரான கூட்டமைப்பின் (T.C.A.R) தோற்றத்தின் காரணம் என்ன?**

***சாமினி—*** கூட்டமைப்புத் தொடங்குவதற்கு பல காரணங்கள் உண்டு.

ANTY RACIST ACTION (நிறவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள்) என்னும் அமைப்பு பெரும்பாலும் வெள்ளை நிற இளைஞர்களைக் கொண்ட அமைப்பாகும். ஆடி மாத ஆரம்பப் பகுதியில் இலங்கையர்களுக்கு எதிராக நடந்த நிறவெறித் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த அமைப்பினால் ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஊர்வலத்தின் இறுதியில் நிறவாதத் தாக்குதல்களிற்கு காரண கர்த்தாக்களான ""பாரம்பரிய முன்னணியினர்"" என்னும் அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரின் வீடு தாக்கப்பட்டது. இவ்வன்முறையை ஊர்வலத்தில் கலந்து கொண்ட இலங்கையர்கள் வரவேற்காத போதிலும் அச்சந்தர்ப்பத்தில் அவ்விடத்தை விட்டு வெளியேற முடிய வில்லை. காரணம் ஊர்வலத்தின் வெளிப்பகுதியில் சூழ நின்ற ""பாரம்பரிய முன்னணியினர்"" ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை புகைப்படக் கருவி, வீடியோ மூலம் படம் பிடித்ததால் ஏற்படும் பின்விளைவுகளை எண்ணி தம்மை தனிமைப் படுத்தி அடையாளம் காட்ட விரும்பாததால் வெளியேறவில்லை. ஆகவே அச்சூழ்நிலையில் சிக்குப் பட்டவர்களாகவே இலங்கையர்கள் காணப்பட்டனர். எனவேதான் எமது சமூகத்தின் முழுமையான பலத்தையும், எதிர்ப்பையும் அமைதியான முறையில் நிரூபிப்பதற்கான சந்தர்ப்பமும் ஒழுங்கமைப்பும் தேவைப்பட்டது. முதலில் செய்யப் பட்ட ஊர்வலம் வன்முறையில் முடிவடைந்தது. ARAயினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆடி 11 ஊர்வலத்தினை ஒழுங்கு செய்தவர்களில் ஒரு தமிழரும் இருக்கவில்லை. தமிழர்களையும் உள்ளடக்கிய ஊர்வலம் ஒருவரும் எதிர்பாராத வகையில் இறுதியில் வன்முறையில் முடிவடைந்தது.. எனவே எம்மவர்களின் உணர்வலைளை முழுமையாக வெளிப்படுத்தும் நோக்கத்தோடு ஆடி 28 ஊர்வலத்தை ஒழுங்கமைத்தோம். இவற்றின் இறுதியில் நாம் கண்டுகொண்டது இவ்வேலைகள் தொடர்ச்சியானதாகப் படவேண்டும் என்பதையே. ஏனெனில் "பாரம்பரிய முன்னணியினர்" நன்றாக ஸ்தாபன மயப்பட்டவர்கள். பாரம்பரிய முன்னணியினர் அமைப்பில் ஒருவர் சேர்வதற்கான தகுதியாகக் கணிக்கப் படுவது யாராவது ஒரு அகதியைத் தாக்கியிருக்க வேண்டும். WOLFANG DROEGE என்பவர் அமைப்பின் தவைராவர். இவர் முன்னர் தண்டிக்கப் பட்ட குற்றவாளியாவரர். வெறுக்கத் தக்க நிறவாதத்தைப் பரப்பியதற்காக தண்டிக்கப் பட்ட குற்றவாளியாவார்.

தமிழர்களுக்கு எதிராக தாக்குதல்கள் நடந்ததைத் தொடர்ந்து நகரம் முழுவதும் நிறவாதத்தை எதிர்த்து நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தோம். அதைத் தொடர்ந்து எந்த அமைப்பையும் தனியாக கலந்து கொள்ளும் படியும் அழைப்பாளர்களாக பங்களிக்கும் படியும் கோரினோம். 4ஜி நிறவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப் படும் என்றும் கூறப்படுகிறது. நான் கருதுகிறேன் பல இடங்களில் அமுல்ப் படுத்தப் படவில்லையென்று. அரசும், பொலிசும் இந்த விடயங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேடல்— நிறவாதத்திற்கு எதிரான போராட்டங்களில் ரொரண்டோவில் உள்ள பல்லினக் குழுக்களின் பங்களிப்பு எவ்வகையில் அமைந்தது?**

***சாமினி—*** நான் கடந்த 8 வருடங்களாக ரொறன்டோவில் நிறவாதத்திற்கு எதிரான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றேன். கடந்த ஆடி28 நடைபெற்ற ஊர்வலத்தில்த்தான் பெருமளவிலான தெற்காசியர்கள் அதிலும் குறிப்பாக தமிழர்கள் கலந்து கொண்டதுடன், பெருமளவு வேலைகளையும் முன்னெடுத்துச் செய்தனர். இந்த நிகழ்வு எமக்கு பெருமளவு ஊக்கத்தையும் உறுதியையும் அளித்தது. நிறவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இது மிகவும் பயனளிக்க கூடியது. கடந்த காலங்களில் நிறவாதம் என்பது கறுப்பின மக்களுக்கு எதிரானது மட்டும்தான் என்றும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் கறுப்பின மக்கள் சார்பானவையே என்றும் ஓர் கருத்தோட்டம் நிலவியது. ஆனால் கடந்த கால நிகழ்வுகளில் வேற்றின மக்களும், ஆசியர்களும், குறிப்பாக தமிழர்களும் பாதிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகின்றனர் என்ற உண்மையை வெளிப்படுத்தின. தொடர்ந்து இவ்வாறான அகதிகள், புதிய குடிவரவாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பல்லினத்தவரோ, அல்லது தமிழர்களோ சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதையும் நிரூபித்தன. பல்வேறு இனக்குழுக்களும், பல்வேறு வகையான மக்கள்அமைப்புக்களும் இந்தஊர்வலத்தில் பங்குபற்றின. உழைப்பாளர் அமைப்புக்கள், அரசியல் குழுக்கள், பெண்விடுதலை அமைப்புகள், ஒருபால்சமூக அமைப்புக்கள் என்பன உட்பட 70க்கு மேற்பட்ட அமைப்புக்கள் பங்கெடுத்துக் கொண்டன.

***தேடல்—*** **முதலில் ஆடி28ல் நடந்த ஊர்வலம் பல்லினத்தவருடன் பல வகையான அமைப்புக்களும் கலந்து கொண்டு பாரிய பங்களிப்பை வழங்கின. ஆனால் இரண்டாவதாக நடைபெற்ற ஊர்வலமானது தாக்குதல் நடத்திய""பாரம்பரிய முன்னணியினரின்"" மீதான விசாரணை அன்றும், புதிய குடிவரவாளர்கள் மீதான புதிய கட்டுப் படுத்தற் சட்டங்களைக் கண்டித்தும் வைக்கப் பட்ட கோரிக்கைகளுக்காக நடாத்தப்பட்ட போதிலும் முதலில் போன்று மக்கள் கலந்து கொள்ளவில்லை குறிப்பாகத் தமிழர்களின் பங்கு மிகக்குறைவு. இதை எப்படி உணர்கிறீர்கள்?**

***சாமினி—*** ஆடி28ல் நடந்த ஊர்வலத்தில் தமிழர்கள் மத்தியில் கணிசமான பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் வகைதுறைவள நிலையம், தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம், விழிப்பு ஆகியவை முக்கியமான பங்களிப்புச் செய்திருந்தன. மேலும் மூன்று தமிழர்கள் அடுத்தடுத்துத் தாக்கப்பட்டதும் ஒருவர் இறந்ததும் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய உணர்வலைகள் அவ்வூர்வலத்தில் பங்கெடுக்க வேண்டிய அவசர அவசியக் கடமையாக அமைந்தது. இவ் வகையில் அவர்களின் இயற்கையான பங்களிப்பு அமைந்தது. தமிழர் வகைதுறை வள நிலைய உறுப்பினர்கள் நகரமெங்கும் துண்டுப்பிரசுரம்கள் விநியோகிதும் ,போஸ்ட்டர்கள் ஒட்டியும் கடுமையாக உழைத்தனர். மற்றும் விழிப்பு, தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் என்பனவும் தகவல்ப் பரிமாற்றத்திற்கும், அமைப் புக்கள் அனுப்புவதற்கும் முன்னின்று வேலைசெய்தனர். எனவே முதலாவது ஊர்வலம் வெற்றியாக அமைந்தது. வரலாற்று ரீதியாக ரொறன்ரோவில் பல நிறவாதத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இந் நிகழ்வுகள் தொடர்கையில் பாதிப்புக்குள்ளான சமூகங்களின் பிரச்சனைகளுடன் பின்னிப்பிணைந்த போராட்டங்கள் பல வெற்றியளித்துள்ளன. ஆகஸ்ட் 17 ஊர்வலத்தில், கனடியக் குடிவரவுச் சட்டத்தையும் நிறவாதத்தையும் இணைத்து அதற்காக வேலை செய்தோம். உதாரணமாக கனடா வலதுசாரி அரசின் சட்டங்கள் எவ்வாறு புதிய குடிவரவாளர்களுக்கு எதிராகவும், புதிய நாசிகளுக்கு சார்பாகவும் உதவுகின்றது என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் அதற்கு முக்கியத்துவத்தை உருவாக்க எண்ணினோம்.

மற்றும் ஆகஸ்ட் 17 ஊர்வலம் நேரடியாக நிறவெறித் தாக்குதல்களிற்கு எதிராக அமையவில்லை. அரசியல் சட்டத்திற்கு எதிராக இருந்ததால் நடைமுறை ரீதியாக தமிழ் மக்களின் பங்களிப்பு இருக்கவில்லை. தமிழர் வகை துறை வள நிலையம், தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம், விழிப்பு போன்றவற்றின் பங்களிப்பும் முதலில் இருந்த அளவுக்கு இருக்கவில்லை அத்துடன் ஆகஸ்ட் மாதம் பெரும்பாலோர்க்கு விடுமுறைகாலம் என்பதும் காரணமாகும். ஆனால் தொடர்ந்து இவ்வமைப்புக்களின் பங்களிப்பு இருக்க வேண்டிய அவசியமுள்ளது. எதிர் காலத்தில் பங்களிப்பு அமையும் என்றும் நம்புகின்றோம். இப்பங்களிப்பு இதேபோன்று தொடர்வது முக்கியமானது.

***தேடல்—*** **கடந்த காலங்களிலும் நிறவாத நடவடிக்கைகள் கறுப்பின மக்கள் மீது நடத்தப் பட்டன. கறுப்பின மக்களால் எதிர்ப்புப் போராட்டங்களும் நடத்தப்பட்டன. ஏன் உங்களால் அப்போராட்டங்களிற்காக கூட்டமைப்புக்களை உருவாக்கவோ பங்களிக்கவோ முடிய வில்லை?**

***சாமினி—*** உண்மையாக வரலாற்று ரீதியாக நிறவாதம் பிரதானமாக கறுப்பின மக்கள் தொடர்பாகவே அமைந்தது. எதிர்ப்பும் கறுப்பின மக்கள் சார்பாகவே காட்டப்பட்டது






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதும் உண்மை. தெற்காசிய சமூகங்கள் குறிப்பாக வியட்னாமியர்கள், தமிழர்கள் பங்களிக்காததற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக புதிய குடிவரவாளர்கள் பல பிரதான பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். தம்மை புதிய சூழலில் ஸ்திரப்படுத்திக் கொள்ளல், வீடு, வேலை பெற்றுக் கொள்ளல், புதிய கலாச்சாரம் போன்ற பிரச்சனைகள் அவர்களிற்கு பிரதானமாகின்றன. வாழ்வுக்காக பல மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. சமூகப் பிரச்சனைகளில் அரசியல் ரீதியாகப் பங்கெடுப்பதற்கு நேரமின்மை பிரச்சனையாக இருந்தது. எனவே எமது சமூகத்தவர்கள் தாக்கப் படும் வரையில் உணர்வுரீதியாகப் பங்கெடுப்பது என்பது கடினமானதொன்றாகும்.

இத் தாக்குதல்கள் மறுபுறத்தில் ஓர் உதவியும் புரிந்தன. பாதிப்படையும் நாம் போராட வேண்டிய தேவையையும் அமைப்பாக வேண்டிய அவசியத்தையும் தமிழ் மக்களிற்கு உணர்த்தியது. பயமும், பீதியும் நிறைந்த இப்படியான சம்பவங்களை நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் காட்டியது. நிறவாதத்திற்க எதிராக கடந்த காலங்களிலும் பல அமைப்புக்களை ஒருங்கிணைக்கும் முயற்சி நடந்தது. WILSON HEADஎன்பவரால்URBAN ALLIANCE ON RACE RELATIONS என்ற அமைப்பு உருவாக்கப் பட்டது. இவர் நிற ஒடுக்குமுறைக்கு எதிராக உழைத்தவர். ஆனால் அவ்வமைப்பின் வேலைகள் பெரும்பாலும் கறுப்பின இளைஞர்களால் தாராளவாதத் தன்மையுடன் அரசின் நிர்வாகங்களுடனும், மேல்மட்ட தொடர்புகளுடன் பிரச்சார வேலைகளிலும் ஈடுபட்டதால் இக் கூட்டமைப்பின் வேலைகள் பாரிய அளவில் பயனளிக்கவில்லை. ஆனால் புதிய கூட்டமைப்பின் வேலை முறைகள் முற்றிலும் மாறுபட்டவை. பிரதானமாக மக்களிடம் நேரடியாக வேலை செய்தோம்.பல வகையான அமைப்புக்களையும் இணைத்துள்ளோம். உதாரணமாக மாணவர் அமைப்புக்கள், தொழிலாளர் அமைப்புக்கள், சோசலிச அமைப்புக்கள், சர்வதேச சோசலிஸ்ட்டுக்கள், பெண்ணிலை வாத அமைப்புக்கள், ஒருபால்சமூகத்தவர் அமைப்புக்கள் தெற்காசியர் அமைப்புக்கள், கிழக்காசியர் அமைப்புக்கள் போன்றவையாகும்.

**தேடல்— கூட்டமைப்பில் பங்கெடுத்த தமிழர் அமைப்புக்கள் எவ்வகையில் கூட்டமைப்பின் நோக்கத்திற்காக வேலை செய்தன?**

***சாமினி—*** நிச்சயமாக தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம(FACT) பெரிய அளவில் பங்களித்தது. ஏனெனில் அவர்கள் அரச நிர்வாக மட்டங்களில் தொடர்புகளைக் கொண்டவர்களாதலால் குறிப்பிட்ட அழைப்புகள், தொடர்புகள் என்பவற்றிற்கு பல உதவிகள் செய்தார்கள். ஏனெனில் கூட்டமைப்பு பரந்த அளவில் இதற்கு வேலைசெய்ய வேண்டி ஏற்பட்டது. ஆனால் நடந்தவை—களை வைத்துக் கணிப்பிடும் போது ஆடி 28ல் நடந்த ஊர்வலத்தில் சம்மேளனம் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது என்றே நினைக்கத் தோன்றுகின்றது. ஏனெனில் ஆரம்பக் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஊர்வலத்தின் பின்னரும் தொடர்ச்சியான கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. ஊர்வல ஒழுங்குகள் அவசரமாக செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து முதலாவது கூட்டத்தின் பின்னர் அவர்களை நோக்கி பல திசைகளிலிருந்தும் கேள்விகள் வீசப்பட்டன. கணிசமான தமிழ் மக்களை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதால் அக் கட்டாயமானது அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே இரண்டாவதிலிருந்து பங்கு பற்றத் தொடங்கினார்கள். தொடர்ந்து என்ன நடக்கும் என அவதானிக்கத் தொடங்கினார்கள். ஆனால் தமிழர் வகை துறை வள நிலயத்தினர், விழிப்பு, தெற்காசிய குழு ஆகியோர் ஆரம்பத்திலிருந்து கலந்து கொண்டு வருகின்றனர். இதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் இறுதியில் ஊர்வல ஒழுங்குகளில் சம்மேளனத்திரும் கலந்து கொண்டனர். அதுமட்டுமல்லாமல் பல வேலைகளையும் பொறுப்பெடுத்துச் செய்தனர். கூட்டமைப்பினால் செய்ய முடியாத வேலைகள் பலவற்றை அவர்கள் செய்து உதவினார்கள். ஆனால் மறுபக்கத்தில் அதிகமாக உழைத்த தமிழர் வகை துறை வள நிலையத்தினர், விழிப்பு போன்ற அமைப்புகளின் உழைப்புக்களையும் தன்உள் வாங்கி முழுமையும் தான்தான் என்ற பிரமையை ஏற்படுத்தியது. அது மட்டுமல்லாமல் சம்மேளத்தின் வேலைகள் கூட்டமைப்பின் வேலை முறைகளுக்கு முரண்பட்டதாகவே அமைந்தன. தமிழர் வகைதுறை வள நிலயம், விழிப்பு போன்ற அமைப்பினர் தொடர்ச்சியாக கூட்டங்களில் கலந்து கொண்டபோது சம்மேளனத்தினர் தொடர்ந்து கலந்து கொள்ளவில்லை. அவர்கள் கூட்டமைப்பின் அழைப்புக்கிணங்கியே வந்தார்கள் பல உதவிகள் செய்தார்கள். இருந்த போதிலும் அவரகள் தொடர்ச்சியான கூட்டங்களில் பங்களிக்காததையிட்டு எனக்கு சில கேள்விகள் தோன்றின. இவர்கள் தம்மை விளம்பரப் படுத்த முயற்சித்தார்களா? தொடர்பு சாதனங்களுக்கு தம்மை முதன்மைப் படுத்த எண்ணினார்களா?

**தேடல்— பொதுவான நோக்கத்தையும், கோரிக்கையினையும் முன்வைத்த கூட்டமைப்பு எதற்காக நிறவாதத்திற்கு எதிரான பொதுவான ஒரு பதாகையின் கீழ் ஊர்வலத்தை கொண்டு செல்லவில்லை?**

***சாமினி—*** பல்லினத்தவரும், பல விதமான அமைப்புக்களில் உள்ளவர்களும் தத்தமது பதாகைகளைக் கொண்டு வருவதை நல்ல விடயமென்றே எண்ணுகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டமைப்பின் நோக்கமே பல்வேறு சமூகத்தவரும் நிறவாதத்தை எதிர்ப்பதை ஒருங்கிணைப்பதேயாகும். அவ்வகையில் வெளிக்காட்டுவதே முக்கியமானதும்கூட. ஆனால் வித்தியாசமான பதாகைகளின் கீழ் கூட்டமைப்பின் பொது நோக்கைப் பிரதிபலிக்கும் வகையில் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் போக்கே காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ்ச் சமூகத்தவரிடையே ஏற்பட்ட குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணம் அவர்களிடையே இருக்கும் அரசியல், சமூக முரண்பாடுகளேயாகும். அப்படி முரண்பாடுகள் இருப்பது முற்றாகத் தவறென்று நான் கருதவில்லை. ஆனால் இம்முரண்பாடுகள் பேசித்தீர்க்கப்பட வேண்டிய இடங்கள் வேறு. ஆனால் கூட்டமைப்பில் இணையும் போது கூட்டமைப்பின் பொது நோக்கத்திற்காக அணிதிரள வேண்டும். இதன் கருத்து எல்லா முரண்பாடுகளையும் தூக்கியெறிந்து விட்டுத்தான் இணையவேண்டும் எனபதல்ல. கூட்டமைப்பினுள் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. ஆடி 28ல் நடந்த ஊர்வலத்திற்காக கூட்டமைப்பினுள் தெற்காசிய நடவடிக்கைக் குழு ஒன்று இருந்தது. தமிழ் மக்கள் தாக்கப் பட்டதால் அவர்களுக்குக் கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் எண்ணினோம். அதற்காக தெற்காசிய குழு அது பற்றிய ஒழுங்குகளை முன்னெடுத்தது. கூட்டத்தில் யார்? எங்கே? எப்போது? பேசுவது போன்ற விடயங்களையிட்டு விவாதிக்கப் பட்டபோது முடிவுகள் எடுக்க முடியாத நிலையேற்பட்டது. ஒரு குழுவை இன்னொன்று கட்டுப்படுத்தும் நிலையும் காணப்பட்டது. ஒரு நிலையில் எந்தக் குழு சார்பாகவும் பேச்சாளர் எவரும் பேசுவதில்லை என்று தீர்மானிக்கும் நிலையும் காணப்பட்டது. இறுதியாக எல்லா அமைப்புக்கள் சார்பாகவும் உரை வழங்குவது என்ற முடிவுக்கு வந்தனர். இது ஆரோக்கியமாக எடுக்கப் பட்ட முடிவல்ல. ஆனால் எல்லா அமைப்புக்களையும் திருப்திப் படுத்த வேறு வழியிருக்கவில்லை. இந் நடைமுறை பற்றி எனது கடுமையான விமர்சனங்கள் உண்டு.

**தேடல்— ஆடி 28 ஊர்வலத்தில் தமிழர் வகை துறை வள நிலையத்தினர் பற்றி செந்தாமரையில் வெளியிடப் பட்ட குற்றச்சாட்டுக்களையிட்டு, கூட்டத்தைத் தலைமை தாங்கியவர் என்ற முறையிலும், ஒவ்வொரு நிகழ்விலும் பங்கெடுத்தவர் என்ற அடிப்படையிலும் உங்கள் கருத்து என்ன?**

***சாமினி—*** நாம் கூட்டமைப்பில் கூட்டம் பற்றி எடுத்த முடிவுகளுக்கும் கூட்டத்தில் நடந்து முடிந்த நடைமுறைகளுக்குமிடையே பாரிய வித்தியாசம் காணப்பட்டது. யார்? எங்கே? எப்போது? உரை நிகழ்த்துவதுஎன்ற முடிவுகள் ஏற்கனவே கூட்டமைப் பில்எடுக்கப் பட்டிருந்தது. உதாரணமாக சம்மேளனம் சார்பாக நேருகுணாவும். விழிப்பு சார்பாக அமிர்தவர்ஷிணி காசிப்பிள்ளையும் பேசுவது என்றும் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஊர்வலக்கூட்டத்தில் நான்தான் பேச்சாளர்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றின் பட்டியலை தொடர்புசாதனங்கள் உட்பட எல்லோருக்கும் விநியோகித்துக் கொண்டிருந்தேன். ஆனால் சம்மேளனத்தின் சார்பாக பேசவிருந்த பேச்சாளர் திடீரென சம்மேளனத்தினரால் மாற்றப்பட்டார். அவர்களின் இந்த நடவடிக்கையால். கூட்டத்தின் போக்குத் திசை திரும்பியது. தமிழர் வகை துறை வள நிலயத்தினர் சார்பாகவும் பேச்சாளர் தேவையென்று கேட்கப் பட்டது. இத் திசை மாற்றத்தின் பின்னர் அவர்களுக்கும் பேச்சாளர் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் எண்ணினேன். மொத்தத்தில் கூட்டமைப்பின் தீர்மானம் தூக்கி வீசப்பட்டது. அத்துடன் இதுதான் அச்சூழ்நிலையில் தீர்வாக மாறியது. இது துரதிஸ்டவசமானது. இவற்றிலிருந்து நாம் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளன. எப்படி ஒரு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பை மற்றொன்று மௌனமாக்க எத்தனிக்க முடியும்? எப்படி ஒன்றிணைந்து வேலை செய்வது? எப்படி ஒழுங்கு படுத்துவது? என்ற கேள்விகளை எழுப்புகின்றது.

***தேடல்—* இங்குள்ள தமிழ்ப் பெண்கள் குடும்ப ரீதியிலும், சமூகரீதியிலும் பல விதமான ஒடுக்கு முறைகளை எதிர் கொள்கின்றனர். தமிழர்கள் மத்தியில், தமிழ்ப் பெண்களின் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் ஒரே அமைப்பாக இருக்கும் விழிப்பு நிறவாதத்திற்கு எதிராகவும் போராட முன்னின்றது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

***சாமினி*—** தமிழ்ப் பெண்கள் பெண்களாக இருப்பதால் மட்டுமல்லாமல் நிறரீதியாகவும் ஒடுக்கப் படுகின்றனர். கடைகளுக்குப் பொருட்கள் வாங்க செல்வதிலிருந்து பல இடங்களிலும் பாதிக்கப் படுகின்றனர். இவர்கள் சமூக நல உதவிப்பணம் பெறும் இடங்களிலும், கைக் குழந்தைக்கான உதவித் தொகை பெறும் இடங்களிலும், புதியவர்களாக வந்து நிவாரணம் பெறும் இடங்களிலும், பாதிக்கப் பட்ட பெண்கள் உதவி பெறும் இடங்களிலும் தமிழ்ப் பெண்கள் நிற ரீதியாக பாகுபாடு காட்டப்படுகிறார்கள். "பாரம்பரிய முன்னணியினரால்" தமிழ்ப் பெண்கள் இதுவரையில் தாக்கப் படவில்லைதான் ஆனால் அவர்கள் இதற்கு விதிவிலக்கானவர்களல்ல. பொதுப்படையாக பெண்களை சமூகத்தின் பாதுகாவலர்கள் என்றே கருதப் படுகின்றனர். இந்த அடிப்படையிலும் தமிழ்ப் பெண்கள் நிறவாதத்திற்கு எதிராகபோராட வேண்டிய தார்மீகப் பொறுப்பினை பெறுகின்றனர். விழிப்பு ஆடி 28 ஊர்வலத்தில்க் கலந்து கொண்டதுடன், தொடர்ந்து வேலைகளில் முன்னணியில் பங்களித்தது மட்டுமல்லாமல் இப் பெண்கள் அமைப்பின் சார்பாக பிரதிநிதி ஒருவர் உரை நிகழ்த்தியதும் வரவேற்கத்தக்க முன்னுதாரணமாகும். தொடர்ந்தும் இவ்வகையான போராட்டங்களில் விழிப்பு ஈடுபட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

***தேடல்—* கூட்டமைப்பு எதிர் காலத்திலும் நிறவாதத்திற்கு எதிராக போராடும் நோக்கமுடையது. பல்லின, பல்வேறு அரசியல் சமூகப் பின்னணியுடைய அமைப்புக்களை ஒன்றிணைத்து வேலைசெய்யும் போது கடந்தகால வேலைகளில் ஏற்பட்ட பிரச்சனைகள் போன்று உருவாகும் போது எவ்வகையில்த் தீர்க்கப் போகிறீர்கள்?**

***சாமினி*—** கூட்டமைப்பு வேலை முறை என்பது என்னைப் பொறுத்த வரையில் எல்லாச் சமூகங்களிலுமே போராட்டம்தான். பொதுவாக கனடாவில்த் தமிழ்ச் சமூகம் நிறவாதத்திற்கு எதிராக இக் கூட்டமைப்பினூடாகப் போராடுவதாக இருந்தால் கூட்டமைப்பின் ஒழுங்கு முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் பொதுவான கோரிக்கைகளிற்காக ஐக்கியமாக வேலை செய்வதற்கும், தொடர்ச்சியாகப் பங்களிப்பதற்கும் உதவியாக இருக்கும். ஒரு குழு கூட்டமைப்பின் கட்டுப்பாடுகளின் கீழ் கட்டுப்பட முடியாத பட்சத்தில் கூட்டமைப்பில் பங்கெடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பங்கு பற்றுவதாக முடிவு செய்யும் பட்ச்சத்தில் கூட்டமைப்பின் கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டும். அப்படி இணையும் பட்சத்தில்த் தான் அக் குறிப்பிட்ட நோக்கமும் வெற்றி பெறும். ஒரு குழுவின் பிழைகளிற்கு அனுபவமின்மை காரணமாக இருந்தால் அவர்கள் கூட்டமைப்பு அரசியலைக் கற்றுக் கொள்ளவேண்டும். பொதுவான நோக்கத்திற்காக பல வகைப்பட்ட அமைப்புக்கள் ஒன்றிணைவதே கூட்டமைப்பு. அதிலே தத்தமது குழுக்களின் சொந்த அரசியலையோ, கருத்துக்களையோ முதன்மைப் படுத்தும் களமாக்க முயற்சிக்கக் கூடாது. பல்லினத்தவருடனும், பல்வேறு அமைப்புக்களுடனும், பல அரசியல் சக்திகளுடனும் இணைந்து எவ்வாறு வேலை செய்வது என்னும் கூட்டமைப்புக் கல்வியை எதிர்காலத்தில் கற்பிப்பதற்கும் எண்ணியுள்ளோம்.

***தேடல்—* கூட்டமைப்பு எதிர்காலத்தில் எந்த வேலைகளில ஈடுபட எண்ணியுள்ளது?**

***சாமினி*—** கடந்த காலத்தில் போன்று பாரிய அளவில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் உணர்வலைகளை ஏற்படுத்த நிகழ்ச்சி நிரல் வைத்திருக்கிறோம். தொடர்ச்சியான வேலைமுறை ஒன்றே சமூகத்தின் பிரச்சனைகளிற்கு முகங் கொடுக்கக் கூடிய ஒன்றாகும். ஆகஸ்ட் மாத ஊர்வலம் சிறிதாக இருந்தாலும் நாசிகளின் மீதான விசாரணை அன்று அகதிகள் தொடர்பான திருத்தச் சட்டத்தினை எதிர்த்தும் நடத்தப்பட்டது. தொடர்ச்சியான வேலையென்ற அடிப்படையில் அதுவும் வெற்றியென்றே கூறவேண்டும். சிறிய அளவிலான வேலைகளாக இருந்தாலும் பிரச்சனைகளின் தார்ப்பரியத்தை உணர்ந்து நகரம் முழுவதும் பிரதிபலிக்கும் நிறவாதத்தை எதிர்த்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட வேண்டும். (SHOWBOAT) பிரச்சனைகளிற்கு கூட்டமைப்பு பாரிய அளவில் ஆதரவு வளங்கவுள்ளது. BLACK ACTION DEFENCE COMMITTEE அதற்கான ஒழுங்குகளைக் செய்கின்றது. சர்வதேச நிறவாதத்திற்கு எதிரான தினமான மார்ச் 21. 94 அன்று மிகப் பெரிய அளவிலான ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிறவெறியும் எமது புலப்பெயர்வும்

னடாவில்அதிகஎண்ணிக்கையில்வளர்ந்துவருகின்றது

கஇங்கையர் சமூகம். அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் சிங்கள,முஸ்லிம் மக்களிலும் பார்க்க அதிக எண்ணிக்கையில் உள்ளனர். எண்ணிக்கையில் அதிகமாக உள்ளதால் பல பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளனர். இப் பிரச்சனைகளின் அடிப்படையை நோக்குமிடத்து. நாம் ஏன் புலம் பெயர்ந்தோம்? நாம் குற்ற உணர்வுடன்தான் இவ்வன்னியப்பட்ட சூழலில் வாழவேண்டுமா? என்ற கேள்விகளும் தோன்றுகின்றன.

இக் கேள்விகளுக்குப் பதிலாக எம்மிடமும் சில கேள்விகள் தோன்றுகின்றன முன்னூறு வருடங்களாக எம்தேசங்களையாண்ட வெள்ளையின அரசுகளின் பிரதிநிதிகள் யார்? கடற்கொள்ளையர்களாகவும்,சுரண்டல் வியாபாரிகளாகவும் எமது தேசங்களை வந்தடைந்தவர்கள் பின்னர் எம்மையே அடிமைகளாக்கியாண்டனர். இவர்களின் வருகையால் ஏற்பட்ட பிரதான பாதிப்புகள் பல.

எம் தேசங்களில் தோன்றியிருக்கக் கூடிய முதலாளித்துவப் புரட்சியும்,அதன்பக்க விளைவுகளாகத் தோன்றியிருக்கக்கூடிய முதலாளித்துவ ஜனநாயகமும், இயல்பான தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சியும் இல்லாது போயின. இன்றைய தேசிய விடுதலைப்போராட்டத்தில் காணப்படும் ஜனநாயகமறுப்பிற்கான விதைகள் அன்றே விதைக்கப்பட்டு விட்டன. எம் தேசங்களில் தொழில் நுட்பக்கருவிகளின் ஆளுமை என்பது மக்களின் தேவைகளையொட்டி அமையாமல் லாப நோக்கத்திற்காக மேல்நாட்டினரால் திணிக்கப்பட்ட பொருட்களாகவே அமைந்தன. அது மட்டுமல்லாது மேற்கத்திய கலாச்சாரமும். வாழ்க்கைமுறையும் இலங்கை மக்கள் மீதும் திணிக்கப்பட்டன. இவை நடுத்தர, மேல்தட்டு மக்களை மிக இலகுவாகப் பற்றிக்கொண்டன. மற்றும் மூலப்பொருட்கள், மனிதவலு, பணப்பயிர்க்கொள்ளைகள் என்பன அளவிட முடியாதவை.

மேற்க்குறிப்பிட்டவற்றின் தொன்று தொட்ட தாக்கங்களால் ஐரோப்பியரின் வெளியேற்றத்தின் பின்னரும் சமனற்றதும், பொருளாதார முரண்பாடு கொண்டதுமான சமூகத்தையே வளர்ச்சியடையாத நாடுகளில் விட்டுச்சென்றது.

இன்றைய எமது வெளியேற்றத்தின் பிரதான காரணங்களாக இனரீதியாகதமிழ்பேசும்மக்கள்மீதுஅரசின் அடக்குமுறை ,சிங்களமக்கள்மீதுஅரசின் அடக்குமுறை,தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த இயக்கங்களின் ஜனநாயக மறுப்பு என்பவற்றை ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது இவை இலங்கைச் சமூகங்களின் அரசியல், சமூகக் கட்டுமானத்திலும் தங்கியிருப்பதாகவே தெரிகின்றது. இக் கட்டுமானத்தில் ஐரோப்பியர்களின் வருகையின் பாதிப்பு கணிசமானது. எனவே எமது வெளியேற்றத்திற்கான அடிப்படைக் காரணங்களின் கணிசமான பங்கை மேற்கு ஐரோப்பிய அரசுகளே ஏற்க வேண்டும்.

காலனி ஆட்சியைத் தொடர்ந்தும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய அரசுககளின் கூட்டுகள் வளர்ச்சியடையாத நாடுகளை பல வழிகளிலும் கொள்ளையடித்தன. கனடா உட்பட ஐரோப்பிய வல்லரசுகளும் இணைந்துதான் இக் கொள்ளையை நடத்துகின்றன. உலக வங்கி சர்வ தேச நாணய நிதியம் என்பன இவற்றுக்கு வழி சமைக்கும் கருவிகளாகும்.

மேலும் இப்படியான நாட்டை விட்டு வெளியேற்றம் என்பது எமது சமூகத்திற்கு மாத்திரம் [illegible] அல்ல. வரலாற்றில் பல நாட்டு மக்களும் புலம் பெயர்ந்துள்ளனர். வல்லரசுகளின் ஆளுமைக்குட்பட்ட [illegible] அரசியல் போக்கில் இவை தவிர்க்க முடியாதவைகளாகும். இங்கே குற்ற வாளிகள் வல்லரசுகளும் [illegible] நலன் சார்ந்த வளர்ச்சியடையாத நாடுகளின் [illegible] பெயர்ந்த மக்களல்ல.இதிலேபுலப்பெயர்வு அரசியற் காரணத்திற்காகவா? பொருளாதாரக் காரணத்திற்காகவா? என்று விவாதிப்பது மடமைத்தனமாகும். ஏனெனில் இரண்டும் ஒன்றில் ஒன்று தவிர்க்கமுடியாது தங்கியுள்ளன. சமீபத்திய ஆய்வு ஒன்று பின்வருமாறு கூறுகின்றது."“போர் ,அடக்குமுறை, இயற்கையழிவுகள், என்பவற்றிலிருந்து மனிதனின் அடிப்படைத் தேவைகளான பாதுகாப்பு, வாழ்க்கைப் பராமரிப்பு, குடும்ப வாழ்க்கைப் என்பவைகளைப் பாதுகாப்பதற்காக கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் தங்களுடைய சொந்த நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றனர். ஆனால் ஒரு துளிசத விகிதமே ஐக்கிய நாடுகள் சபையின்விதிகளின்படி உத்தியோக பூர்வ அகதிகள் என்று ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.""

கனடாவில் உள்ள தமிழ்ச்சமூகத்திற்கும் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழ்ச்சமூகத்திற்குமிடையே உள்ள பிரதான வேறுபாடானது கனடாவில் பெரும்பாலோர்கு "நிச்சயமான நிலைகொள்ளல்" என்பதும் ஐரோப்பியத் தமிழ்ச்சமூகத்தவரில் பெரும்பாலானவர்க்கு "நிச்சயமற்ற நிலைகொள்ளல்" என்னும் வேறுபாடுதான். இதுவரைக்கும் கனடாவில் பெரும் பான்மையோருக்கு அகதிக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டுள்ளது. ஐரோப்பாவில் பெரும்பான்மையோருக்கு நிராகரிக்கப்படுகின்றது. மற்றும் கனடாவில் "பல்லினக கலாச்சாரக் கொள்கை"என்பதும் ஐரோப்பியத் தமிழருடன் ஒப்பீட்டளவில் பார்க்கும் போது குறைந்த பட்ச வகையில் சில வாய்ப்புக்களை வழங்கியது. இன்னொரு வகையில் இவ் வாய்ப்புக்களின் பக்கவிளைவுகளாக யாழ்ப்பாணத்தவருக்குரிய குறுகிய குணாம்சங்களை அப்படியே தொடர்வதற்கும் வழிசமைத்தது என்பதும் உண்மைதான். 75000க்கும் அதிகமான கனடிய தமிழ்ச் சமூகத்தவரிடையே தம்மை யார் என்று அடையாளப்படுத்திக் கொள்வது என்னும் கேள்வியும் பிரதானமாக இங்கே வந்த இன்றைய தலைமுறையினரிடம் உள்ளது.

இருபது முப்பது வருடங்களாக இசைவாக்கமடைந்த எமது ஊரின் சூழ்நிலையும் ஐந்து, ஆறு வருடங்களாக வலிந்து பழக்கப் படுத்திய கனடிய சூழ்நிலையும் மோதிக கொள்கின்றன.

எமது மனங்களில் நாம் அறிந்த இலங்கை அரசியலின் விளைவுகளும் நாம் தற்சமயம் வாழ்கின்ற கனடிய அரசியலின் விளைவுகளும் மோதிக்கொள்கின்றன.எம்மால் விட்டகல முடியாத தமிழ்க்கலாச்சாரமும், வாழ்க்கை முறையும் எம் முன்னால் உள்ள கனடியக் கலாச்சார வாழ்க்கை முறையும் மோதிக் கொள்கின்றன.

இவற்றினால் இங்குள்ள தமிழ்மக்களின் தீர்மானங்களும் வித்தியாசப்படுகின்றன. இலங்கைக்குத்திரும்பிச் சென்று வாழ்வதென்ற தீர்மானத்துடன் குறைந்த எண்ணிக்கையிலும். இங்கேயா? அங்கேயா? என்று முடிவெடுக்க முடியாதவர்கள் கணிசமானவர்களாகவும், இங்கேதான் என்று தீர்மானித்தவர்கள் பெரும்பான்மையானவர்களாகவும் உள்ளனர்.

கனடாவில் வாழும் தமிழர்களில் கணிசமான தொகையினர் பிரச்சினைகளிலிருந்து விலகி வாழும் தன்மையுடையவர்களே. அதாவது பிரச்சனைகளிலிருந்து தப்பி வாழ்வதே கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வழி என்று எண்ணுகிறவர்கள். பிரச்சனைகளிக்கு முகங்கொடுத்தால் கனடாவின் நிரந்தர இருப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்று எணணுபவர்கள். ஆனால் கனடா அரசிற்கு நல்ல பிள்ளையாக நடிப்பதால் நாம் தப்பிவிட முடியுமா? எப்படி முடியும்?வட அமெரிக்காவின் கடந்தகால அரசியலை எடுத்துப்பார்த்தால் இது புரியும். மக்கள் சமுதாயம் வாழ்ந்த பிரதேசத்தை புதிதாகக் கண்டு பிடித்த நாடுகளாகப் பிரகடனப்படுத்திய ஸ்பானியர்களும்,ஆங்கிலேயர்களும் அமெரிக்கக் கண்டமெங்கிலும் வெள்ளமெனப் பிரவேசித்தனர். அமெரிக்க கண்டமெங்கிலும் சிதறிய குழுக்களாக வாழ்ந்த பூர்வீகக் குடிகளைக் கொன்றொழித்தனர். அன்றிலிருந்து இன்று வரையிலும் பூர்வீகக்குடிகள்எல்லா வகையிலும் அடக்கப்பட்டனர்.இதுமட்டுமல்ல அடிமைகளாக்கிக் கொண்டுவரப்பட்ட கறுப்பின மக்களின் சித்திரவதை வரலாறுகள் சொல்லிலடங்கா. பிற்காலங்களில் ரயில்ப் பாதைத் தொழிலாழர்களாகக் கொண்டு வரப்பட்ட சீனத்தொழிலாளர்கள்மீதும் தொடர்ச்சியாக சீக்கியர்கள் வியட்னாமியர்கள் என்று பல சிறுபான்மையினத்தவர்கள் மேல் எவ்வளவு மோசமான அடக்கு முறைகள், இன்றுவரையும் இவை தொடர்கின்றன. கனடாவில் நாம் அனுபவிக்கும் அற்ப உரிமைகள் கூட இங்குள்ள சமூகங்கள் நீண்ட காலங்களாக நடத்திய தியாகப் போராட்டங்களின் விளைவே. கனடிய அல்லது வெள்ளையின அரசின் அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டம் என்பது கனடாத் தமிழ்ச்சமூகத்தைப் பொறுத்தவரையில் புதிய விடயம்தான்.

இது தவிர பல தமிழர்கள் கனடாவிலுள்ள கறுப்பின மக்கள், பூர்வீகக்குடிகள், சிறுபான்மைக்குழுக்கள் பற்றிய பிற்போக்கான எண்ணங்களையே கொண்டுள்ளனர். ""கறுவல்கள், யமேக்கர்கள் எல்லோரும் கள்ளர்கள்"" ""தொழிற்ச்சாலைகளில் வேலைகளில் இல்லை எனவே அவர்கள் சோம்பேறிகள்"" என்ற கூற்றுக்களையும் காதால் கேட்டிருக்கின்றோம். ஆனால் உண்மைக் காரணம் அது வல்ல கறுப்பினத்தவர்கள் மீதுள்ள நிறவெறியும் கறுப்பின மக்களின் இயல்பான போர்க்குணாம்சமுமம்தான் அவர்களுக்கு வேலைகொடுக்க மறுக்கப் படுவதற்குக் காரணம் என்பது தான் உண்மை.

மேலும் எம்மில் சிலர் காலனித்துவ அடிமை மனோபாவம் காரணமாக வெள்ளையினத்தவர்களை அதியுயர்வானவர்களாகவும் அவர்களுக்கு அடுத.த நிலையில் தங்களை வைத்துப் பார்ப்பதில்(நாம் மானிறமாக இருப்பதை வைத்தோ தெரியவில்லை) பரம திருப்தியும் பெறுகின்றனர். கடைசி நிலையில் கறுப்பினத்தவரை வைப்பதிலும் பெருமிதம். ஆனால் வெள்ளைநாசிகளால் எம்மீது நிறவெறித்தாக்குதல் நடக்கும் போதுமாத்திரம்""இங்கே எவ்வளவு கறுவலுகள் இருக்குதுகள் நிறப்பிரச்சனை எண்டு எங்களுக்கு வரேக்க விடவா போறாங்கள்""இந்த இடத்தில் மாத்திரம் நாம்எல்லோரும் கறுவலின்ர பக்கம். ஆனால் கடந்த சில வருடங்களில் நடை— பெற்ற பல கறுப்பின மக்கள் மீதான ஒடுக்கு முறைகளின் போதோ, அல்லது பல கறுப்பின இளைஞர்கள் கனடியப் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டபோதோ நடந்த போராட்டங்களில் நாம் எங்கே பங்கெடுத்தோம்?ஏன் ஆதரவுகூட வழங்கவில்லை. அது மட்டுமல்ல ""கறுவலுகளுககு ஏதாவது தூள்ப்பிரச்சனையாக இருக்கும் அல்லது பெட்டைப் பிரச்சனையாக இருக்கும்""என்று இன ஒடுக்குமுறையை நியாயப் படுத்திய கூற்றுக்களையயும் நம் காதால் கேட்கமுடிந்தது.

அண்மைக்காலங்களில் எதற்காக இலங்கையர்கள் மீது நிறவெறித்தாக்குதல்கள் அதிகரித்தன? இதற்கான காரணங்களாக சில விடயங்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் பிரச்சாரப் படுத்தப் படுகின்றன. கடந்த சில வருடங்களில் கனடா வந்த குடிவரவாளர்களில்,அதிக எண்ணிக்கையில் வந்த சமூகங்களில்இலங்கைச்சமூகத்தவர் ஒன்றாகும்.கொங்கொங்காரர் இலங்கையரை விடஅதிக எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்கள் கனடா அரசின் சிறப்பு விருந்தாளிகளாக அமைந்தனர். காரணம் அதிக பணத்துடன் இங்குவந்து முதலிடுபவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதால் சிறப்புவிருந்தாளிகளாக வரவேற்கப்படுகிறார்கள் .நாம் தானே இங்குள்ள அடிமட்டத் தொழிலாளருடன் குறைந்த ஊதியத்திற்கு போட்டி போடுபவர்கள். அதுவும் தற்போதைய பொருளாதார மந்தநிலையில்.

உண்மையில் பொருளாதார மந்தநிலையில் புதிய குடிவரவாளரின் வருகை எவ்வகையில் பாதிப்பினை ஏற்படுத்தியது?பல ஆண்டு காலமாக தொடர்ந்துகனடாவிற்கு குடிவரவாளரின் வருகை நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதார மந்தநிலையில் மாத்திரம் குடிவரவாளர்கள் எப்படித் திடீரெனக் காரணமாக முடியும். அதுமட்டுமல்ல இன்றுவரையில் எல்லா வகையான கனடிய அரசியல் வாதிகளாலும் குடிவரவாளரின் தேவைவலியுறுத்தப்படுகின்றது .ஏன்? வளர்ச்சியடைந்த தொழில் நுட்பத்தைக் கொண்ட முதலாளித்துவ நாடுகளில் ஒன்று கனடா. எனவே உற்பத்தி வீதத்திற்கு ஏற்ற அளவில் உள்நாட்டுக் கொள்வனவாளரின் எண்ணிக்கைகுறைவாகவிருப்பது உள்நாட்டுச்சந்தைப்படுத்தலுக்குப் பொருத்தமற்ற ஒன்று. குறைந்த எண்ணிக்கையில் மக்களைக் கொண்ட கிராமத்துச்சந்தையொன்றில் வலுவான மூலதனமோ அல்லது பெரிய முதலாளியோ உருவாக முடியாது என்பதுதான் நியதி! எனவே இந்த அடிப்படைதான் குடிவரவாளரின்தேவையின் பிரதானமானதுமாகும் .இவ்வகையான வலுவான உள்நாட்டுச்சந்தையின் தேவையானது உலக முதலாளித்துவப் போட்டிக்கு முக்கியமானதொன்றாகும்.

மற்றும் தவிர்க்கவியலாத மும்முனைப் பொருளாதாரப் போட்டியின் (யப்பான்,வடஅமெரிக்கா,ஐரோப்பா) பிரதிபலிப்பாகவே பரந்த உள்ஊர்ச்சந்தையும் மலிவான மூலப் பொருட்களும் மலிவான மனிதவலுவும் வடஅமெரிக்க முதலாளித்துவத்திற்குத் தேவைப்பட்டது.இந்த உச்சநிலை முதலாளித்துவமானது தனது தேசத்தினைக் கடந்து அயல் நாட்டு முதலாளித்துவத்துடன்கூட்டமைப்பதையே காட்டுகின்றது அத்தோடு தனது சொந்த நாட்டு மக்கள் நலன்களையோ அல்லது தொழிலாளர் நலன்களையோ தூக்கியெறிவதையும் விளக்குகின்றது.

இன்று இப்படியான நாசிகளின் வளர்ச்சியானது கனடாவில் மட்டுமல்லாது பரவலாக ஐரோப்பாவிலும் அதிகரிப்பதனைக் காணலாம். தவிர்க்க முடியாத போட்டியில் ஈடுபடும் முதலாளித்துவ அரசுகள் அதேநேரத்தில் தங்கள் நாடுகளின் உள்ளேயுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கின்றன. முதலாளித்துவ அரசுகள் தமக்கிடையேயுள்ளபோட்டிதான் உண்மைக் காரணம் என்பதை மறைத்து குடிவரவாளர்கள்தான் காரணம் என்று கனடியத் தொழிலாளரிடையே தந்திரமாகப் பிரச்சாரம் செய்கின்றன. தொழிற்சாலைகள் தெற்கு நோக்கி நகர்ந்ததையும் அதனால் பெருந் தொகையான தொழிலாளர்கள் வேலையிழந்ததையும் அரசும் கட்சிகளும் இருட்டடிப்புச் செய்துள்ளன. இந்த உச்ச

நிலை முதலாளித்துவவாதிகளான வட அமெரிக்கா, யப்பான், ஐரோப்பிய அரசுகளின் சந்தைப்படுத்தலுக்கான போட்டியின் மறுபக்கப்பிரதிபலிப்பே உலகெங்கிலும் [illegible] மில்லியன் மக்களை தமது சொந்தநாட்டை விட்டு புலம் பெயரவைத்தது.

இனவாதம், பாசிசம், போர் என்பன இந்த அமைப்பு முறையின் தவிர்க்கமுடியாத சங்கிலித் தொடராகும். [illegible] மக்களையும் தொழிலாள வர்க்கத்தையும் பிரிக்கவும், பலவீனப்படுத்தவும்,சேவை செய்கின்றது. பாசிசம் அவர்களது இயக்கங்களை நிர்மூலமாக்கவும், போர் உலகை மீண்டும் புதிதாக முதலாளித்துவ சக்திகளிடையே பங்கு போடுவதற்கும் உதவுகின்றன.

எமது நிற வெறிக்கெதிரான [illegible] அடக்குமாறு கனடிய அரசாங்கத்தினை [illegible] திளைவைப்பதனை பரிசீலிக்க வேண்டும். ஏனெனில் அரச அதிகாரத்தைப் பலப்படுத்துவதும் பாசிசப் போக்குகளின் வளர்ச்சியும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். இனி ஆய்வுகளில் இரண்டும் தொழிலாளவர்க்கத்திற்கு எதிரான முதலாளித்துவ ஆட்சி முறையைப் பாதுகாப்பதையே நோக்கியிருக்கிறது. நாசிகளைக்கட்டுப்படுத்துவது என்ற பெயரால் மட்டுப்படுத்தப்படும் [illegible] உரிமைகள் நாளை தொழிலாளர் இயக்கங்களை அடக்கியொடுக்குவதற்கு சேவையில் ஈடுபடுத்தப்படும். பாசிச இயக்கங்களைத் தடை செய்தல் என்பது நாளை முதலாளித்துவத்தின் [illegible] எதிர்ப்பாளர்களை வேட்டை [illegible] முன்னுதாரணமாக்கப்படும். ஏனெனில் தற்பொழுது ஜேர்மனியில் நாசிக்குழுக்களுக்கு பொலிசும், நீதி நிர்வாகமும் காட்டும் ஆதரவை உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் வெளிநாட்டுக்காரர் மேலான தாக்குதலை கைகளைக் கட்டிக்கொண்டு எதுவும் செய்யாமல் பார்வையாளர்களாக பொலிஸ் கண்காணிப்புப் பிரிவினர் செயற்படுவதையோ அல்லது வன்முறைகளை மேற்கொள்ளும் கைது செய்து விசாரணை செய்வதற்கு மறுப்பதையோ குறித்து வெளியாகும் செய்திகள் எண்ணுக் கணக்கற்றவை. உதாரணமாக ரொஸ்ர்ரொக் நகரில் நூற்றுக்கணக்கான வியட்னாமியர்கள் நாசிகளால் எரிக்கப்பட்ட கட்டிடமொன்றிற்குள் மணித்தியாலக்கணக்காக உயிரிற்காகப்போராடிக் கொண்டிருக்கும் போது மணித்தியாலக்கணக்காக வராத பொலிஸ் மறு நாள் அதே இடத்தில் நடைபெற்ற நாசியெதிர்ப்பு ஊர்வலத்தைத் தடைசெய்வதற்காக ஆயிரக் கணக்கில்த் திரண்டிருந்தனர். அமைதிக்குப் பங்கமாம்.எனவே இந்த பூர்வீகக் குடிகளின் தேசத்தில் மற்றையோருக்குள்ளது போன்று வாழ்வதற்குரிய சகல உரிமைகளும் எமக்குமுண்டு. ஆகவே நிறவாதத்திலிருந்து விடுதலை பெற உள்ள ஒரேவழி நிறஒடுக்கு முறைக்குள்ளாகும் அனைத்து இனமக்களுடனும், தொழிலாளர் இயக்கங்களுடனும் இணைந்து போராட்டத்தினை முன்னெடுப்பதேயாகும்.

சலீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதஉரிமை மீறல்




ஹிட்லரின் வரைமுறையற்றபடு கொலைகளைஉலகம் இன்றும் உயிர்ப்புடன் நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் அதே காலப் பகுதியில் (1943—1944) "வங்காள வறுமை" என்னும் பெயரில் சம்பவித்த பல லட்சக்கணக்கான மக்களின் உயிரிழப்புகள் அபூர்வமாகவே நினைவு கூரப்படுகிறது. வினஸ்ரன் சேர்ச்சிலின் பிரித்தானிய அரசு, இந்தியாவில் விளைந்த தானியங்களைத் தங்கள் தேவைகளிற்காகத்திருப்பி விட்டதனாலேயே கல்கத்தா தெருக்களில் ஏழை மக்கள் உணவிற்கு வழியின்றிச் செத்து மடிந்தார்கள்.இதை ஒரு படு கொலையாக ஏன் உலகம் கணிப்பிடவில்லை? ஹிட்லரினால் அழிக்கப்பட்ட ஐரோப்பிய யூதர்களைப்போலவேஇந்த மக்களும் சேர்ச்சிலினால் கொல்லப்பட்டனர். நாசிப் படுகொலைகளை பயங்கரமான ஒரு மனிதஉரிமைமீறல் என்ற வரையறைக்குள் கொண்டு வரும்போது சேர்ச்சிலின்கொள்கையினால் கொல்லப்பட்ட அந்த வங்காள மக்களின் படுகொலையை எந்த வரையறையினுள் கொண்டு வருவது? பட்டினியால் மாண்டுபோன அந்த வங்காள மக்களிற்கு, நாசிகளினால் இறந்து போன யூத மக்களிற்கு இருந்த உரிமைகள் இருக்க வில்லையா?

கொடுமையும், சோகமும் நிறைந்ததாக ஒன்றையும், அதேயளவு கொடுமைகள் நிறைந்த இன்னொன்றை வெளியே தெரியப்படுத்தக்கூடாத ஒன்று என்றும் யார் தீர்மானித்தார்கள்? சிறையில் அடைப்பதும்.சித்திரவதைப்படுத்துவதும் தான் மனிதஉரிமைமீறல் என்றும் பட்டினியால்க்கொடுமைப் பட்டுச் செத்துப் போவது ஒன்றும் மனித உரிமை மீறல் அல்ல என்னும் ஒரு நிகழ்ச்சிநிரலை ஏற்படுத்தியவர்கள் யார்? அத்துடன் குறிப்பிட்ட சில நாடுகளிற்கு சர்வதேச மத்தியஸ்த்தர்களாக இருப்பதற்கும், தங்களின் சொந்தக் கைகளில் உள்ள இரத்தத்தை அலட்சியப் படுத்துவதற்கும் என்ன உரிமை இருக்கிறது?

ஏழைகள் எப்போதுமே முதன்மைப் பட்டு இருக்கவில்லை. இது இப்போது மட்டுமல்ல,இதுதான்எப்போது மேல் நிலையாகஇருந்துவந்துள்ளது. வரலாறு மீண்டும் அதை உரிய முறையில் "புதியஉலகஒழுங்கு" என்னும் பெயரில் செய்கிறது. காலனித்துவத்தின் புதிய ஒரு திறமையான வடிவம்தான் இந்தப் புதிய உலக ஒழுங்கு. இந்தப் புதிய பிரகடனமானது மிகவும் பயங்கரமானது. முன்பு எதிரி கண்ணால்ப் பார்க்கக் கூடியவனாக இருந்தான். இன்று உலகின் அபிவிருத்தியடைந்து வருகின்ற மூன்றாம் உலக நாடுகளின் மக்களால் சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப் பட்ட அரசுகள், சக்தி வாய்ந்த மேற்குலக நாடுகளினால் அதிகாரம் செய்வதற்காகச் சுவீகரிக்கப் பட்டுள்ளன. உலக வங்கியும், சர்வதேசநாணயநிதியமும் "கட்டமைப்பைச் சரிப்படுத்தல்" (structural adjustment) என்னும் ஒழுக்கக் கேடானசொற்தொகுதியை அபிவிருத்திக்கான அகராதியில் சேர்த்துள்ளன. நீங்கள் உங்கள் சந்தைகளைத் திறந்து விடுங்கள். நாங்கள் மதிப்பு இடுகிறோம். பொதுச் செலவினங்களை வெட்டுங்கள். இலவசசுகாதாரம், உணவு, மானியங்களை அகற்றுங்கள்.(மக்கள் இதனால் இறக்க நேரிட்டால் சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். அதுஒரு மேலதிக போனஸ் போன்றது) ஊதிய உயர்வுகள் நிறுத்துப் பட வேண்டும். ஏற்றுமதிக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருட்களை உற்பத்தி செய்யுங்கள். இவை எல்லாவற்றையும் பிழை விடாமல்ச் செய்யுங்கள் அல்லதுநாங்கள உங்களிற்குத் தடைவிதிப்போம்என்று அபிவிருத ்தியடைந்து வரும் நாடுகளைப்பார்த்து இந்த வங்கிகள் மிரட்டுகின்றன.

தென்னாசியக் கண்டத்தின் வல்லரசாகத் துடிக்கும் இந்தியா கூட புதிய உலக ஒழுங்கமைப்பை ஏற்று அதன்வழியேநடைபோடத் தொடங்கி விட்டது.நாற்பது வருடநேரு? சோச லிசத்தினை முடிவுக்குக் கொண்டுவந்து தாராள பொருளாதாரக் கொள்கை, தனியார் மயமாக்கல், சுதந்திரவர்த்தக வலயங்கள்—சந்தைகள் என்று நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான நடவடிக்கைகளினால் பயங்கரமான விளைவுகளே ஏற்பட்டுள்ளன என்பதற்குச் சாட்சிகளாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமரிக்க நாடுகள் ஏராளமாக உள்ளன.இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக கடந்த வைகாசி மாதத்தின் வரவு—செலவுத் திட்டமானது பகிரங்கமாகவும், வெட்கமற்றமுறையிலும் பணக்காரர்களைத்திருப்தி செய்வதற் காகவே கொண்டு வரப்பட்டுள்ளது. குளிர் சாதனப் பெட்டிகளும், கார்களும், தொலைக்காட்சிப் பெட்டிகளும் விலை குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவில் மிக உண்மையிலேயே முக்கிய பயன்பாடுள்ள பங்கீட்டரிசியானது விலையுயர்த்தப் பட்டுள்ளது. சனத் தொகையில்மூன்றுவீதமான வசதிபடை த்தவர்களைத் திருப்தி செய்துள்ள அதே வேளையில் தொண்ணூற்றி ஏழு வீதமான மக்கள் தனிமைப்படுத்தப் பட்டும், நம்பிக்கையற்றும் போயுள்ளார்கள்.

சிறந்த இரகத்தைச் சேர்ந்த வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியொன்றின விலையானது ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறால் குறைக்கப் பட்டுள்ளது. தங்கள் பிள்ளைகளின் படுக்கையறைக்காக இரண்டாவது தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குமாறு விளம்பரங்கள் பணக்காரர்களின்ஆர்வத்தைத் தூண்டு கின்றன. இதனிடையே ஒருகிலோ எடை அரிசியானது சுமார் ஒரு ரூபாய் அளவினால் அதிகரித்துள்ளதனால் ஏழைக குடும்பங்களின் அரிசி நுகர்விலும் குறைவை ஏற்படுத்திவிட்டுள்ளது. உதாரணத்திற்குதேயிலைத் தோட்டங்களின் வேலை செய்யும் சிறப்புத் தேர்ச்சி பெறாத சாதாரண தொழிலாளி மாத வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் ரூபா எண்ணூறில், ரூபா எழுநூறை உணவுக்காக மட்டுமே செலவிடுகிறான்.அதேவேளை வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கக் கூடிய ரூபா பத்தாயிரத்திற்கு மேலாக மாத வருமானம் பெறுபவர்கள் வருமானத்தில் மூன்றிலொருபகுதியைத்தான் உணவி ற்காக செலவிடுகிறார்கள்.

இவ்விதமாய் பெருமையுடனும், அதிக களிப்புடனும்இந்தியஅரசு அறிவித் திருப்பது ஏழைகள் தங்கள் நலன்களைப் பணக்காரர்களுக்கு பகிர்ந்தளிப்பார்கள் என்பதுதான். ஆனால் தாராள பொருளாதார மற்றும் கட்டமைப்புச் சீர்ப் படுத்தல் போன்றவற்றின் விளைவுகளை ஏழை மக்கள் ஏற்கனவேயே அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். போசாக்கு இன்மையினால் அவதியுறும், உயிரிழக்கும் ஐந்து வயதிற்கு குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையானது என்றுமில்லாத வகையில் அதிகரித்துச் செல்வதாக சுகாதார, மற்றும் சமூக நலத்திட்டங்களில் பணிபுரியும் தொண்டர்கள் கவலை கொண்டதுடன், நம்பிக்கையும் இழந்து போய் உள்ளார்கள். குழந்தைகளின் பெற்றோர்களினால் போதிய அளவு உணவினை வாங்க முடியாமல் இருப்பதனாலேயே இவ்வாறான நிலமையும் ஏற்பட்டுள்ளது. புரதப் பொருட்களைத் தரக்கூடியதான பருப்பின் விலை அதிகரிப்பானது, ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்கு அரிய பொருளாகி விட்டது. ""நாங்கள் முன்பு வழமையாக ஒரு ரூபாய் பெறுமதியான பருப்பை வாங்கி வந்தோம் ஆனால் இப்போது அவ்வாறு கேட்டால் கடைக்காரன் ஆத்திரங் கொள்வதுடன் வெளியே போ என்று துரத்தி விடுகிறான்"" என்று கவலைப் பட்டுக் கொண்டாள் காலி என்ற மலைஜாதிப் பழங்குடியைச் சேர்ந்த சுகாதாரத் தொழிலாளி. ""பருப்பு இல்லை என்றால் பரவாயில்லை. நாங்கள் முன்பு சோற்றினால் எங்கள் வயிறுகளை நிரப்பினோம். இப்போது, பசியுடனும், இன்னும் கொஞ்சம் உணவிருந்தால் வயிறு நிறைந்து திருப்தியாக இருக்கும் என்றஉணர்வுடனும் இரவு படுக்கைக்குப் போகிறோம்"" என்று தொடர்ந்தாள். இவ்வாறாக ஏழை மக்கள் பெருமளவில் புரதப்பற்றாக்குறைவைஎதிர ்நோக்கு வதுடன்,அதிகளவில் அரிசியையே நம்பியும் உள்ளார்கள். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள அரிசி விலையேற்றத்துடன் குறைந்தஅளவினையேஉட் கொள்ளக் கூடியதாய்இருப்பதனால் அவர்களது உடல்நலம் குறிப்பாக பெண்களும், குழந்தைகளும்பெருமளவில் பாதிப்படை கிறார்கள்.

வறுமையினாலும், போசாக்கினாலும் இறந்து கொண்டிருக்கிறார்கள். அம்மை, வாந்திபேதி, மார்பு(சுவாச) நோய்கள், போசாக்கின்மையினால் வாடும் குழந்தைகளை இலகுவில் தாக்கிக் கொல்கின்றன. ஆனால் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விலைகளைக் குறைத்து, அரிசியின் விலையை அதிகரித்த அரசாங்கம் இதற்கான பொறுப்பை எடுக்குமா? அல்லது கட்டமைப்பச் சீர் செய்தல் என்னும் நிபந்தனையை விதிக்கும் உலக வங்கியும், சர்வ தேச நாணய நிதியமும் இதற்கான பழியை(தங்கள் கைகளில் உள்ளது ஏழை மக்களின் இரத்தம்தான் என்பதை) ஏற்றுக் கொள்வார்களா?

இந்தப் பட்டினிச் சாவுகள் மனித உரிமைகள்(மீறல்கள்)என்ற வரையறை யினுள் ஏன் வரவில்லை?

இந்தச்சாவுகளிற்குகாரணமாக இருக்கும் ்நிறுவனங்கள்் (உ .வ , ச, நா. நி) மீது எந்த விதமான அழுத்தங்களும் ஏன் பிரயோகிக்கப்படவில்லை? பதிலாக மேற்குலகம், அடிப்படை மனித உரிமை மீறல்கள்எவைஎன்பதைத் தீர்மானிக் ்கின்றன. உதாரணத்திற்கு தனி நபர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரமானது பெரும்பாலும் எவை. எவைஎன்று(மற்றவர்களைச் சுரண்டு வதற்கான சுதந்திரம் என்பதையும் கூட) தீர்மானிக்கின்றன.

அதே தர்க்க ரீதியான அணுகுமுறையுடன், சுதந்திரமான இந்தஉலகில் ஏழைநாடுகளின் குழந்தைகள் பட்டடினிச் சாவுகளிற்கு ஆளாகிக் கொண்டுஇருக்கும் அதே வேளையில் இன்னொரு புறத்தில் மேற்கு நாடுகள் உலகின் மூல வளங்களை 20மடங்குகள் அதிகஅளவில் தந்திரமாக நுகர்ந்து கொண்டிருக்கின்றன.(உலகசெல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன) அத்துடன் பலவந்தமான புதிய உலக ஒழுங்கமைப்பின் கீழ் தங்கள் நாடுகளின் வாழ்நிலமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தேவைப் படும் போது சந்தைகளை விரிவு படுத்திக் கொள்ளவும் அனுமதியைக் கொண்டுள்ளன.

ஆச்சரியப் படக்கூடிய, எதிர்பாராத விதத்தில், இந்தியாவில் விவசாயிகள்புதிய GATTஉடன்படிக்கையின் பயமுறுத்தலுக்கு எதிராகப் போராட்ட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். அப்படி என்னதான் இந்த விவசாயிகளுக்கு இந்தGATTசெய்யப் போகின்றது பாதகமாக? ஒரு விவசாயியின் பசு போடும் கன்று அவனுக்குச் சொந்தமாக இருக்காதாம். அந்தப் பசு இனம் அமெரிக்காவில் உருவாக்கப் பட்டிருநதால் அது அமெரிக்கக் கம்பனிக்குத்தானாம் சொந்தமாம். இந்த GATTஒப்பந்தத்தின் கீழ் பல் தேசியக் கமபனி ஒன்று விதைகளிற்கான அதிகார உரிமையைப் பெற்றிருந்தால், விவசாயிகள் தங்கள் விதைகளை மீள் நடுகைக்குப் பயன் படுத்த முடியாதாம். விதைகளிற்கு விவசாயிகள் அந்த வெளிநாட்டுக் கம்பனிகளை எதிர்பார்த்து நிற்க வேண்டும். இந்தக கொடூரமான, தந்திரமான திட்டமானது எங்கள் ஏழை நாடுகளின் விவசாயத்தை நிச்சயம் முடமாக்கத்தான் போகின்றது.


விவசாயிகள் சங்கங்கள் இந்தியா பூராகவும் உள்ள தங்கள உறுப்பினர்களுக்கு வரப்போகும் ஆபத்து நிறைந்த சூழலை விளக்கியுள்ளார்கள். பெங்களூரில் பல்தேசியக் கம்பனி ஒன்றின் அலுவலகத்தினையும், களஞ்சியத்தையும் சுற்றி வளைத்த விவசாயிகள் துருவித் துருவி குடைந்து தேடினார்கள். இந்த வகையான வன்முறைகள் அரசாங்கத்தினால் பொறுத்துக் கொள்ள பட முடியாமல் போனதுடன்,இதற்காக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மிரட்டியுள்ளது. ஆனால் ஸ்தாபன மயப் படுத்தப் பட்டுள்ள வெளியாரின் வன்முறைகளிற்கு அனுமதியளிக்கப் படுகின்றது.
மக்கள் பணிந்து விடுவார்கள். அவர்கள் எப்போதும் தங்கள் முகங்களில் பிரம்மாண்டமான வித்தியாசங்களையே கொண்டுள்ளார்கள். சரியான போராட்டத்தலைமை கொடுக்கப் பட வேண்டிய தேவை இங்கு எழுகின்றது. ஆனால் சர்வ தேச அளவில் சிறிய அழுத்தங்கள் கொடுக்கப்படுவது உதவியாக அமையும். மனித உரிமைகள் விடயத்தில் கவனஞ்செலுத்துபவர்கள் புதிய பார்வையை செலுத்த வேண்டிய நேரமிது. மூன்றாம் உலக மனிதனின் உயிர் வாழ்வதற்கான உரிமையை கவனத்தில் எடுக்கவேண்டும். புதிய உலக ஒழுங்கமைப்பின், உலக ரீதியிலான பயங்கரவாதத்தின் கீழ், அந்தத் தீயில் எங்கள் மக்கள் வெந்து கொண்டு இருக்கிறார்கள். பலர் ஏற்கனவே, இந்தப் பூமியின் முகத்திலிருந்து துடைத்து எறியப்பட்டும் விட்டார்கள்.

— கஜன் —

## மக்களின் உயிர் மூச்சைக் கொண்டு

**நீ துண்டித்த தலையை**
**மக்கள் எனக்குத் திருப்பித் தருவார்கள்**
**நீ தோண்டியெடுத்த கண்கள்**
**காலத்தின் விழிகளாகும்**
**நீ வெட்டியெறிந்த விரல்கள்**
**ஒடுக்கப் பட்டோரின் சகாப்தத்தை எழுதும்**
**மக்களின் உயிர்மூச்சைக் கொண்டு**
**வரலாறு உனது தற்காலிக வெற்றிகளுக்கு**
**நிரந்தர சமாதிகட்டும்.**

*1981 இல் ஆந்திரப் புரட்சியாளரான பெட்டி சங்கர் போலிசாருடன் நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப் பட்டடபோது சிவசாகர் என்ற கவிஞ்ஞனால் எழுதப்பட்ட கவிதை.*



வடிவுரிமை பதிவு பெற்ற பசு ஈனும் கன்று கூட விவசாயிக்குச் சொந்தமாக இருக்காது. அந்தப் பசு ரகத்துக்கான வடிவுரிமை பெற்ற கம்பெனிக்கே சொந்தமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடலின் பக்கங்கள்

## வாழ்வு மறுக்கப் பட்ட மூன்றாண்டுகள்

இலங்கை சுதந்திரமடைந்த காலங்களிலிருந்தே சிறுபான்மைத் தேசிய இனங்கள் பௌத்த சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு இலக்காயின. மேலும் இலங்கை முஸ்லீம்கள் பௌத்த சிங்கள இனவாதத்தால் மட்டுமன்றி தமிழ் தேசியத் தலைமைகளாலும் புறக்கணிக்கப் பட்டு வந்துள்ளனர். எண்பதுகளின் நடுப்பகுதிகளில் ஆரம்பமான முஸ்லீம் மக்கள் மீதான வன்முறைகளில் பிரதான தமிழ் இயக்கங்கள் எல்லாமே பங்கெடுத்துக் கொண்டன. இத்தகைய தமிழ் தேசியவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடே முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை. சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப் பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்தும் அவர்கள் மீளக்குடியமர்வதற்கான எந்த நடவடிக்கையும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை. வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் புத்தளத்திலும், கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் உள்ள அகதிமுகாங்களிலேயே தொடர்ந்தும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அகதி வாழ்வின் அவலம், பசி, பட்டினி, நோய், நிச்சயமற்ற எதிர்காலம் இவையே முஸ்லீம் மக்களின் அன்றாட வாழ்வாகிவிட்டது. இவற்றிலிருந்து மீள்வதற்கான ஒரே தீர்வு எந்தவித நிபந்தனையும் இன்றி முஸ்லீம் மக்கள் அவர்களின் சொந்த நிலங்களிலே மீளக்குடியமர்வதே! தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித நிபந்தனையுமின்றி முஸ்லீம் மக்கள் மீளக்குடியமர்வதை அங்கீகரிக்க வேண்டும். இன்னுமொரு தேசிய இனத்தை ஒடுக்கும் எந்தத் தேசிய இனமும் தனது தேசிய விடுதலையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. இதன் அடிப்படையில் பௌத்த சிங்களப் பேரின வாதத்திற்கு எதிராகப் போராடும் நாமே தமிழ் தேசிய வாதத்தின் சரியான நிலைகளை வெளிக்கொணரும் முகமாக முஸ்லீம் மக்களின் அரசியல், சமூக, வாழ்நிலை உரிமைகளிற்காக குரல் கொடுப்பது அவசியமாகிறது. அன்று தொட்டு தமிழ் தேசியத் தலைமைகள் முஸ்லீம் மக்களின் தனித்துவமான மதம், கலாச்சாரம், அரசியல், என்பவற்றில் மேலாதிக்கம் செலுத்தி வந்ததை வன்மையாகக் கண்டிக்க வேண்டியவர்களாகிறோம். பௌத்த சிங்கள அரசு இலங்கையின் இனப் பிரச்சனையில் முஸ்லீம் மக்களைப் பகடைக் காய்களாக்கி தமிழ் முஸ்லீம் மக்களிடையே குரோதத்தை வளர்ப்பதற்கு எதிராகவும் இலங்கையின் தேசிய இனங்களின் மீதான ஒடுக்கு முறை யுத்தத்திற்கு எதிராகவும், தமிழ், முஸ்லீம் மக்களிடையே ஐக்கியத்திற்கான முன்நிபந்தனைகளை ஏற்படுத்தக் குரல் கொடுப்போம்.

அழைப்பாளர்கள் — **விழிப்பு, C. D.S.L . சரிநிகர், தாயகம், தமிழோசை, பொதிகை, புன்னகை மலர், ரோஜா, தமிழர் வகைதுறைவள நிலையம், காலம் நான்காவது பரிமாணம், இளைய நிலா**

> **"இன்னொருநாட்டை ஒடுக்குகின்ற எந்த நாடும் தனது விலங்குகளைத் தானே சூடிக்கொள்கின்றது"**
>
> மார்க்ஸ்

www.tamilarangam.net



# புலிசார்பு என்ற வியாபாரமும் பலியான முஸ்லீம் சகோதரனும்

எரிகின்ற வீட்டில் பிடுங்கியவரை இலாபம் என்பார்கள் அதையும் விற்றவரை இலாபமாக்க எம்மில் ஒருசிலரால் மட்டும்தான் முடியும் முஸ்லீம் மக்களின் வாழ்வுரிமை தொடர்பாக கனடாவில் பரந்துபட்ட வெகுஜன ஸ்தாபனங்களை அழைப்பாளர்களாக கொண்டகூட்டமைப்பின் கூட்டம் பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே கூட்டத்திற்கு எதிரான வேலைகள் கனடாவில் மும்முரமாகத் தொடங்கின செந்தாமரைமஞ்சரியில் ஜெயராஜ் தனது முதல் பக்கத்தில் இரண்டு முஸ்லிம்களினூடே (பலிக்கடாக்கள்) தனது வேண்டுகோளை தமிழ் மக்களிற்கு விடுத்தார். அதனூடே தமிழர் வகைதுறை வளநிலையம் மீதான காழ்ப்புணர்சியையும் வெளிகொணர்ந்தார்

தயவு செய்து எங்களைப் பாவிக்காதீர்கள் என்றபெயரிடப்பட்ட செய்திக்கட்டுரையில்...

**வடக்கிலிருந்து முஸ்லீம்கள் விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியான காலகட்டமிது. புலிகளின் செயற்பாட்டைக் கண்டித்து அஸ்ரப்பின் தலமையிலான முஸ்லீம் காங்கிரஸ் இலங்கைப் பள்ளிவாசல்களில் "துவா"ப்பிராத்தனையும் மதிய தொழுகை வேளையை அடுத்து சுலோக அட்டை ஆர்பாட்டமும் நடத்தி வருகிறது. அத்துடன் இலங்கை அரசின் மறைமுக ஆதரவுடன் வெளிநாடுகளிலும் இது பற்றி பிரச்சாரம் செய்ய முற்படுகிறது. இதற்கு வெளிநாட்டில் உள்ள சில அமைப்புக்களின் உதவியும் கோரப்பட்டு வருகிறது. இங்கே கனடாவில் ரொரன்ரோ நகரில் இயங்கிவரும் தமிழர் வகைதுறைவள நிலையமும் வடக்கில் இருந்து முஸ்லீம்கள் துரத்தப்பட்ட மூன்றாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சில முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.....**

வழமையில் வீரகேசரியையும் ஐலண்டையும் மறுபிரசுரம் செய்யும் ஜெயராஜ் முஸ்லீம்களின் பிரச்சனையில் மாத்திரம் விதி விலக்காக நடந்து கொண்டார் என்பதற்கில்லை. இருட்டடிப்பு என்பது இவர்களின் தொழில் உடன்பாடு இங்கே நாம் வீரகேசரியைக் குறிப்பிடுவதன் காரணம் வீரகேசரியில் வந்த கொழும்புவாழ்யாழ் முஸ்லீம்கள் உலகத் தமிழருக்கு விட்ட வேண்டுகோளை இருட்டடிப்புசெய்து கனடாவில் உள்ள இரண்டு முஸ்லீம்களின செய்தியை ஒட்டுமொத்த அகதிகளின் கருத்து போன்று வெளிப்படுத்தினார்

**"எங்களை வாழவிடுங்கள்" என்று தலைப்பிட்ட அறிக்கையில்**

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களை மீண்டும் அவர்களது சொந்தமண்ணில் வாழ அனுமதிக்குமாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தை தூண்டுமாறு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புக்களிடமும், மூத்த தமிழ்பிரஜைகள், தமிழ் அறிஞர்களிடமும் மனிதநேயம் படைத்த தமிழ்மக்களிடமும், யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம் அகதிகள் சங்கம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றது. இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம் அகதிகள் சங்கம் அறிக்கையொன்றை பத்திரிகைகளுக்கும், ரொறொன்ரோ நகரில் 21. 11. 1993 அன்று முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்தை கண்டித்து நடைபெற்ற கூட்டத்திற்கும் அனுப்பிவைத்திருந்தது.

இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

***தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இனப்பிரச்சனையை தீர்த்து வைப்பதற்குப் பதிலாக அதை மேலும் தீவிரமாக்கியே வந்திருக்கின்றன. இன்று இனப்பிரச்சனை தமிழர்களுக்கும் அரசுக்கும் இடையிலான ஒரு பெரிய போராக மாறிவிட்டது. சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஐக்கியப் படுத்துவதற்குப் பதிலாக அவ்விரு சமூகங்களையும் பேதங்களை வளர்க்கும் நோக்குடனேயே எங்கள் தலைவர்கள் செயற்பட்டு வந்துள்ளார்கள். இது போன்றே வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் விரட்டப்பட்ட கைங்கரியமும்,முஸ்லீம் மக்களையும் தமிழ் மக்களையும் நிரந்தரமாக பிரிப்பதை நோக்கமாக கொண்டதாகவே கருத வேண்டியிருக்கிறது.***

*மூன்று வருடங்களுக்கு முன்னர் வடக்கு முஸ்லீம்கள் தங்களது உடைமைகள் சகலதுமே அபகரிக்கப் பட்டநிலையில் அங்கிருந்து வெளியேற்றப் பட்டார்கள். இன்று அவர்கள் ஊரற்றவர்களாக உடைமையற்றவர்களாக அகதிகளாக தென்னிலங்கையில் பரிதாப வாழ்க்கை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுவதாக உரிமைகோரும் புலிகள் இயக்கத்தினர் அரசுக்கெதிரான போரிலே முஸ்லீம்மக்களை தங்களது பகைவர்களாக்கிக் கொண்டு செயற்படுவது ஒரு சரியான தந்திரோபாயமும் அல்ல. இந்த உண்மையை புலிகள் இயக்கத்தினருக்கு வலியுறுத்தி உணர்த்துமாறு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புக்களிடமும் மூத்ததமிழ்ப்பிரஜைகள், அறிஞர்களிடமும் நாம் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறோம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கிலிருந்துவெளியேற்றப்பட்ட சகல முஸ்லீம்களையும் மீண்டும் வடக்கில் வாழ அனுமதிக்குமாறும், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 37 முஸ்லீம் இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு புலிகளைத்தூண்டுமாறும் .இவர்களிடம் நாம் கோருகிறோம். வடக்கு முஸ்லீம்கள் தென்னிலங்கையில் படும் அவலங்களை மனதில் கொண்டு இது விடயத்தில் உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். தமிழ், முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தின் மேல் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து சமாதானத்தை நிலைநாட்டுவோம்..........

இங்கு ஜெயராஜ் கனடாவில் உள்ள தமிழ்பேசும் மக்களிற்கு முஸ்லீம்களின் பிரச்சனையை வெறும் மூன்றாம்தரப் பிரச்சனையாக்கி உண்மைக்கு சாவுமணிஅடித்தார். புலிகளின் ஊதுகுழல் உலகத் தமிழர் பத்திரிகையே இது தொடர்பாக எந்தவிதமான கருத்தும் வெளியிடாமல் மௌனியாக இருந்தபோது ஜெயராஜ் ஒட்டுண்ணி போன்ற நிலையை வெளிப்படுத்தி (தயவுசெய்து எங்களைப் பாவிக்காதீர்கள் என்ற அப்பாவி முஸ்லீம்களின் கோசத்தையே பாவித்து) விற்பனை இலாபம் தேடினார். இங்கு புலி சார்பு என்பது நல்ல தந்திரமான பத்திரிகை வியாபாரமாகும். இங்கு நடை பெறும் புலிசார்பு வியாபாரப் போட்டியில் தற்போது ஜெயராஜ் முதலிடம் வகித்தாலும் கால ஓட்டத்தில் யாராவது ஒரு விண்ணன் இவரைத் தோற்கடிக்கலாம். அப்போது இவர்களின் நிலை புலி அரசு தவிர்ந்த மூன்றாவது நிலையாக இருக்கும்.

**வாழ்வுமறுக்கப்பட்ட மூன்றாண்டுகள் என்ற பொதுகூட்டம் தொடர்பாக..........**

யாழ் முஸ்லீம் மக்கள் புலிகளினால் தமதுசொந்த பிரதேசங்களை விட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட 3வது துயரம் தொடரும் ஆண்டில் புலிகளின் பாசிசத்தன்மைக்கு எதிரான தமிழ்பேசும் 'மக்களின் வெகுஜன குரலின் அவசியத்தை வலியுறுத்தி கனடாவில் வெகுஜன ஸ்தாபனங்கள் பத்திரிகைகள் கொண்ட ஓர் அழைப்பாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு **விழிப்பு. தமிழோசை. தாயகம். பொதிகை. ரோஜா. தமிழர் வகைதுறைவள நிலையம். இளயநிலா. C.D.S.L, நான்காவதுபரிமாணம். காலம்** அதன் செயல்வடிவமாக வாழ்வுமறுக்கப்பட்ட மூன்றாண்டுகள் என்ற பொதுக்கூட்டமும் நடாத்தப்பட்டது. இப்பொதுகூட்டத்தில் பேச்சு. கவியரங்கு. கலந்துரையாடல் என்ற நிகழ்ச்சிநிரல் அமைக்கப்பட்டிருந்தது

ஜனநாயகக்கருத்துப்போக்குகளையும். முரண்பட்ட நடை முறைகளையும் கொண்டவர்களினால். இத்தகைய ஓர் உணர்வு பூர்வமான செயலை முன்மாதிரியாக முனைந்ததும். அது செற்படுத்தி முடிக்கப்பட்டதும். இன்றைய சூழலில் மிக மிக வரவேற்கபட வேண்டிய அவசியமான செயற்பாடுகளே. புலிகளின் "முஸ்லீம் மக்களின் மீதான" பாசிச நடவடிக்கையானது ஒட்டுமொத்த தமிழினத்தினத்தையும் சைவத்தமிழ் என்ற குறுந் தேசிய புதைகுழிக்குள் மூழ்கடிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுவிட்ட நிலையில். இதற்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் வெகுஜன ரீதியான கூட்டுச் செயற்பாடுகளின் அவசியத்தை காலம் மீண்டும் மீண்டும் கோரி நிற்கிறது. நடந்து முடிந்த நிகழ்வைப்பார்க்கும் போது இது கனடாவில் இருக்கும் தமிழ் பேசும் மக்களின் மனிதாபிமான உணர்வுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டியுள்ளது.



தமிழ்மக்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதிகளாக வலிந்துநிற்கும் புலிகளின் (மாபெரும் பிரபாகரனின்) இந்தப் பாசிச நடவடிக்கை ஏதோ ஒரு இராஜதந்திரம் எனவே நீங்கள் எல்லோரும் வாய்மூடி கைகட்டி சும்மா இருங்கள் என்ற புலிகளினதும் அவர்களின் தொங்கு தசைகளினதும் பிரச்சாரத்தை எதிர்த்த முறியடிப்பாகவே மேற்படி கூட்டம் அமைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் மண்ணிலிருந்து துரத்தப்பட்ட ஒரு அகதியின் கண்ணீர்!

**1990**ம் ஆண்டின் வசந்தகாலமொன்றின் இறுதிப்பகுதியின், ஒரு காலைப்பொழுதில் ஒன்றுமேயறியாத நான், எனது பிறந்த மண்ணிலிருந்து நிர்ப்பந்தமாக துரத்தியடிக்கப்பட்டேன். எனது கண்களும் எனது காதுகளும் எனது நெஞ்சமும் நெருப்பாய் எரிந்தது. எதுவும் புரியவில்லை. எதற்காக நாம் எமது மண்ணிலிருந்து செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறோம், என்பதை யாரிடமும் கேட்டுப்புரிந்து கொள்ள சந்தர்ப்பமும் இருக்கவில்லை. துப்பாக்கியும் கொடூரமும் நிறைந்தவர்கள் எங்களை திருப்பி அனுப்புவதிலேயே கண்ணாய் இருந்தார்கள். வார்த்தைக்கு பதில் வார்த்தை கூறக்கூட நாம் அனுமதிக்கப் படவில்லை. மூச்சு விடுவதற்குக்கூட அவர்களையே கேட்கவேண்டியிருந்தது. உடுத்தியிருந்த ஆடைக்கு மாற்று ஆடை எடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கப் படவில்லை. எனது நேசத்துக்குரிய எனது சிறிய வீடு துண்டு துண்டாக உடைத்து சிதறடிக்கப்பட்டதாகவும், எனது வீட்டிலிருந்த பொருட்கள் பங்கிடப்பட்டதாகவும் பின் நாட்களில் நான் அறிந்தேன்.

1990ம் ஆண்டின் ஒரு காலைப் பொழுதில் எனது கனவுகளும் இளமையும் சிதைந்து போனது. எதுவுமே புரியவில்லை, நான் மட்டுமல்ல ஆயிரக்கணக்கான மக்கள் என் நிலையைவிட மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். குழந்தைகள், முதியவர், பெண்கள், இளைஞர்கள் உட்பட உலகமே சூனியவெளியான பிரமையால் அனைவரும் திக்கு தெரியாமல் கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தனர்.

உறவுகளைவிட மேலான எனது நண்பர்கள், எனது அயலவர்கள் இந்நிலையை ஒரு போதும் அனுமதிக்கவில்லை. எங்களைபற்றிய கடந்தகால நினைவுகளை இப்பொழுதும் சோகமாக நினைவு கூர்வதாக நான் அறிந்தேன். ஆயிரமாயிரம் கண்கள் எங்கள் பிரிவின்மேல் சோகம் கப்ப அசையாது இருந்ததை நான் மறந்து விடவில்லை. இன்று நேற்று ஏற்படுத்திய பிணைப்பா இது? எனது தகப்பன், தகப்பனின் தகப்பன் எனது மூதாதையர்கள். அந்த மண்ணிலேயே பிறந்தார்கள். வளர்ந்தார்கள். ஆணிவேர் அறுத்த மரமாக நீண்டநாளைய உறவை, உணர்வை இழந்தவர்களாக நாம் காணப்பட்டோம்.

ஆயிரமாயிரம் வேதனைகள் ஆத்மா மேல்கனக்க வழி தெரியாது என்னுடன் இருந்தவர்கள் காணப்பட்டார்கள். எனக்கோ நான் பிறந்த வீடு, எனது சுற்றம், நான் பாதம் பதித்து நடந்த மண், நான் படித்த பாடசாலை , என்பால்ய காலம் முழுவதும் என்னுடன் கைகோர்த்து வந்த எனது நண்பர்கள், இவைகளை மறக்க நான் நிர்ப்பந்திக்கப் பட்டேன். இவைகளை நான் எப்படி மறக்கலாம்? எனது ஆத்மாவை நான் மாற்றலாமா? எனது இரத்தமும், எனது உணர்வுகளும், நான் பெற்றிருக்கும் கல்வியும், இந்த மண்ணிலிருந்து இந்தக்காற்றையே சுவாசித்தே நான் பெற்றேன். எப்படி நான் இந்த மண்ணைவிட்டு போவேன். எப்படி நான் இந்த மண்ணை விட்டுப்போவேன். இதுவே எனக்கு ஏக்கமாக இருந்தது. . . .

சில மணி நேரத்திற்குள் ஆயிரமாயிரம் மக்கள் மந்தைகள் போல் குவிக்கப்பட்டோம். ஏதோ சொன்னார்கள். துப்பாக்கியும் கொடூரமும் நிறைந்த அவர்கள் அப்பாவியான மக்களின் பேரால். மக்களுக்காகவே போராடுவதாக சொன்னார்கள். இன்னும் ஏதேதோ சொன்னார்கள். யாரும் அழுவதைத் தவிர வேறொன்றுமே செய்யமுடியாதிருந்தனர்.

எல்லோருமே இன்னும் ஒருமணி நேர அவகாசத்திற்குள் புறப்படணும் என்ற கொடூரமிக்க கட்டளை வந்ததும் எனது ஆத்மா மீது இடி விழுந்தது. நான் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியைப் போல். உலகமே என் பாதங்களை விட்டு நழுவியது போல். பாதாள உலகில் முகம்குப்புற நான் காத்திருப்பது போல். உணர்ந்தேன். எனது இளமை வாழ்வில் வேதனை மிக்க துன்பகரமான இச்சூழலை எதிர்கொள்ள வேண்டுமென நான் ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை. எந்த இளைஞனும் யுவதியும் இந்நிலையை வாழ்வில் அனுபவிக்கக்கூடாது. என்பதே எனது பிரார்த்தனையும்.

பகலின் மீது இருள் கவிழத்தொடங்கிய போது எனது மண்ணை விட்டு நாங்கள் புறப்பட்டோம் எங்கே செல்கிறோம்? என்ன செய்யப்போகிறோம்? எதிர்கால வாழ்வு எப்படியிருக்கும் என்று தெரியாத நிலையில்! அனைத்தும் இருண்டு போய் இருளின் ஊடே எங்கள் பயணம் தொடர்ந்தது.

இன்று எமது மண்ணிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள பிரதேசத்தில் அகதியாக அல்லல்படுகிறோம். இருப்பதற்கு இடமில்லை. உண்பதற்கு உணவில்லை, துன்பங்கள், அவலங்கள் எங்கள் மேல் கவிந்திருக்கிறது. எங்களை வெளியேற்றியவர்களை அந்த மண்ணில் இருப்பவர்கள் இன்னும் வெறுக்கிறார்கள் என்பதை நான் சந்திக்கும் சகோதரர்கள் இன்னும் வெளிப்படுத்துகிறார்கள்.

எனது நம்பிக்கை இதுதான். எனது வாழ்வின் முடிவு எனது மண்ணிலேயே முடியவேண்டும். "எப்போதாவது ஒரு நாள் எனது பாதம் பட்ட எனது சொந்த பூமியை நான் முத்தமிடுவேன்." அது வரை என் உயிர் போய்விடக்கூடாது. இது எனது நம்பிக்கை மட்டுமல்ல ஆயிரமாயிரம் எம்மவர்களின் நம்பிக்கையும்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாரை நோகடித்தோம்

காதைக் கடுக்கும் பனியுறைப் பொழுதில்
என் நெஞ்சைக் கடுக்கும் கவிகூற விளைகிறேன்

மூன்றாண்டுகள்
மண்ணிலிருந்து அகற்றப் பட்டு மூன்றாண்டுகள்
மனிதன்பால் மனிதனுக்குள்ள
அகதியின்பால் அகதிக்குள்ள ;நேயத்தால்
துன்பங்களை, துயரங்களை
அறிந்ததில், உணர்ந்ததில், அனுபவிப்பதில்
அதன் விளைவில்
கோரங்களை கோர்க்க விளைகிறேன்.

வன்னிக் காட்டில் எனதூர் அருகே
எம்போன்றோர் வாழும் தரை
எம்போன்றோர் விதைக்கும் நிலம்
எம்போன்றோர் பேசும் மொழி
எம்போன்றோர் குலவும் இடம்
எம்போன்றோர் வளர்ந்த மண்
ஒரு முஸ்லீம் கிராமம்
ஆண்டியாபுளியங்குளமெனும் சிற்றூர்

குண்டுக்காக்காவெனும் ஒரு தாத்தா
தள்ளாத வயதிலும் வீடுதேடி வருவார்
வந்தவுடன் அவர் கைப்பையில் வருவதை
பிரித்துண்பதே எம் வேலை
திண்ணையில் இருந்து பலவும் கதைப்பார்
அவர் தன் பேத்திக்கு சம்பந்தமும் பேசுவார்
நானும் சிரித்துக்கொண்டே,
"இனி என்னால் சுண்ணத்தா செய்துகொள்ள
முடியும்" என்பேன்
இப்படித்தான் எங்கள் உறவு
கள்ளம் கபடமற்றது.

நோன்பு நாட்களிலும்
புதுவருட, பொங்கல்களிலும்
விருந்தோம்பல்களும் இருக்கும்
இப்படிப் பலவும் தொடரும்
இனிய நட்பு, இனிய உறவு

இனவாதப் பேரிரைச்சலில்
செட்டிகுளமெனும் ஓர்தரைஊர்ந்தது
மக்களோ வேர்விட்டகன்றனர்.
எத்தனை காலம் வாழ்ந்திருந்த மண்
எத்தனை கனவுகளை நனவாக்கிய மண்
சொந்த மண்ணிலிருந்து அகன்று செல்வதுபோல்
ஓர் துன்பமே
இம் மேதினியில் மிகப் பெரிய துன்பமென்பேன்
அதுவும் இவ்வாறே
காலையில் ஒலிபெருக்கியுடன் நுளைந்த
சிங்கள இராணுவம்
இருபத்திநான்கு மணிநேரத்துள்
மண்ணைவிட்டு அகலுங்கள் என எச்சரித்தது
ஆயினும் தம் இருப்புக்களை காவ
உடமைகளை எடுத்துச் செல்லக்கூட
எதிரி அனுமதித்திருந்தான்
கால்நடையாகவும், மாட்டுவண்டில்களிலும்,
உழவு இயந்திரங்களிலும்
கண்ணீர் சிந்தி மண்ணைவிட்டகன்ற பொழுதுகள்
இன்னும் என்மனதில் முதிரத்தில் வலியதாயுள்ளது

இராணுவ முனைப்பில் எப்போதும்
உயிரற்றுப் போகும் காலம்
குறிபார்க்கும் துப்பாக்கிகளிடை
எப்போதும் உயிரற்றதே எம்வாழ்வு
அப்போதெல்லாம் உயிர் தந்தது
அக் குக்கிராமம்

'அல்லா' வின் பேரால்
அரவணைத்திருந்தனர் அம் மக்கள்
வாப்பா, உம்மாவென
அவர்களிடை அவர்களாய்
வாழ்ந்திருந்த நாட்கள்
என் உயிரிடை உயிராய் உண்டு

மூன்றாண்டுகள் முன்பாய் ஓர்நாள்
அன்று
'அதட்டல்களும் நீட்டிய துப்பாக்கிகளும்"
'உடுத்த உடையுடன் வெளியேறுக"
எனப் பணித்தன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாமே உயிரற்றுப் போயின
யாருமே எதிர்பார்த்திலர்
அதுவும் சொந்தச் சோதரினால்

யார் மொழிந்தார் சொல்க
எதிரியிடமிருந்து கற்ற கல்வியோசொல்க
போரின் மகிமை இழந்தோம்
நட்பைத் துறந்தோம்
நம்பிக்கையைச் சிதைத்தோம்

பேரினத்தின் காலில் மிதையுண்டு கிடந்தோம்.
ஒன்றாய் வாழ்ந்து ஓர் மொழி பேசி
பேரினக்காலை முறிக்கவெழுந்த
பல தோழரை இழந்தோம்
நம்பிக்கையை முறித்தோம்

மன்னார்
உயிலங்குளம் விட்ட மக்கள் அங்கு
பலமைல் நடந்து கர்ப்பிணிகள்
கருச்சிதைந்ததும்
சிசுப் பேறுகள் காட்டுப்பாதையோரங்களில்
நிகழ்ந்ததுமென
நீண்டவோர் துன்பம் சொன்னார் என் நண்பர்
யாரை நோகடித்தோம். யாரை நொந்து கொண்டோம்
அவர்களும் எம் மக்களே
அவர்களுக்கும் எம் மண்ணே

எதிரிகள் யார் ?
துரோகிகள் யாரெனப்
புரிந்து கொள்ளத் தெரியாத துப்பாக்கிளை
நான் எப்போதும் மன்னிக்கேன்
நாம் எப்போதும் மன்னிக்கோம்

நாம் இழந்தது தேசமெனில்
அவர் இழந்ததும் தேசம்தான்
நாம் இழந்தது உரிமையெனில்
அவர் இழந்ததும் உரிமைதான்
நாம் இழந்தது சமத்துவமெனில்
அவர் இழந்ததும் சமத்துவம்தான்
நாம் இழந்தது நீதியெனில்
அவர் இழந்ததும் நீதிதான்
நாம் இழந்தது சுதந்திரமெனில்
அவர் இழந்ததும் சுதந்திரம்தான்.

நாம் எழுந்ததே உரிமைக்காய்
நாம் எழுந்ததே நீதிக்காய்
நாம் எழுந்ததே சுதந்திரத்திற்காய்
நாம் எழுந்ததே கொடுமைக்கெதிராய் ;எனில்
நாம் இப்போது புரிவது என்ன ?

யாரும் எதிர்பாராக் கொடுமை
யாரும் எதிர்பாராக் கோரம்
சொல்க!... சொல்க...
இப்போ சொல்க..
யார் எதிரிகள் ?
யார் துரோகிகள் ?


விட்டகன்ற மக்களின் உடமைகள்
அனைத்தும் ஏலத்தில் விடப்பட்டதாம்
யாரிடத்தில் சொல்வது?
யாரைக் கேட்பது?
மௌனித்தனர் மக்கள்
பேசுகவெனில் பேசும் ஓர் மொழிமட்டுமே அங்குண்டு
நிர்க்கதியாகினர் மக்கள்
விதியெனப் படைத்தவர் ஆண்டவர் இல்லை
விதியைப் படைத்தவர் எம்மவர் ஆகினர்
அயலவன் நெருப்பானான்
அகதி முகாங்களுக்குள் முடங்கியது வாழ்வு

மௌன மொழியுடன் எத்தனை நாள் வாழ்வோம்?
மௌனம்தான் மொழியெனில்
எங்கும் மானிடம் வீதியில் புதையும்
என்பதை உணர்வேன்.

இன்றே சொல்வோம்
எம்மவர் அவர்கள்
மனிதர்கள் ஆயின் மனிதரை மதிப்போம்
மனிதர்கள் நாங்கள் கொடுமையை மறுப்போம்

[illegible]

# சூரியனுக்கும் வெட்கமில்லை



காகங்கள் கரைய
சூரியன் எழுகின்ற
தேசம்.

காகங்களின் கூடுகளில்
குயில்கள் முட்டையிடுகின்றன.

குயில்கள் பாடி
எறும்புகளின் தூக்கத்தை
கெடுத்ததற்காக
காகங்களின் கூடுகளை
பிடுங்கினர்
தீயை வளர்த்து
எரித்து
சாம்பலைக் கொண்டு
கடலினில் கொட்டினர்.

காகங்கள் அலறின
குயில்கள் கூடி சத்தமிட்டன
வண்டுகள் குமுறின.
பூமி
அமுக்கம் கூடியது
பருத்து
எந்த நேரமும்
எந்தப் பக்கமுமாய்
வெடிக்கலாமெனப் பயந்தனர்.

மனிதர்களின் நிலையே
பரிதாபமானது
சாப்பிடுவதற்காக
மூன்று தடவைமட்டும்
வாயைத் திறக்கலாமென்றாகியது.

கொடுமை என்று சொல்லி
ஒருத்தி
கொள்ளி வைத்துக் கொண்டாள்.

கொட்டாவி விடுவதற்குமாய்
ஒரு தடவை
அநுமதி வேண்டியவன்
பனை மரத்தினடியில்
வேர்களின் முனைகளில்
சிதறிப் போயிருந்தான்.

மூன்று தடவையை சாத்தியமாக்க
மூளையைக் கழற்றி
கழுசானுக்குள் திணித்துக்
கொண்டான்
ஒருவன்,

காட்டுக்குள் இருந்த
விலங்குகளெல்லாம்
நகருக்குள் புகுந்தன.
மனிதர்களைத் தழுவி
முத்தமிட்டன
ஆடின, பாடின
மகிழ்ந்து போயின.
பள்ளி வாசல்களில்
அரசமர கிளைகளில்
முதிரையும் வீரையும்
முற்றி விளையும்
நிலங்களின் பரப்புகளில்

நாறிக்கிடந்த பிணங்களை
மனிதரும் விலங்குகளுமாய்
குந்தியிருந்து சாப்பிட்டன.

கரடியின் முதுகை
சொறிந்து கொடுத்தானொருவன்.
கழுதையின் முலைகளில்
மகிழ்ந்தான் மற்றவன்.
பன்றிகளோடு புணர்ந்து
களைத்தான் இன்னொருவன்.

பொன்நொச்சி மலர்கள்
விரியப் பாடிய
வண்ணத்துப் பூச்சிகளை
ஒவ்வொன்றாகப் பிடித்து
இறக்கைகளைப் பிய்த்து
கோர்த்து அணிந்து
எறும்புகள் நடனமாடின.

சூரியன்
கோவணம் கூட கட்டவில்லை
கதிர்களைக் கழற்றி
நிலத்தில் எறிந்துவிட்டு
வானத்தில் ஏறி
நிர்வாணமாய் நிற்கிறான்.

மனிதர்களைப் போலவே
சூரியனுக்கும் இப்போ
வெட்கம் என்பதேயில்லை

—செழியன்—

www.tamilarangam.net

# பகைமைத் தீ எங்கிருந்து வந்தது?

நீலக்கடலின் வெள்ளியலைகள்
மௌனமாய் அழுகின்றன
ஈழ மாதாவின் சேலைதனிலே
காட்டுப்புழுக்கள் குப்புற
விழுகின்றன

நெருப்பில்லா அடுப்பினில்
சிரட்டையில் சோறு சமைத்து
மணல்வீடு கட்டி
மகிழ்ந்திருந்த நாட்களில்
மறக்கவும் முடியுமா மர்லியா!

பசுமை நிறைந்த நெஞ்சுக்குள்
பகைமைத் தீ எங்கிருந்து வந்தது
முக்காடு இட்டு நிலம் பார்த்து
நடந்தவளே!
அகதி முகாமின் கதவுகள்
உனக்காக திறந்தது ஏன்?

நள்ளிரவில் வடக்கினிலே
வானம் சிவந்தால்
தெற்கிலே எங்கள் வீடு
தீப்பற்றி எரியும்

அகதியாய் ஓடுகையிலே நேசக்கரம்
நீட்டி
அடைக்கலம் தந்த என் அன்பு
ஜீவன்களே!
இன்று அடிவானம்
தீப்பற்றி எரிவதேன்?

இரவின் விம்மல்களுடன்
நீங்களும் அகதிகளாய் ஆனீர்களோ!
முக்காடிட்டு முகாரிக்கு
துணை போனீர்களோ!

நித்தமும் பௌர்ணமி
இல்லையடி மர்லியா

அல்லாவின் அணைப்பு உனக்கு
உண்டு என்பதை மறவாதே
கறைபடிந்த எல்லையிலே
நடைபயின்றவளே
உன் குடிசை மீண்டும்
உனக்கு கொடுக்கப்பட வேண்டும்
எல்லைவரை
தொல்லையிருந்தால் என்ன?
ஏர் பிடித்து நீயும்
வாழ்ந்திட வேண்டும்

மரணிக்கப்பட்ட மனிதநேயம்
உயிர்ப்பிக்கப்பட வேண்டும்
என தொழுகையிலே நீ கேள்!

ஈழ மாதாவின் வேதனைப்புண்கள்
மாறிட வேண்டும்
என தொழுகையிலே நீ கேள்

நெஞ்சத்து சுமையை
ஓலைப்பாயினிலே இறக்கி வைத்து
ஓய்ந்துவிட வேண்டுமடி
உன் துயரங்கள்

விழிகளின் விளிம்பில்
கசிகின்ற கண்ணீர்
காய்ந்திட வேண்டும்

எல்லைக்கதவுகள் மீண்டும்
திறந்திட வேண்டும்
திரை நீக்கிக் கறை கழுவி
நீயும் அங்கே தொழுதல் வேண்டும்

தேசத்தை தொலைத்து வந்த
தேதியை மறந்து போனோம்
நீ துரத்தியடிக்கப் பட்டு
மூன்றாண்டுகள்
ஓடி மறைந்து விட்டதடி

உலகுதான் என்ன செய்து விட்டதடி
உனக்கு!
அழிந்திடும் உயிர்களின்
எண்ணிக்கையை மட்டும் அழகாக
புள்ளிவிபரம் இடமட்டும்
பழகிக்கொண்டதடி

தனக்கு நிகர் யாருமில்லை
என எண்ணுபவர் எல்லாம்
உன்துயர் எண்ணிட வேண்டுமடி

புதியதோர் வழி அமைத்திட
வேண்டும்
அங்கே வாழ்கைக் கதவுகள்
திறந்திட வேண்டுமடி

நீ உரிமைகளுடன் வாழ
வழிவகுக்க வேண்டும்

அசோகவனத்தில் சிறை
வைக்கப்பட்ட சீதை போல்
அகதிமுகாமுக்குள்
நீயும் ஒரு அனாதையடி
நீயும் அகதியாய் ஆனதில்
நியாயங்கள் இல்லையடி
ஆண்டாண்டு காலங்களாய்
வாழ்ந்த மண்ணிலே
வாழ்ந்திட வேண்டும்!
வளர்ந்திட வேண்டும்!

மனிதநேயங்கள் உள்ளவர்களே
ஒன்றாய் குரல்கொடுங்கள்!
மீணடும் அவர்கள் வடக்கினிலே
குடியேற குரல்கொடுங்கள்!

ஜி. மொனிக்கா

www.tamilarangam.net

# முஸ்லீம் மக்கள் குறித்து



இலங்கையில் வாழும் தமிழ்பேசும் முஸ்லீம் மக்கள் தனிப்புடைய மத, கலாச்சாரப் பண்புகள் கொண்ட ஒரு இனக்குழு என்பதனையும், தமிழ்தேசிய அமைப்பில் அவர்கள் இணைபிரியாத அங்கமாக அமையப் பெற்றுள்ளனர் என்பதனையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அங்கீகரிக்கின்றது. தமிழரின் பாரம்பரிய பூமியாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழீழம் முஸ்லீம் மக்களது தாயகம் என்பதையும் எமது இயக்கம் ஏற்றுக் கொள்கிறது.

வட கிழக்கு பிரதேசத்தில் வாழும் தமிழர்களும், முஸ்லீம்களும் பொதுவான தாயகத்தையும், பொதுவான மொழியையும், பொதுவான பொருளாதார வாழ்வையும் பொதுவான நலன்களையும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதம் ஒன்றிணைந்த சமூகப் பொருளாதார வாழ்வு காரணமாக ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் தங்கியிருப்பதால் தமிழரும் முஸ்லீம் மக்களும் ஒன்றுபட்ட சக்தியாக ஒருங்கு சேர்ந்து தமது உரிமைக்காக போராடுவது அத்தியாவசியமானதாகும். முஸ்லீம் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால், தமது நலன்களை அடைந்து நல் வாழ்வு காண வேண்டுமென்றால், முக்கியமாக, தமது இன, மத, கலாச்சார தனித்துவத்தைப் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்றால் தமிழருடன் ஒன்றுபட்டு வாழ்ந்து, தமிழருடன் ஒருங்கிணைந்து போராடுவதே சாலச்சிறந்ததாகும்.

தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து, தமிழ் தேசிய ஒன்றியத்தினை சிதறடிக்கும் நோக்கத்துடன் சிங்கள இனவாத அரசானது தமிழர் முஸ்லீம் மக்கள் மத்தியில் கலவரத்தை தூண்டிவிடும் நாசகார முயற்சிகளில் ஈடுபட்டு வருவதோடு எமது பொதுத்தாயகப் பூமியையும் படிப்படியாக விழுங்கிவருகிறது. பொதுவான எதிரியையும், பொதுவான இலட்சியங்களையும் எதிர்கொள்ளும் தமிழ் முஸ்லீம் மக்கள் தமது தனித்துவத்தையும் சுதந்திரத்தை நிலைநாட்ட ஒன்றுபட்டுப் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை.

எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்து தமிழீழத் தனியரசை அமைப்பதுதான் தமிழ் முஸ்லீம் மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையுமென எமது விடுதலை இயக்கம் உறுதியாக நம்புகிறது. அமையவிருக்கும் சுதந்திரத் தமிழீழத்தில் முஸ்லீம் மக்களின் பாதுகாப்பிற்கும், சம உரிமைகளுக்கும், நல்வாழ்விற்கும், பொருளாதார சுபீட்சத்திற்கும் நாம் உத்தரவாதம் அளிப்பதோடு, முஸ்லீம்களின் மத, கலாச்சாரத் தனித்துவம் பேணிப்பாதுகாக்கப் படுமெனவும் உறுதியளிக்கிறோம்.

**சோசலிச தமிழீழம்**

விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத்திட்டம்

அரசியல் பிரிவு

தமிழீழ விடுதலைப்புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இஸ்லாமிய மக்கள்.......

இஸ்லாமிய மக்களின் தாய்மொழி தமிழாயினும், இவர்கள் இறுக்கமான மதம், பண்பாடு போன்ற பண்புகளைக் கொண்டுள்ள சமூகமாக விளங்குகின்றார்கள். அனைத்துத் தமிழ் மக்களைப் போல் இஸ்லாமிய மக்களும் சிங்கள இனவாத அரசின் ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டின் நீண்டகால அரசியல்ப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்துள்ள இஸ்லாமிய மக்கள் தமக்கெதிரான ஒடுக்கு முறைகளுக்கெதிராக போராடாதமை துர்ப்பாக்கியமே. இதற்கு இஸ்லாமிய தலைமைகளின் முதலாளித்துவ வர்க்க தாபனமே பெரிதும் காரணமாகும். அத்துடன் நாடாளுமன்றத் தமிழ் தலைமைகளும் — இஸ்லாமிய தலைமைகளின் சந்தர்ப்பவாதப் போக்கை சாதகமாகக் கொண்டு இஸ்லாமிய சமூகத்தையே புறக்கணித்து அரசியல் நடாத்தி வந்துள்ளார்கள். இஸ்லாமிய மக்களை அவர்களது சொந்தச் சிக்கலுக்கூடாக அணிதிரட்டாததும் குறிப்பிடத்தக்கது. இதனால் சிங்கள இனவாத அரசிற்கெதிரான போராட்டத்தில் தமிழ் இஸ்லாமிய நல்லுறவு கடந்த காலங்களில் முறையாக முன்னெடுக்க முடியாமல்ப் போயிற்று. அத்துடன் இஸ்லாமிய மக்கள் தொகையில் 60 வீதம் தமிழீழ நாட்டிற்கு அப்பால் வாழுகின்ற நடைமுறைச் சூழ்நிலை காரணமாக தமிழ்மக்களின் போராட்டத்துடன் இஸ்லாமிய மக்கள் தம்மை இணைக்கத் தயங்குகிறார்கள்.

எனினும் இன்று தமிழ், இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஏற்படும் புதிய தலைமைகள், சிங்கள இனவாத அரசிற்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டம் அவசியம் என்பதுமே தெளிவாக உணர்த்தி வருகின்றனர்.

**இஸ்லாமிய மக்கள் குறித்து எமது நிலைப்பாடானது.**

1. இஸ்லாமிய மக்கள் இந்நாட்டின் எப்பகுதியிலும் சிங்கள இனவாத அரசிற்கெதிராக தமது தனித்துவத்தையும், விடுதலை உரிமையையும் நிலைநாட்ட நடத்தும் எவ்வகைப் போராட்டத்திற்கும் நாம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம்.

2. சிறீலங்காவில் வாழும் இஸ்லாமிய மக்கள் சிங்கள இனவாத அரசின் அடக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாம் முழுமையாக உதவுவோம்.

3. சிறீலங்காவில் வாழும் இஸ்லாமிய மக்கள் சிங்கள இனவாத அரசிற்கெதிராக சிறீலங்காவின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து, அங்கு ஒரு சமூகவுடமைப் புரட்சியை ஏற்படுத்துவதில் பின்னிற்கக் கூடாது. இஸ்லாமியர்களின் தனித்துவமான போராட்டங்கள் அவர்களை சிறீலங்காவின் முற்போக்குப் போராட்டங்களிலிருந்து தனிமைப்படுத்தும் நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது. எனவே முற்போக்கு ஆற்றல்களை சிறீலங்காவில் இனங்கண்டு அவர்களுடன் இணைந்து போராட முன்வரல் வேண்டும்.

4. தமிழீழத்தில் வாழும் இஸ்லாமிய மக்கள் தமிழீழப் போராட்டத்தில் இணைந்து போராட வேண்டும். இஸ்லாமிய மக்களின் தனித்துவம், அவர்களது மத வழிபாட்டுக் கலாச்சார உரிமைகள் யாவும் தமிழீழத்தில் பாதுகாக்கப்படு[illegible] தமிழீழத்தில் எத்தகைய பாகுபாட்டிற்கோ அ[illegible] ஏற்றத்தாழ்வுகளுக்கோ எந்த மக்களும் உட்படுத்[illegible] மாட்டார்கள்.

5. தமிழீழத்திலுள்ள இஸ்லாமிய மக்களுடனான தமது தொடர்புகளையும் உறவுகளையும் வளர்க்க உரிமையுடையவர்களாவார்கள்.

6. சிறீலங்காவில் பரந்து பட்டு வாழும் இஸ்லாமிய [illegible] தங்கள் பாதுகாப்புக் கருதி சிறீலங்காவிலோ, அ[illegible] தமிழீழத்திலோ இஸ்லாமிய மக்கள் அதிகமாக [illegible] பகுதிகளில் குடியேற வேண்டும். இம் மக்களின் உ[illegible] உடமைக்காப்பிற்கு இது அவசியமாகும். தமிழீழத்[illegible] இவ்வாறான குடியேற்றங்களிற்கு புத்தளம், அம்பாறை போன்றவை தகுந்த பகுதிகளாக நாம் கருதுகின்றோம்.

**மேலாதிக்கத்திற்கு எதிராக முற்போக்குச் சக்திகளுடன் ஒன்றிணைந்துமக்களின்விடுதலையை வென்றெடுப்போம்**

**P.L.O.T** செய்தி — தொடர்புத் திணைக்களம் 01 — 01 — 1985

www.tamilarangam.net

3ஆம் பக்கதொடர்ச்சி.........

வெளியீடு. இப்படியான சூழலில் இயங்கும நிலையத்தின் இது போன்ற குறைபாடுகள் 100வீதம் திருத்தியமைப்பது நடைமுறைப் பிரச்சனையானது.ஆனாலும் தேடலின் வெளியீடு என்பது மேலும் ஊக்கப்படுத்தப்படுவது இச்சூழ்நிலையில் கூடத் தவிர்க்க முடியாதது. எனவே அடுத்த இரண்டு தேடல்களை குறுகிய கால இடைவெளியில் வெளியிட்டதன் பின்னர் தொடர்ச்சியான காலஇடைவெளி நிர்ணயிக்கப்படும். செந்தாமரைக்கான பதில் விமர்சனத்தின் போக்கானது சற்றுக் கடுமையானதுதான் என்பதனை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை அப் போக்கானது தவிர்க்க முடியாததாக அமைந்துவிட்டது. ஏனெனில் செந்தாமரையில் கலைவிழா பற்றிக் கூறப்பட்டவை விமர்னமாக இருக்கவில்லை.

எம்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியால் எம்மை மட்டுமல்லாது விழாவில் பங்கெடுத்த கலைஞர்கள், ஆதரவாளர்கள் மீதும் (சிங்களப் பாடகி, நாட்டிய நாடகப பெண் கலைஞர்கள்) பொய்ப்பழி சுமத்தப்பட்டது. எனவேதான பதிலும் உண்மையினை வெளிக்கொணரும் வகையில் அமைந்தது. அதனைச் சரியென்றே நிரூபிக்கும் வகையில் மீண்டும் 3.8.93 செந்தாமரையில் வெளிவந்த சிறீஸ்கந்தனின கட்டுரையும் அமைந்தது.

***மற்றும் கிட்டுவின் மத நம்பிக்கை பற்றியது.*** தமிழ்த் தேசிய வாதம் தன்னை மொழி சார்ந்ததாகவே அறிமுகப் படுத்தியது. மதம் சார்ந்ததாக இருக்கவில்லை. காலப்போக்கில் புவித தேசிய வாதமானது யாழ்ப்பாண மேல்நிலை வர்க்கத்தின குணாம்சத்தைத் தனதாக்கியது. இந்த மேலான சைவ வேளாளர்சுபாவமானது முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு உதவி செய்தது. இவ்வகையான யாழ்ப்பாண சுபாவத்தை கிட்டு போன்றோர் தங்களை நிலை நிறுத்தப் பயன்படுத்தினர். இதன் வெளிப்பாடே சகாக்களுடன் கூட்டாகச் சென்று கோவிலில் அரிச்சனையும், அதனையே அழகாகப் படம பிடித்து பிரசுரித்தமையுமாகும் இக் குணாம்சத்தினை வெளிப்படுத்தவே அப்படத்தை நாம் பிரசுரித்தோம் கிட்டுவின மறைவையொட்டிய காலகட்டத்தில் பெரும்பான்மையான தொடர்பு சாதனங்கள் கிட்டுவை மாமனிதனாகக் காட்டுவதையே பணியாகக் கொண்டன. இவை கிட்டுவின மறுபக்கத்தை,மறுக்கப்பட்ட உண்மைகள் பலவற்றை மறைத்தன. இதனால்த்தான்அவைகளைக் கூறவேண்டி யேற்பட்டது. மற்றைய அமைப்புக்களில் அராஜகம் புரிந்த பிரதானமானவர்களைப் பற்றியும், மற்றைய அமைப்புக்களின் துரோகங்களைப் பற்றியும் தேடலும், நிலையமும் கடந்த காலங்களில் வெளிப்படுத்தியே வந்துள்ளன. ஆனால் இக்காலகட்டத்தில் இதுதான் அவசியமானது.

தமிழ்நாடு மாக்சிய லெனினிய கட்சியின் அறிக்கையை தமிழ்நாட்டிலிருந்து தேடலில் பிரசுரிப்பதற்காக அங்குள்ள பத்திரிகையின் செய்தியாக அக்கட்சியினால் அனுப்பிவைக்கப பட்டது. இந்தியாவின் அரசியல் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் அரசியலானது இலங்கையின் அரசியலுடன நெருக்கமான தொடர்புடையது என்ற அடிப்படையிலுமே அவ் அறிக்கை பிரசுரிக்கப்பட்டது.

மற்றும் தேடலானது எமது இருப்பைத் தக்கவைத்துக கொள்வதற்காக வெளிவிடப்படவில்லை. ஒரே கருத்துள்ளவர்கள் ஓர் அரசியல் பின்னணியினை அடிப்படையாக வைத்து வெகுஜன அமைப்பாக இயங்கும சாத்தியம் இலகுவானது. ஆனால் பல கருத்துக கொண்டவர்கள் ஓர் வெகுஜன அமைப்பாக இயங்குவது நடைமுறைக் கடினமானது. ஆனால் எந்த சரியான அரசியல கருத்துக்கான அமைப்பும் பலமற்ற இக்கால கட்டத்தில் இவ்வகைப்பட்ட வெகுஜன அமைப்புக்கள் தவிர்க்கவியலாத முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. மேற்கூறிய நடைமுறைக் குறைபாடே பிரதானமாக எமது வேலைகளின் தேக்க நிலைக்குக் காரணமாகும். எனவே வேகமற்ற இயக்கம் என்றால் அதன் கருத்து தனது இருப்பைத் தக்கவைத்துக கொள்வது என்று எல்லா நிலைகளிலும் சரியாகாது.

**உண்மையில் கனடிய சூழ்நிலையில் உள்ள பிரச்சனைகள்** தேவையான அளவு வெளியாகாததன் காரணம் அவற்றுக்கான தொடர்புகள் எமக்குக் கிடைக்காததுதான் காரணம். சமூகப்பிரச்சனைகளுக்கு அரசியல் பின்னணிதான் பிரதான காரணம். எமக்கு கனடிய அரசியல் பற்றிய மேலோட்டமான அறிவேயுண்டு. தொடரும் காலங்களில் இதனை நிவர்த்தி

4ம்பக்கத்தொடர்ச்சி.............

தமிழ்ப் பத்திரிகைகள் வெளிகொணர்ந்தன எந்தவித சமூகப்பொறுப்புணர்ச்சி இல்லாத பத்திரிகைத் தன்மையின் வெளிப்பாடுகளே இவை. இவர்களின் சமூகபொறுப்புணர்ச்சிக்கு சிகரம் வைக்கும் செய்திகளும் வெளிவரும் யார் மூத்ததமிழ்ப்பத்திரிகை? யார் விற்பனையில் முன்னணி ? தமிழ்மக்களிற்கு தேவை அதிலும் தமிழ்பெண்களுக்கு தேவை மூத்ததமிழ்ப்பத்திரிகையல்ல முதுகெலும்புள்ள பத்திரிகை ஆனால் **4..2.94** அன்று 2மணியளவில் அருந்ததிக்கு ஆறுவருட சிறைத்தண்டனை கிடைத்தது எண்ணிக்கையில் **10**தமிழ்மக்களும் சில வேற்றுநாட்டவரும் பார்வையாளர்களாக அமர்ந்திருக்க இது நடந்துமுடிந்தது. சிலர் அழுதனர், சிலர் மனதிற்குள் குமுறிக் கொண்டனர். இவைஎல்லாம் பழிதீர்க்குமா? தமிழ்பெண்கள் 'ஆண்ஆதிக்கத்திற்கு எதிராக ஸ்தாபனபட—ாததின் விழைவுகளே இவை. சட்டத்திற்குள் தேடப்படும தீர்வுகளில் முடிவுகள் பக்கசார்பாகவே இருக்கும். தங்களது மரபுகளை தகர்த்து தமிழ்பெண்கள் ஆண்ஆதிக்கத்திற்கு எதிராக ஸ்தாபனப்படுதலும் இங்குள்ள பெண்விடுதலை இயக்கங்களுடன் ஐக்கியப்பட்ட போராட்டங்களையும முன்னெடுப்பதுமே இங்கு தமிழ்பெண்கள் மத்தியில் சரியான புறநிலையை ஏற்படுத்தும். அதே வேளை அவர்களின் எதிர்கால வாழ்வியலையும் தீர்மானிக்கும்

www.tamilarangam.net

# ....தடைகளையும்மீறி



தன் பிள்ளைகளை எலும்புச் சாக்குகளில் தேடும் பரிதாபக் காட்சி

## மௌனமும் மரணமும்

ஆயுதங்கள்
மனிதனை விட
போற்றப்படுகையில்
ஆட்களின் அடையாளங்கள்
அறியாமல்
துப்பாக்கிகள் வெடிக்கையில்
நண்பா!
நீயும் என்ன?
நானும் என்ன?
நீதியும் சேர்ந்தே
மௌனிப்போம்
சிலவேளை மரணிப்போம்
எமது மௌனம்
எமது மரணம்
என்றைக்காவது ஒரு நாள்
பெரிதென மதிக்கப்படுகையில்
அவர்கள் முகமிழந்து போவார்கள்
நாம்
உயிர்த்தெழுந்திருப்போம்
புதிய எச்சங்களாய்!

வி. மைக்கல் கொலின்.